ஆசிரியர்:
கா. சி. வேங்கடரமணி.

காரியாலயம்:
43, மஹாதானத்தெரு, மாயவரம்.

மாத வெளியீடு.

வருஷச் சந்தா: உள்நாடு ரூ. 3. வெளிநாடு ரூ. 5.

மாலை 7	JUNE 1942, சித்திரபானு ஆனி	முத்து 6

பொருள் அடக்கம்.

விசுவாமித்ரரும் வஸிஷ்டரும்	....	நா. ரகுநாதன்	194
சதுரங்கம்	....	S. குஞ்சிதபாதம்	203
ஓர் புதிய பாஸ நாடகம்		ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ.,பி.எல்.	214
நய இந்தியா		கா. வே. ஸ்ரீனிவாஸன் (M.Sc. Tech.)	220
அரிசி	....	ஆ. வே. ஜெயராமன்	228
புலவரும் உவமையும்	....	அ.வி. மயில்வாகனம் B.A.(Lond.)	233
அவசியம் தெரியவேண்டும்	....	முராரி	236
உதிர்ந்த மணிகள்	....		239

"பாரதமணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

*விசுவாமித்ரரும் வஸிஷ்டரும்.

நா. ரகுநாதன்.

एष विग्रहवान् धर्मः एष वीर्यवतां वरः ।
एष विद्याधिको लोके तपसश्च परायणम् ॥

இது ரிஷிவாக். "யக்ஞத்தைக் கெடுக்கும் ராக்ஷஸர்களை விரட்டி அடிப்பதற்காக என்னுடன் ராமனை அனுப்பும்" என்று தசரதச் சக்கரவர்த்தியை விசுவாமித்திரர் வேண்ட, பிள்ளையிடத்திலுள்ள வாஞ்சையால் அவர் தன் பிரதிக்ஞையை மீறி 'மாட்டேன்' என்று சொல்லுகிறார். மகர்ஷிக்குக் கோபம் வந்துவிடுகிறது. உலகம் நடுங்குகிறது. அந்த ஸமயம் குலகுரு வஸிஷ்டர், "ராஜன், கலங்கவேண்டாம். விசுவாமித்திரர் பிரபாவம் எல்லையற்றது. இவர் தர்மமே அவதாரம், வீர்யம் வாய்ந்தவர்களில் சிரேஷ்டர், வித்தையில் உலகத்திலேயே யாரும் இவருக்கு நிகரில்லை, தபசுக்கே இவர் இருப்பிடம். ராக்ஷஸர்களை நிக்ரகம் பண்ணப் பிறர் ஒத்தாசை இவருக்கு வேண்டியதில்லை. உமது பிள்ளைகளின் க்ஷேமத்தைக் கோரியே அவர்களை அழைக்கிறார். கவலைப்படாமல் அனுப்பும்" என்று உபதேசிக்கிறார். தசரதரும் இதைக்கேட்டுப் பிரஸன்னமாய் அனுப்புகிறார்.

இந்த இடத்தில் நமக்கு ஒரு சின்ன ஸந்தேகம் ஏற்படலாம். வஸிஷ்டரால் மெச்சப்பட்ட குணங்கள் வாய்ந்த மகர்ஷிக்குக் கோபம் வரலாமா? விசுவாமித்திரர் பழய விசுவாமித்திரராகவே யல்லவா இருக்கிறார் போலிருக்கிறது. அவரைக்கண்ட மாத்திரத்தில் அரண்மனை வாசற்காப்பார்கள் காட்டும் பரபரப்பை பாருங்கள். அவர் கோபத்தின் மகிமை அவர்கள்வரையில் எட்டியிருப்பது போலல்லவா தெரிகிறது. ஆனால் விசுவாமித்திரர் வார்த்தைகளை ஆராயுங்கால் இந்த சந்தேகங்களுக்கிடமில்லையென்று விளங்கும். பிரும்மாதிகளால் போற்றப்பட்ட அவர், "காதி பிள்ளை கௌசிகன் வந்திருப்பதை ராஜாவுக்குத் தெரிவியுங்கள்" என்று எவ்வளவு அடக்கமாய்த் தன்னைத் தெரிவித்துக் கொள்கிறார்! ராஜா, "யாகத்தைக் கெடுக்கும் ராக்ஷஸர்கள் யார், எவ்வித பலமுள்ளவர்கள்," என்றெல்லாம் கேட்பதற்கு எவ்வளவு பொறுமையாய் பதிலளிக்கிறார்! கடைசியில் "நிச்சயமாய் நான் ராமனை அனுப்பமாட்டேன்" என்று தசரதன் அதர்மமாய்ப் பிடிவாதம் பண்ணும்போதும், அவரிடத்தில் ஆக்கிரப்பட்டு சாபத்தை விடுக்காமல், வருத்தமே தொனிக்க, "சொன்னவார்த்தையை மீறி நடப்பது உன் குலத்திற்கழகல்ல. இது உனக்கு நியாயமாய்த் தோன்றும் பக்ஷத்தில் பிரதிக்ஞையைப் பொய்யாக்கிவிட்டுச் சுற்றத்தாருடன் சுகமாக வாழ்" என்றுதான் சொல்லுகிறார். "உன் மனச்சாக்ஷி உன்னை ஹிம்சிக்கப்போகிறதே யொழிய நான் உன்னை யொன்றும் செய்யப்போவதில்லை" என்றே விளக்குகிறார். இந்த வார்த்தைகளில் தொனிக்கும் கோபத்திற்கும் நாம் சாதாரணமாய்க் கோபம் என்று சொல்லும் மன விகாரத்திற்கும் சம்பந்தமேயில்லை. விசுவாமித்திரர் கோபம் தன் நலத்தை நாடினதல்ல. அகங்காரமற்றது. காரியத்தை ஸாதிக்கிறது. லோக க்ஷேமத்தைச் செய்யும் பெரிய கருவியாக அவருக்கு உபயோகப் படுகிறது.

அவருடைய நிஜ ஸ்வபாவம் ஸ்ரீ ராம லக்ஷ்மணர்களை அழைத்துக்கொண்டு

* சென்ற பங்குனி மாதம் ஸ்ரீராமநவமி அன்று சென்னை ஸம்ஸ்கிருத ஸேவா ஸமிதியின் சார்பில் நடந்த வால்மீகி தினக் கொண்டாட்டத்தில் உபந்நியசிக்கப்பட்டது.

வெளிப்பட்ட தக்ஷணமே அந்தக் குழந்தைகளுக்கு நன்கு புலப்படுகிறது. பசி தாகத்தை யொழிப்பனவும் **सर्वज्ञानस्य मातरौ** என்று பிரஸித்திபெற்றனவுமான பலை, அதிபலை என்ற மந்திரங்களை ஸ்ரீ ராமனுக்குபதேசிக்கும்போதே அவருடைய மகிமையையும் அவருக்கு உலகத்தில் ஏற்படப்போகும் பெருமையையும் கண்டு ரிஷி மகிழ்கிறார். தாடகையை வதம்பண்ணி, மேலான வித்தைக்குத் தான் அதிகாரி என்று ஸ்ரீராமன் காட்ட, உடனே பதினாயிரக்கணக்கான வருஷங்களாய் தான் வெகு பாடுபட்டுச் சம்பாதித்து வைத்திருந்த அஸ்திர சஸ்திர வித்தைகள் அனைத்தையும் ரிஷி ராமனுக்குக் கற்றுக்கொடுக்கிறார். இவ்வித ஔதாரியத்தோடு பிரர்மனதைக் கவரும்படியான வெகு குணங்கள் அவரிடத்திலிருப்பதைத் தன் முன்னோர்களைப் பற்றி அவர் சொல்லும் சில வார்த்தைகளிலிருந்தே ஸ்ரீராமன் கண்டுகொள்ளுகிறார். குசநாபருடைய நூறு பெண்களை வாயுபகவான் பலாத்காரமாயடைய முயன்றதைச் சொல்லுமிடத்தில் அந்தப் பெண்களின் எல்லையற்ற பொறுமையை யன்றோ ரிஷி சிலாகிக்கிறார். ஸ்ரீராமன் ஸஹாயத்தால் விக்னமில்லாமல் யாகம் முடிவடைந்த பிறகு வடக்கே ஹிமாலயத்தின் அடிவாரத்தில் கௌசிகீ நதிதீரத்தில் உள்ள தன் ஆசிரமத்திற்குத் திரும்பிப் போவதாய்த் தான் தீர்மானித்திருப்பதை ராமனுக்குத் தெரிவிக்கும்போது அதற்கவர் சொல்லும் காரணம் கவனிக்கத்தகுந்தது.

ततोऽहं हिमवत्पार्श्वे वसामि निरतः सुखम् ।
भगिन्यां स्नेहसंयुक्तः कौशिक्यां रघुनन्दन ॥

எல்லாப்பற்றுகளும் அற்ற மகர்ஷிக்கு லோகஹிதத்திற்காக ஸ்வர்க்கத்தைத் துறந்து பூமியில் மகாநதியாய் பிரவாகித்த தன் தமக்கை கௌசிகியிடத்தில் மட்டும் பற்றுவிடவில்லையாம். இதிலிருந்தே விசுவாமித்திரருக்கு ஸ்ரீராமனிடம் ஏற்பட்ட அவ்யாஜமான அன்பிற்குக் காரணத்தை நாம் ஒருவாறு ஊகிக்கலாம். **अहं वेद्मि महात्मानम् रामं सत्यपराक्रमं** என்று ராஜாவிடத்தில் அவர் சொல்லும்போதே பாம்பின் கால் பாம்பிற்கே தெரியுமென்றபடி "லோகரக்ஷணத்திற்காக வந்திருக்கும் ஸ்ரீராமனை அந்த ஒரு நோக்கத்தோடே கர்மாவைச் செய்து வரும் நான் அறிவேன். அவன் உண்மை சொரூபத்தை யவனுக்கு ஞாபகப்படுத்தி, அவனுடைய காரியம் கைகூடுவதற்கு வேண்டிய பராக்கிரமத்தை யவன் உள்ளத்தில் தட்டி யெழுப்பி, அவன் கடைப்பிடிக்கவேண்டிய தர்மத்தையும் விளக்கிவிட்டால் என் வேலை முடிந்துவிடும். நான் ஸங்கல்பமற்றவனாயும் முக்தனாயுமாவேன்" என்று அவர் சொன்னதாகவே வஸிஷ்டாதிகள் தெரிந்துகொண்டிருக்கவேண்டும்.

விசுவாமித்திரர் ராமனை எதற்காகத் தேடினார். தான் செய்யக்கருதின யக்ஞம் பூர்த்தியாகாதபடி பலதடவைகள் அதைக்கெடுத்த மாரீசன் ஸுபாகு முதலிய ராக்ஷஸர்களை தொம்ஸம் செய்யும்படி அவரை வேண்டுகிறார். "தங்களாலாகாத காரியமுண்டா, வேண்டுமானால் இந்த ராக்ஷஸர்களை நீங்கள் கோபாக்னியால் பொசுக்கிவிட முடியாதா?" என்று அரசன் கேட்கலாமென்று சந்தேகித்து அப்படிச்செய்ய முடியாத காரணத்தைச் சொல்லுகிறார்.

न च मे क्रोधमुत्स्रष्टुं बुद्धिर्भवति पार्थिव ।
तथाभूता हि सा चर्या न शापस्तत्र मुच्यते ॥

"கோபத்தைக்காட்ட எனக்கு மனம் வருவதில்லை. இந்த யக்ஞம் அப்பேர்க்கொத்தது. அதில் பிரவர்த்திருக்கும் நான் சாபத்தைக் கையாளக்கூடாது" என்று சொல்லுகிறார். இந்த தர்மசங்கடத்தில் தான் **कृतश्रमो निरुत्साहः** என்று "பட்ட சிரமம் வீணானதால் உத்ஸாகமிழந்து அந்த இடத்தைவிட்டு வெளியேறிவிட்டேன்" என்கிறார். இது ஒரு ஆச்சர்யம். அஸாத்யமான எவ்வளவோ காரியங்களில் இறங்கி, மலை போன்ற விக்னங்கள் ஏற்பட்டும் அவைகளை லக்ஷியம் பண்ணாமல் உத்தேசத்தை முடித்தே தீருவார் என்று பிரசித்திப்

பெற்றவர் விசுவாமித்திரர். ப்ரும்மரிஷி பதவியைத் தன் முயற்சியாலேயே அடைந்தவரல்லவா? இவ்வளவுக்கும் காரணமென்ன? அவருடைய ஓய்வில்லாத உத்ஸாகம்தான். அந்த உத்ஸாகம் இங்கே தடைப்பட்டது என்றால் இந்த யக்ஞத்திற்கேற்பட்ட இடையூறு எத்தகையதாயிருக்கவேணும்? அதை ராமன்மட்டும் எப்படித் தீர்க்கமுடியும் என்று நாம் யோஜிக்கும்போது இந்த யக்ஞபலம் என்ன என்பதை மட்டும் கவி ஓரிடத்திலும் விளக்கவில்லையே, அதிலிருக்கலாமோ சூக்ஷ்மம் என்று தோன்றுகிறது. ஸ்வர்க்க ப்ராப்தி முதலான காமனைகளையுடையவர்களுக்கன்றோ யக்ஞ யாகாதிகள் அவசியம். ஸர்வக்ஞனாய். **न किंचिदप्यविदित भूतं भव्यं च राघव** என்று வஸிஷ்டாதிகளால் கொண்டாடப்படும் விசுவாமித்திருக்கு அவ்விதக் காமனைகள் ஏது? அப்படியிருந்தும் அவர் யக்ஞகாரியத்தில் ஈடுபட்டு அதை ரக்ஷிக்க ராமனை வேண்டியதிலிருந்து, அவாப்த காமர்களாயிருந்தும் லோக க்ஷேமத்திற்காகவே யக்ஞங்களைச் செய்யும் மகரிஷிகளுக்கு பிரதிநிதியாக அவர் ராமனை அண்டினாரென்றுதான் வைத்துக்கொள்ளவேண்டும். லோகக்ஷேமத்திற்காகச் செய்யும் எவ்வித ஸத்கர்மாக்களையும் கெடுக்கும் சுபாவமுள்ளவர்களை ராக்ஷஸர்களென்றே சொல்லலாம். அவர்கள் லோக விரோதிகள். அவர்களை சிக்ஷிக்கிறவன் லோகரக்ஷகனாகிறான். **वीर्योत्सिक्ताहि राक्षसाः** என்று சொன்னபடியால், பட்டைக்குத்தகுந்த கொட்டாப்புளி என்ற நியாயப்படி அவர்கள் வீரியத்திற்கு மேலான வீரியமுள்ளவன் ஒருவனே அவர்களை அடக்கமுடியும். அதாவது, ஸத்யத்தை அவலம்பித்த வீரியமாக இருக்கவேண்டும். இவ்வித ஸத்யபராக்கிரமத்தினால் அதர்மத்தையொழித்து தர்மத்தை நிலைநாட்டுவது என்ற ஸங்கல்பத்தைக்கொண்டு க்ஷத்திரிய வம்சத்தில் தசரதன் பிள்ளையாக ஸ்ரீராமன் அவதாரம் பண்ணினார். அந்த ஸங்கல்பத்தை நிறைவேற்றும் துறையில் அவரை இறக்கிவிட்டதே விசுவாமித்திர யக்ஞபலம் என்று நாம் அறியவேண்டும்.

ஸ்ரீராமன் அவதார புருஷன் என்பதை மறந்து கேவலம் காவியமாகவே ராமாயணத்தை நாம் ஆராயப்புகுந்தால் பால காண்டத்தில் விசுவாமித்திருக்கு ஏற்படும் பிராதான்யத்திற்குப் பல நியாயங்களிருப்பதாகவே தோன்றுகிறது. ஸ்ரீ ராமாதிகளின் ஜனனத்தைச் சொல்லும் 18-வது ஸர்க்கத்திலேயே விசுவாமித்திரரும் வந்துசேருகிறார். 73-வது ஸர்க்கத்தில் ஸ்ரீ ராமன் முதலியவர்களுடைய விவாஹத்தை முடித்து வைத்துவிட்டு விடைபெற்றுச் செல்லுகிறார். அப்புறம் ராமாயணத்தில் நாம் அவரை சந்திக்க நேருவதேயில்லை. ஆனால் பாலகாண்டம் முழுவதும் அவரை யொட்டினதாகவேயிருக்கிறது. அதிலும் 15 ஸர்க்கங்கள் அவருடைய பூர்வ சரித்திரத்தையே விஸ்தாரமாகச் சொல்லுகின்றன. இது அனுசிதம் என்றும் ராமகதைக்கதிக ஸம்பந்தமில்லாத பலவிஷயங்களை பால காண்டத்தில் புகுத்தி யிருப்பதாகவும் அதனாலேயே அதை மகர்ஷி வால்மீகி எழுதவில்லை யென்று தீர்மானிக்கலாமென்றும் நவீன ஆராய்ச்சி முறைகளில் ஈடுபட்ட சிலர் அபிப்ராயப்படுகிறார்கள். இவர்கள் இரண்டு முக்கியமான விஷயங்களை கவனிக்கவில்லை என்றே தோன்றுகிறது. விசுவாமித்திரர் தசரதருக்கும் ஸ்ரீராமனுக்கும் வார்த்தைகளாலும் காரியத்தாலும் செய்த உபதேசம் இல்லாமலிருந்தால் ராமாயணக்கதையின் போக்கே வேறுபட்டிருக்கலாம். தவிர மரத்தின் சொரூபம் முழுவதும் வித்துக்குள் அடங்கி யிருப்பதுபோல் பின்வரும் காண்டங்களில் விஸ்தாரமாய் விளக்கப்படும் தர்மங்கள்—இந்த இதிஹாஸத்தின் ஹ்ருதயமென்றே அவைகளைச் சொல்லலாம் — பாலகாண்டத்திலேயே முளைவிட்டிருப்பதை நாம் காணலாம்.

விசுவாமித்திர ஸங்கமத்தால் தசரதர் நடத்தையில் ஒரு விசேஷ மாறுதல் ஏற்பட்டது. அவரைக்கண்டமாத்திரத்தில் 'எதைக்கேட்டாலும் கொடுக்கி

றேன்' என்று தானாகவே வாக்குதத்தம் செய்கிறார். ரிஷி சந்தோஷித்து ராமனைத் தன்னுடன் அனுப்ப வேண்டவே, ஸத்தியத்தையே கைப்பிடித்த இக்ஷ்வாகு வம்சத்து அரசன் தான் சொன்னவார்த்தைகளை யெல்லாம் மறந்து **बालं मे तनयं ब्रह्मन्नैवदस्यामि पुत्रकं** என்று பிள்ளையிடமுள்ள அன்பின் மேலீட்டால் மறுத்து விடுகிறார். பிறகு தன் குலகுரு வஸிஷ்டர் கண்டித்து தர்மத்தை யெடுத்துச் சொல்லவே, ஸ்ரீராமனை அனுப்புவதாய் ஒப்புக்கொள்கிறார். அப்பொழுதுதான், விசுவாமித்திரர் ஆதியிலேயே சொன்ன **न च पुत्रगतं स्नेहं कर्तुमर्हसि पार्थिव** (பிள்ளையிடத்திலுள்ள ப்ரேமையினால் அவனுக்கு அஹிதம் செய்யாதே) என்ற வார்த்தைகளை தசரதர் ஒப்புக்கொண்டதாக ஆகிறது. விசுவாமித்திரரோடு அனுப்பினதால்தானே ஸ்ரீராமனுக்கு பலவித சிரேயஸ் ஏற்படுகிறது. ராமனிடத்தில் புத்திர வாஞ்சையைமட்டும் அவர் பாராட்டியிருக்கும் பக்ஷத்தில் ராமனுக்கே அபகாரியாயல்லவா ஆகியிருப்பார். விசுவாமித்திரர் செய்த உபதேசத்தின் ஸாராம்சத்தைச் சிந்தித்துச் சிந்தித்து தசரதர் திடசித்தராகிறார்.

न हि कल्याणकृत्कश्चित्दुर्गतिं तात गच्छति

என்ற கீதோபதேசத்தின் உண்மையை அனுபவத்தால் அடைகிறார். விசுவாமித்திரரின் எச்சரிக்கை ஆப்த வாக்யமாக அவர் மனதில் அழுந்துகிறது. அதனால் தான் கைகேயி ராமனைக் காட்டுக்கனுப்பித் தனக்குச் செய்த பிரதிக்கினையை ராஜா நிறைவேற்றவேண்டும் என்று மன்றாடும்போது, அதர்மத்தில் க்ஷணங்கூட அவருக்கு புத்தி செல்லவில்லை. தன் பிரதிக்கினையை நிறைவேற்றுவதால் தனக்கு எவ்விதக் கஷ்டம் நேர்ந்தாலும் ஸ்ரீ ராமனுக்கு அது சிரேயஸாகவே முடியுமென்று விசுவாமித்திர ஸம்பந்தத்திலிருந்து அவர் துணிந்திருந்தவரானதால் மகத்தான துக்கத்திலும் தர்மத்தை என்னால் மீற முடியாது என்கிறார்.

धर्मबन्धेन बद्धोऽस्मि नष्टा च मम चेतना

என்று கதறுகிறார்.

இவ்விதம் தர்மத்தில் த்ருடபுத்தி குருவின் உபதேசத்தாலும் அதையொட்டிய அனுபவத்தாலேயும்தான் ஸித்திக்குமென்பது தசரதர் நடத்தையிலிருந்து நாம் அறியலாம். முதலில் விசுவாமித்திரர் வார்த்தையை அனாதரவு பண்ணுகிறார். பிறகு தன் குல குரு வஸிஷ்டரிடமுள்ள விசுவாஸத்தால் மட்டும் விசுவாமித்திரர் சொன்னபடி செய்ய ஒப்புக்கொள்ளுகிறார். அப்படிச் செய்ததால் பயனடைந்தபிறகே விசுவாமித்திரர் உபதேசத்தில் வேரூன்றின நம்பிக்கை விழுகிறது.

இவ்விதமே ஸ்ரீ ராமனுக்கும் தாடகா வத விஷயத்தில் விசுவாமித்திரர் செய்த உபதேசம் முதலில் மனதில் அழுந்தவில்லை. அந்த உபதேசமாவது

न हि स्त्रीवधकृते घृणा कार्या नरोत्तम ।
चातुर्वर्ण्यहितार्थाय कर्तव्यं राजसूनुना ।
नृशंसमनृशंसं वा प्रजारक्षणकारणात् ।
पावनं वा सदोषं वा कर्तव्यं रक्षता सता ।
राज्यभारनियुक्तानामेषधर्मः सनातनः ॥

இந்த உபதேசத்தைப் பெறுங்காலத்தில் ஸ்ரீ ராமன் சிறு பிள்ளை(**ऊनषोडशवर्षः**). சிறு பிள்ளை மனதில்தான் போதனை சீக்கிரம் ஏறும் என்ற உண்மையை உணர்ந்தியே, ராமனைத் தன்னுடன் அனுப்பும்படி கேட்கையில் விசுவாமித்திரர்

अभिप्रेतं असंसक्तं आत्मजं दातुमर्हसि ।

என்று ராஜாவைப் பார்த்துச் சொல்லுகிறார். (இவ்விடத்தில் **असंसक्तं** என்ற பதத்திற்கு 'குடும்பப்பற்று ஏற்படாதவன்' என்று வைத்துக்கொள்வதைவிட "பிடிவாதமான கொள்கைகளை இன்னும் ஏற்காதவன்" (a fresh & impressionable mind) என்றே அர்த்தம் கொள்வது உசிதமெனப்படுகிறது.)

ஸ்ரீ ராமனும் பால்யஸ்வபாவத்தையொட்டி, "இவள் ஸ்திரீ என்று பார்க்காதே, பொல்லாதவள், லோக க்ஷேமத்திற்காக இவளைக்கொல்லவேண்டியது ராஜாவான உன் கடமை" என்று விசுவாமித்திரர் சொன்ன நியாயத்தைச் சட்

டென்று மனதில் வாங்கவில்லை. "பொல்லாதவளோ நல்லவளோ பெண் பெண்தானே, அவளை யெப்படிக்கொல்லுகிறது?" என்று ஸகஜமான காருண்யத்தால் கவலையுறுகிறார். இருந்தாலும் குரு வஸிஷ்டர் ஸந்நிதியில் தன் பிதா உத்திரவுப்படித்தான் விசுவாமித்திரர் ஆக்கினையைச் சிரமேற்கொள்ளவேண்டும் என்று தாடகை வதத்திற்கிணங்குகிறார்.

पितुर्वचननिर्देशात्पितुर्वचनगौरवात् ।
वचनं कौशिकस्येति कर्तव्यमविशङ्कया ॥

என்று தன்மனதை என்ன துணிவு பண்ணிக்கொண்டாலும் தாடகையைக் கொல்ல கையெழும்ப மாட்டேனென்கிறது. அவளுக்கு அங்கபங்கம் செய்து அவளைத் துரத்தி விடுவோமென்று லக்ஷ்மணனிடம் சொல்லுகிறார். இவர் மனப்பான்மையையறிந்து விசுவாமித்திரர் மறுபடியும் अलं ते घृणया राम पापैषा दुष्टचारिणी என்று வற்புறுத்திய பிறகே ஸ்ரீ ராமன் அவளை அடித்துத் தள்ளுகிறார்.

தாடகா வதமே உலக ரக்ஷணைத்திற்காக அவர் முதல் முதல் செய்த துஷ்ட நிக்ரகமாகிறது. மகர்ஷி செய்த உபதேசமும் மனதில் வேறூன்றுகிறது. இது பிற்காலத்தில் எற்படும் பல ஸந்தர்பங்களில் வெளியாகிறது. அரண்யகாண்டத்தில் ஸீதை विनावैरेण रौद्रता (தனக்கபராதஞ் செய்யாதவர்களையும் தண்டிப்பது) என்ற ஒரு கெட்ட சுபாவம் மட்டும் தன் கணவனிடமிருப்பதாக எண்ணி சலுகையால் அவரைக் கண்டிக்கிறாள். அப்பொழுது

तदवश्यं मया कार्यमृषीणां परिपालनम् ।
अनुक्तेनापि वैदेहि प्रतिज्ञाय तु किं पुनः ॥

(ரிஷிகளை நான் அவசியம் காப்பாற்றியே ஆகவேண்டும், அவர்களுக்கு வாக்குதத்தம் வேறு செய்திருக்கிறேனல்லவா?) என்று விசுவாமித்திரர் உபதேசித்த ராஜ தர்மத்தையே ஸ்ரீராமர் விளக்குகிறார். இதுபோலவே வாலியை வதம் செய்தது ந்யாயந்தான் என்று ஸ்தாபிப்பதற்கும் இந்த ராஜ தர்மம் ஒரு காரணமாகக் காட்டப்படுகிறது.

விசுவாமித்திரரிடம் ராஜதர்மத்தை மட்டும் ஸ்ரீ ராமன் கற்றுக்கொள்ளவில்லை. தான் செய்த பிரதிக்கினையை எப்பாடுபட்டும் நிறைவேற்றவேண்டும் என்ற கொள்கையை உடும்புப் பிடியாய் அவர் பிடித்ததற்கு விசுவாமித்திரர் பழக்கமும் ஒரு முக்கியக் காரணம் என்றும் சொல்லலாம்.

ராமாயணத்தில் விவரிக்கப்பட்ட விசுவாமித்திர சரித்திரம் அனேக தத்துவங்களை விளக்குகிறது. அவர் பெரிய வம்சத்தில் பிறந்து தர்ம புத்தியோடு ராஜ்யம் நடத்தும் ஒரு அரசனாயிருக்கையில் வஸிஷ்டாசிரமத்திற்குத் தற்செயலாய் வந்து சேருகிறார். வஸிஷ்டர் அவருக்குக் காமதேனுவின் உதவியைக்கொண்டு விசேஷமான ஆதித்தியம் நடத்திவைக்கிறார். கேட்டதெல்லாம் கொடுக்கும் அந்த தேவப்பசுவின் மகிமையைக்கண்டு அதைத் தான் அடையவேணுமென்று ராஜா ஆசைப்படுகிறார். இந்த லோபமே அநர்த்தத்திற்குக் காரணமாகிறது. காமதேனு வெறும் பசுவல்ல. தனக்கு யாதொரு விதமான அபேக்ஷையுமில்லாமல் யாசிப்பவர்களின் மனோரதத்தை பூர்த்தி செய்விப்பதென்ற ஒரே ஸங்கல்பமுள்ளவள். வஸிஷ்டருடைய, பிரும்மதேஜஸால் வளர்க்கப்பட்டவள். அந்த தேஜஸின் ஸ்வரூபமென்றே சொல்லலாம். அவளை ஆசைக் கொந்தளிப்பால் பீடிக்கப்பட்ட ராஜா அடைய முடியுமா? வஸிஷ்டர்தான் அவளை விட்டுக்கொடுக்க முடியுமா? அது முடியாது என்பதை कीर्तिरात्मवता यथा என்ற உபமானதால் வஸிஷ்டர் அழகாய் விளக்குகிறார். இந்த தத்துவத்தை யறியாமல் ஆசையின் வேகத்தாலும் ஐசுவரியத்தின் திமிராலும் ராஜா பலாத்காரமாய் சபலையையடைய வெண்ணி அவளை நிர்பந்திக்க அவள் வஸிஷ்டரின் அனுமதியால் சிருஷ்டித்த வீரர்களிடத்தில் ராஜா தோல்வி யடைகிறார். அதனால் மனதில் ஆத்திரம் அதிகரிக்க, பசுபதியைத் தன் தபஸால் சந்தோஷப்படுத்தி தனுர்வேதம் முழுவதையும் கற்றுக்கொண்டுவந்து

வஸிஷ்டரால் வெகுகாலமாய்க் காப்பாற்றப்பட்டுவரும் ஆசிரமத்தை யழிக்கிறார். குணமில்லாமல் வித்தைமட்டும் கற்றதால் ஏற்பட்ட விபரீத புத்தியிது. வஸிஷ்டருடைய பிரும்மதேஜஸினால் தன் வீர்யமும் வில் வித்தையும் நிஷ்பயனானதைக் கண்டு ராஜாவுக்கு தன்னிடத்திலுள்ள குறை விளங்குகிறது. எப்பாடு பட்டும் அந்தக் குறையை நிவர்த்தித்துக் கொள்வது என்ற பெரிய சபதத்தைச் செய்கிறார். இந்தப் பிடிவாத மில்லாமற்போனால் விசுவாமித்திரர் பிரம்ம ரிஷியாகி யிருக்கமுடியாது.

ஆனாலும் அந்தப் பிடிவாதத்தை நிறைவேற்றுவதற்குத் தன் சுபாவத்திலேயே பல இடையூறுகள் இருப்பதை ராஜா அப்பொழுது அறியவில்லை. பிறகு படிப்படியாய்த்தான் தெரிந்துகொள்கின்றார்.

तदेतत्समवेक्ष्याहं प्रसन्नेन्द्रियमानसः ।
तपो महत्समास्थास्ये यद्वै ब्रह्मत्वकारणम् ॥

தபஸ் பலிக்க இந்திரியங்களடங்கி மனஸ் ஸமாதானமாக வேண்டுமென்று அவர் அறிந்திருந்தாலும், வஸிஷ்டரிடம் தான் அடைந்த அபஜயத்தால் துக்கமும் அவரிடம் பொருமையும் மனதைவிட்டு அகலாமல் துன்புறுத்தின. இந்த துக்கத்தாலும் பொருமையாலும் அகங்காரமே வளர்ந்தது. குரு சாபத்தால் சண்டாளனை திரிசங்கு தேகத்தோடு ஸொர்க்கம் போவதற்குத் தனக்கொத்தாசை பண்ண வேண்டுமென்று யாசிக்கவே, இந்த இக்ஷ்வாகு வம்சத்தரசன் நல்லவன், தெய்வ கதியாய் கஷ்டத்தை யனுபவிக்கிறான் என்று அவனிடத்தில் அவருக்குக் கருணை பிறக்கிறது. ஆனாலும் பின்னோடு அகங்காரமும் தலை நீட்டுகிறது. அவன் பிரார்த்திப்பது சரியா தப்பா என்றுகூட யோஜிக்காமல்

हस्तप्राप्तमहं मन्ये स्वर्गं तव नराधिप ।
यस्त्वं कौशिकमागम्य शरण्यं शरणागतः ॥

என்று தன் பராக்கிரமத்தைக் காட்டுவதிலேயே கண்ணாயிருக்கிறார். தன் தபோபலத்தால் திரிசங்குவிற்குக் கொடுக்க பிரதிக்கினையை ஒருவிதமாக நிறைவேற்றினாலும் சிருஷ்டி தர்மத்தை மாற்ற அவர் தபஸாலும் முடியவில்லை. திரிசங்குவுக்குப் பழைய சொர்க்கத்தில் இடமில்லை. விசுவாமித்திரர் கைகண்ட பலன், வஸிஷ்டர் பிள்ளைகள் தன்னைப் பழித்தார்கள் என்று கேட்டு அவர்களைச் சபித்துத் தன் தபஸை இழந்ததுதான்.

பிறகு கோபம் குடியைக் கெடுத்ததே யென்று எண்ணி வருந்தி இன்னொரு திக்கில் தபஸ் பண்ணப்போக அங்கே சுனச்சேபன் வந்து தனக்கு உயிர்ப்பிச்சை கேட்கிறான். இவனிடப் ரிஷிக்கு ஏற்படும் கருணை அவ்யாஜமானது. ஆனாலும் இங்கேயும் கோபம் குறுக்கிடுகிறது. "சுனச்சேபனுக்குப் பதிலாய் நீங்கள் யாராவது ஒருவர் அம்பரீஷனுக்கு யாகப் பசுவாய் உதவுங்கள், இவன் சிறுபையன், உயிர் வாழ விரும்புகிறான்" என்று அவர் தன் பிள்ளைகளைப் பார்த்துச் சொல்ல, அவர்கள் சலுகையின் பேரில் அந்த வார்த்தையை அவமதிக்க, அவர்களையும் வஸிஷ்டர் பிள்ளைகளைச் சபித்ததுபோல் சபிக்கிறார். ஆனால் ஒரு வித்தியாஸமுண்டு. வஸிஷ்டர் பிள்ளைகளோ எதிரியின் பிள்ளைகள், இவர்களோ தன் வயிற்றில் பிறந்தவர்கள். இருந்தாலும் தப்புச்செய்ததால் தன் பிள்ளைகள் என்ற பக்ஷபாதம் காட்டவில்லை. இந்த அளவில் தன்னை ஜெயித்து விட்டார். அப்படியிருந்தும், கோபம் பொல்லாதது அல்லவா? தபசு வீணாகிறது. மறுபடி யாரம்பிக்கிறார். இந்த ஸமயம் மேநகை வந்துசேருகிறாள். அஜாக்கிரதையால் காமவலையில் விழுந்துவிடுகிறார். புத்தி தெளிந்ததும் அவள் பேரில் குற்றமில்லை யென்றுணர்ந்து அவளை மன்னித்துவிட்டு, காமத்தால் தபசுகெட மறுபடி ஆரம்பிக்கிறார். ஆனால் காமத்தை ஜெயிப்பதைவிடக் கோபத்தை வெல்லுவது சிரமம் என்பதும் அது ஸதாஜாகரூகனாய் ஒருவன் இல்லாத வரையில் காலைவாரிவிட்டுவிடும் என்பதும் தேவதைகளால் அனுப்பப்படும் ரம்பையை அவர் சபிப்பதிலிருந்து விளங்குகிறது.

इन्द्रियैरजितैराम नलेभे शान्तिमात्मनः ।

என்று சதாநந்தர் சொல்வதிலிருந்து

சாந்தியடையாமல் கெடுக்கும் சத்ருக்களில் முக்கியமானது கோபந்தான் என்று ஏற்படுகிறது. கோபத்தைத் தடைபண்ணும் முக்கிய உபாயம் மௌனம் என்று நிர்மாணிக்கிறார் விசுவாமித்திரர். அதோடு நிற்காமல்

अथवा नोच्छ्वसिष्यामि संवत्सरशतान्यपि ।
अहं विशोषयिष्याम्यहमात्मानं विजितेन्द्रियः ॥

என்ற தீவிர சபதம்செய்கிறார். ஆயிரம் வருஷம் கடுந்தவம் செய்தும் கோபத்திற்கிடுக்கே கிடைக்கவில்லை. விரதம் முடிந்து ஸித்தான்னத்தை உட்கொள்ளப் போகும் தருணத்தில் இந்திரன் பிராம்மண வடிவமாக வந்து அதைக் கேட்க வாயைத்திறவாமல், கொஞ்சமும் வருந்தாமல் அது முழுவதையுமவனுக்குக் கொடுத்து மறுபடி தபஸில் இறங்கி விடுகிறார். இவ்விதம் சாந்தி ஸ்வாதீனமாகவே பிரும்மண்யம் தானாக ஸித்திக்கிறது. பிரும்மாதி தேவதைகள் அந்த பிரும்மரிஷித்வப்ராப்தியை ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவர்களைப் பார்த்து வஸிஷ்டரும் அதை ஒப்புக்கொண்டால் என் மனோரதம் நிறைவேறும் என்று தெரிவிக்க,

क्षत्रवेदविदां श्रेष्ठो ब्रह्मवेदविदामपि ।
ब्रह्मपुत्रोवसिष्ठोमामेवंवदतु देवताः ।
यद्ययं परमः कामः कृतो यान्तु सुरर्षभाः ॥

என்று சொல்லும் இடத்தில் வஸிஷ்டரிடத்திலவருக்குள்ள எல்லையற்ற மதிப்பு விளங்குகிறது. பிரும்ம புத்திரரும் ஸந்தோஷமாக விசுவாமித்திரர் பிரும்ம ரிஷியானதை ஆமோதித்ததோடு கூட அவருடன் ஸக்யம் செய்தார். அதற்கடையாளமாகத்தான் போலிருக்கிறது ஸ்ரீராமனை சிஷ்யனையடையும் பாக்கியத்திலும் விசுவாமித்திரருக்கு அவர் பங்கு கொடுத்தது!

விசுவாமித்திரர் இவ்விதம் வஸிஷ்டரைக் கொண்டாடினதற்கு வஸிஷ்டரிடம் என்ன விசேஷ குணங்களிருந்தன? ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தையொட்டி மட்டும் நாம் பார்த்தால் வஸிஷ்டப்ரஸ்தாபம் வெகு சில ஸந்தர்ப்பங்களிலேயே வருகிறது. ஸ்ரீராமன் வாழ்க்கையில் முக்கிய சம்பவங்களில் அவருக்கு விசேஷ ஸம்பந்தமில்லைப் போலவே படுகிறது. ஸ்ரீ ராமாதிகளின் உத்பத்தியை உத்தேசித்துச் செய்த புத்திரகாமேஷ்டி ரிச்யசிருங்கரால் நடத்தப்பட்டது. விசேஷ அஸ்திர சஸ்திரங்கள் சொல்லிக் கொடுப்பதிலாரம்பித்து கலியாணத்தை நடத்தி வைக்கும் வரையில் ஸகலமும் விசுவாமித்திரரின் பொறுப்பாகி விட்டது. ராவண வதத்திற்கு முன் ஆதித்யஹ்ருதயத்தை உபதேசம் செய்து உத்ஸாஹத்தை உண்டுபண்ணியது மற்றொரு ரிஷி, அகஸ்தியர். பட்டாபிஷேகத்தில் தான் வஸிஷ்டருடைய பிராதான்யத்தை நாம் உணருகிறோம்.

அதற்கு முன் முக்கியமாக அவர் தலையிடும் பிரகிருதங்கள் சிலவே. ஸீதையை மரவுரி தரிக்கும்படி கைகேயி செய்ய அவளைக் கண்டிக்கிறார். ஜாபாலி அர்த்தவாதம் பேசி ராமனுக்குக் கோபத்தையுண்டுபண்ணும்போது குறுக்கிட்டு, 'ஜாபாலிக்கும் நீதி தெரியும். தாய், தம்பி, உன் குருவான நான், உன் ஜனங்கள், இந்த ரிஷிகள் இவ்வளவு பேருடைய வேண்டுகோளின்படி நீ காட்டிலிருந்து திரும்பிவந்து ராஜ்யத்தை ஒப்புக்கொண்டால் அது தர்ம விரோதமாகாது" என்று சொல்லிப்பார்க்கிறார். பாக்கி எல்லா ஸந்தர்ப்பங்களிலும் ராஜகுரு என்ற தோரணையில் தன் கடமைகளைச்செய்து எல்லோருடைய மரியாதைக்கும் பாத்திரமாகிறார் என்றாலும் விசுவாமித்திரரைப்போல் உலகத்தின் போக்கையோ விதியின்சேஷ்டைகளையோ மாற்றும் எண்ணமோ விருப்பமோ அவருக்கு இருப்பதாகத்தெரியவில்லை. முக்கியமாக ஸ்ரீ ராமன் காட்டுக்குப்போவதாய் ராஜாவுக்கு வாக்களித்தபோது, போகவேண்டாமென்று தடுக்காதவர்கள் ஸீதையும் வஸிஷ்டரும் மட்டும்தான்.

இவ்விதம் தாமரையிலை மேலுள்ள நீர்போல் எதிலும் அத்யாஸக்தியில்லாமல் நடந்துவரும் மகர்ஷி தர்மலோபம் ஏற்படக்கூடிய தருணங்களில் மட்டும் குறுக்கிட்டு அதர்மத்

தினால் நேரும் அநர்த்தங்கள் வராமல் பாதுகாக்கிறார். விசுவாமித்திர மகிமையை யெடுத்து அவர் சொல்லியிராத வரையில் தசரதன் ஸத்தியந்தவறினவராயிருக்கலாம். கௌசிகன் ஆசைக்கு வஸிஷ்டர் இடம் கொடுத்திருந்தால் அது உலகை அழித்திருக்கலாம். **मैत्रेणेक्षस्व चक्षुषा** என்று அவர் சாதாரண மரியாதையை யொட்டிச் சொன்ன வார்த்தையைப் பிரார்த்தனையாகக் கருதி பிறர் சொத்தைக் கவருவது என்ற எண்ணத்தையே அவருள்ளத்திலிருந்து களைய வெண்ணி சபலையிடத்தில் அவருக்கு மோகம் பிறக்கும்படி அவளைக் கொண்டு ஆச்சரிய ஆதித்தியம் செய்வித்தாரென்று கூடத்தோன்றுகிறது. கௌசிகன் தன் ஆசிரமத்தை யழித்து ஜீவஹிம்சை செய்ய அந்த ஜீவன்களிடத்தில் வைத்த கருணையால் முதலில் "காதிபிள்ளையை நாசமாக்குகிறேன்." என்று வஸிஷ்டர் சொன்னாலும், பின்னோடு அவன் அறியாத்தனத்திற்கிரங்கி 'அடே மூடா, உன் கொழுப்பை யடக்குகிறேன்' என்று, நிக்ரகமும் அனுக்ரஹமாக ஆகும்படிச் செய்கிறார். இவ்விதம் அதர்மத்தை அண்டவிடாமல் செய்யும் அணைபோல் அவர் இக்ஷ்வாகு வம்சம் தோன்றின நாளாக அவர்களையும் அவர்கள் ராஜ்யத்தையும் காப்பாற்றிவந்ததால் தசரத ராஜ்யத்தில் **क्षत्रं ब्रह्ममुखंचासीत्** என்ற நீதி ஏற்பட்டிருந்தது. கன்யாவரணஸமயத்தில் ராஜாவும் ஜனகரிடத்தில்

विदितं ते महाराज इक्ष्वाकुकुलदैवतम् ।
वक्ता सर्वेषु कृत्येषु वसिष्ठो भगवानृषिः ॥

என்று தன் குருபக்தியை வெளிப்படுத்துகிறார். அதற்குக் காரணம் ஸ்வதர்மத்திலிருந்து வழுவாமல் வஸிஷ்டர் ராஜாவையும் ராஜ்யத்தையும் ரக்ஷித்து வந்தது தான்.

பொட்டு மலருவதுபோல் வாசனையாலும் ஸம்ஸ்காரங்களாலும் தான் இயற்கையாய்ப் பெற்ற ஸத்குணங்களால் லோகத்தைப் பரிபாலிக்கச்செய்து இன்பம் அடைபவர்கள் மனிதவர்க்கத்தில் ஒருசாரார். அவர்களே சிரேஷ்டமானவர்கள். வஸிஷ்டர் இவ்விதம் ஸஹஜஸ்வபாவத்தை வளர்த்து மேன்மையடைந்தவர். நிஸ்ஸங்கல்பனாய் லோகஸங்கிரகத்தையே நாடிநிற்பவர். விசுவாமித்திரர் பிரயோகித்த அஸ்திர சஸ்திரங்களுக்கு பதிலாய் அவர் ஒருவிதமான பிரதிகர்மாவையும் செய்யவில்லை என்பது முக்கியமாய் கவனிக்கத்தகுந்தது. சும்மாவேயிருந்தார். அப்படிச் சும்மா யிருப்பவர் முன் விசுவாமித்திரர் அஸஹாயசூரத்தனம் கொஞ்சமும் பலிக்கவில்லை. இந்த உண்மையைத்தான் "சும்மா யிருப்பதறிது" என்று தாயுமானவரும் தெரிவிக்கிறார். வஸிஷ்டருடைய சாசுவத நிலை ராமாயணத்தில் ஸூசனையாகத்தான் காட்டப்பட்டிருக்கிறது. ஆனாலும்

कर्तव्यमस्ति न ममेह हि किंचिदेव ।
स्थातव्यमित्यतिमनाभुविसंस्थितोऽस्मि ।
संशान्तया सततसुमधियैव वृत्या ।
कार्यंकरोमि न च किंचिदहं करोमि ॥

என்று யோகவாஸிஷ்டத்தில் தன்னைப் பற்றி வஸிஷ்டர் சொல்லிக்கொள்வது வால்மீகி அபிப்பிராயத்திற்கும் பொருத்தமாகவே யிருக்கிறது.

விசுவாமித்திரரோ, தைரியத்தாலும் புத்திவிசேஷத்தாலும் மேலான நோக்கத்திலுள்ள பற்றினாலும் தன் பிரகிருதிகுணமான அகங்காரத்தை வென்றதீரர். நல்ல காரியத்தில் இறங்கினால் எவ்வித இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் விடாமுயற்சி யிருக்கும் பக்ஷத்தில் முடிவில் காரியம் கைகூடியே தீரும் என்பதற்கு நமக்கவர் சாசுவத திருஷ்டாந்தம்.

ஸ்ரீராமனிடம் இவ்விரு மகரிஷிகளின் உத்கிருஷ்ட குணங்கள் அழகாய்ப் பொருந்தி யிருந்தன. லோகம் நெறிதவராமலிருக்கும்பொருட்டு நரசிரேஷ்டர்கள் தாங்களே தர்மத்தைக் கடைப்பிடித்து நடத்திக்காட்ட வேண்டுமென்று ஸ்ரீராமன் நடந்துவந்தது வஸிஷ்டமதத்தை யனுவர்த்தித்தே.

सूक्ष्मः परमदुर्ज्ञेयः सतांधर्मः प्लवङ्गम ।
हृदिस्थः सर्वभूतानामात्मा वेद शुभाशुभम् ॥

என்று வாலிக்குச் செய்த உபதேசம் आचार्यसंमतமான ஸ்ரீராமனல்லாமல் வேறு யார் செய்யமுடியும்? ஸ்ரீராமனிடம் ஸ்வதஸ்ஸித்தமாயிருந்த விசேஷ தர்மங்கள்—தலையைக்கொடுத்தாவது ஸத்தியத்தைக் காப்பாற்றுவது, அமானுஷமான பராக்கிரமத்தைச் செய்வது, சரணமடைந்தவர்களை எப்பாடுபட்டும் காத்தே தீருவது—இவைகள் விசுவாமித்திர ஸம்ஸர்க்கத்தால் சீக்கிரம் வளர்ந்தன. அஹல்யா சாபவிமோசனமும், மாரீசாதி ராக்ஷஸர்களின் நிக்ரஹமும், தனுர் பங்கமும் விசுவாமித்திரர் மூலமாகத்தானே ஏற்பட்டன.

ஸ்வப்ரகிருதிக்கு மாறான குணங்களைக்கொண்டே நடத்தக்கூடும் என்ற காரியங்களில் ஒருவன் இறங்கினால் அவனுக்கு தோஷம் உண்டாவதில்லை. இதை அறிந்துதான் ஸ்வதர்மத்தை யனுஷ்டிப்பதே மேலான வழியென்று பெரியோர்கள் போதித்திருக்கிறார்கள். ஆனால் ஸ்வபாவமாய் ஏற்பட்ட குணங்களில் குறையிருக்கும்பக்ஷத்தில் அதற்குக்கட்டுண்டு கிடக்காமல் அதை நிவர்த்தித்துக்கொள்ள அவசியம் பாடுபடவேண்டியது என்பதையும் வற்புறுத்தியிருக்கிறார்கள். இந்த இரண்டு ஸமதையான தத்துவங்களையும் மகர்ஷி வால்மீகி, வஸிஷ்டர் விசுவாமித்திரர் என்ற இரண்டு உத்தம பாத்திரங்கள் மூலம் உலகம் உய்யும்படி அனுக்கிரகித்திருக்கிறார்.

சதுரங்கம்.

‘ப்ரேம்சந்த்.’

(S. குஞ்சிதபாதம்—மொழிபெயர்த்தது.)

[ஹிந்தி பாஷையை வேறு எந்த உத்தேசத்துடன் கற்றுக்கொள்ளாவிட்டாலும்கூட முன்ஷி தனபதிராய் ‘பிரேம்சந்தி’ன் நவீனங்களையும், கதைகளையும் படித்தின்புறுவதற்கெனவேனும் எல்லோரும் கற்றுக்கொண்டாகவேண்டும். இந்தியாவின் கதாசிரியர்களிலே மிகமிகச் சிறந்த ஐவரை எண்ணுவதற்குக் கைவிரல்களை மடக்கத்தொடங்கினால் நமது விரல்களில் நீளமானது சந்தேகமன்னியில் ப்ரேம்பாபுவையே குறிக்கும். ஆதர்சத்தையும், அநுபவத்தையும் அழகாகக்கலந்து பக்குவம்பண்ணிக் கலைமூலம் அள்ளிப் பரிமாறுவதில் அவரை நிகர்த்தவர் ஹிந்தி இலக்கிய உலகில் வேறு யாரும் இல்லை; மனித ஹிருதயத்தின் சூக்ஷ்மமான பாவங்களைக் கண்ணாடிபோல தெளிவாகப் பிரதிபலித்துக் காண்பிப்பதிலே அவரைப்போன்றவர்கள் மிகச்சிலரே. இந்தக் கதைச் ‘சக்கரவர்த்தி’ ஸ்வர்க்கவாசியான பின்னர் அவருடைய ஆசனம் இன்னும் காலியாகவே இருக்கிறது—]

1

வாஜித்அலிஷாவின் காலம் லக்ஷ்மணபுரி சிற்றின்பசாகரத்திலே மூழ்கி யிருந்தது. சின்னவன்—பெரியவன், ஏழை, பணக்காரன் அத்தனைபேர்களும்தான் இன்பக்கடலில் ஆழ்ந்திருந்தார்கள். ஒருவன் ஆடல்பாடல்களைக்கண்டும், கேட்டும், அனுபவித்தும் அகமகிழ்ந்து கொண்டிருந்தால், இன்னொருவன் அபின் அருந்தி ஆனந்தப்பட்டுக்கொண்டிருந்தான். வாழ்க்கையினுடைய ஒவ்வொரு பகுதியிலும் குதூகலமும், கொம்மாளமுமே முக்கியமாக இருந்தன. அரசாங்கத்திலாகட்டும், இலக்கிய உலகிலாகட்டும் எல்லா விடத்திலும் சுகபோகமே பரவிக்கிடந்தது. எங்கும் நிறை இவ்வின்ப வெள்ளம் சமூக அமைப்புத்திட்டங்கள், கலைகள், வேலைகள், தொழில்கள், ஆகார வியவகாரங்கள் எல்லாவற்றையும் மூழ்கவடித்துக்கொண்டிருந்தது. அரசியல் நிபுணர்கள் விஷயவாசனையிலும், கவிகள் காதலிலும், விரகதாபத்தின் வர்ணனையிலும், தொழிலாளிகள் ஜரிகை, அத்தர், கட்டில் முதலியவை செய்வதிலும் ஈடுபட்டிருந்தார்கள். எல்லோருடைய கண்களிலும் இன்ப மதம் படர்ந்திருந்தது. உலகத்திலே என்ன நிகழ்ந்துகொண்டிருந்தது என்னும் தகவலே ஒருவருக்கும் தெரியாது. சில விடங்களில் சேவல் சண்டைகள் நடந்துகொண்டிருந்தால் சில விடங்களில் சதுரங்கக் காய்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. தோட்டிமுதல் தொண்டமான் வரையில் இப்படியே மதாந்தமாக இருந்தனர். பிச்சைக்காரன் கையில் இரண்டு காசு கிடைத்தால் அவன் சோறுவாங்கித் தின்னாமல் கஞ்சா வாங்கிப் போதை யேற்றிகொள்வான்; அவ்வளவு தூரம் ஆகிவிட்டது நிலைமை. சதுரங்கம், சொக்கட்டான் போன்ற விளையாட்டுகளினால் புத்தி தீவிரமாகிறது, விசார சக்தி மலர்கிறது, சிக்கலான பிரச்னைகளை சுலபமாகத்தீர்க்கும் சாமர்த்தியம் ஏற்படுகிறது. இப்பேர்க்கொத்த குதர்க்க வாதங்கள் மும்முரமாக அடிபட்டன. (இந்த அபிப்பிராயம் உள்ள மனிதர்களுக்கு இன்னும் உலகத்தில் குறைச்சலே இல்லை!).

ஆகவே,மிர்ஜா ஸஜ்ஜாத் அலியும்,மீர்ரோவுன் அலியும் தங்களது நேரத்தில் பெரும் பான்மையையும் புத்தியைத் தீவிரம்

செய்துகொள்ளக் கழித்தால், எந்தப் புத்திசாலிக்கு என்ன ஆக்ஷேபணை இருக்க முடியும்? இரண்டு பேர்களுக்கும் பிதுரார்ஜித சொத்து இருந்தது; ஜீவனத்திற்குக் கஷ்டம் ஒன்றும் இல்லை; வீட்டிலேயே உட்கார்ந்துகொண்டு உல்லாசமாக இருந்தனர். பின் வேறு என்னதான் செய்வது? காலையிலே இரண்டு நண்பர்களும் ஆகாரம் சாப்பிட்டுவிட்டு சதுரங்கமாட ஆரம்பித்தார்களேயானால் பொழுதுபோவது தெரியுமா, மத்தியானம் தெரியுமா, சாயங்காலம் தெரியுமா? வீட்டினுள்ளே இருந்து அடிக்கடி கூப்பிடுவது காதிலேவிழும். "சாப்பிட வரலாம்" என்ற அழைப்புக்கு "வருகிறேன், இலை போடு" என்று பதில் போய்க்கொண்டேயிருக்கும். 'சமையல்காரன் காத்துக்காத்து அலுத்துப்போய் அவர்களிருக்குமிடத்துக்கே போஜனத்தைக் கொண்டுவந்து வைத்துவிடுவான். இரண்டு நண்பர்களும் இரண்டு காரியங்களையும் சேர்ந்தாற்போலவே கவனித்துக்கொள்வார்கள். மிர்ஜா ஸஜ்ஜாத்அலியின் வீட்டிலே பெரியவர்கள், கிழம், கட்டைகள் ஒருத்தரும் இல்லை. ஆகையால் அவருடைய வீட்டிலேதான் ஆட்டம் நடக்கும். ஆனால் மிர்ஜாவின் வீட்டிலிருந்தவர்களுக்கு இந்த ஆட்டத்தில் சந்தோஷம் ஏற்படவில்லை. வீட்டுக்காரர்கள்மட்டும் இல்லை, தெருவில் இருந்தவர்கள், வீட்டு வேலையாட்கள் எல்லோரும்கூட இந்த ஆட்டத்தை வெறுத்தார்கள். "ரொம்ப மோசமான விளையாட்டு: வீட்டையே குட்டிச்சுவராக்கிவிடும். இதிலே ருசி ஏற்படாமல் கடவுள்தான் செய்யவேணும். மனிதனை உதவாக்கரையாக அடித்துவிடும்; இகத்துக்கும் பிரயோஜனமில்லை, பரத்துக்கும் பிரயோஜனமில்லை ரொம்பப் பைத்தியம் இது" என்று எல்லோரும் இந்த ஆட்டத்தைப்பற்றி வியாக்கியானம் செய்தனர். மிர்ஜா ஸாஹபின் பேகம் ஸாஹபாவானவள் இந்த ஆட்டத்தின் மேலே கோபம்வைத்து சமயம் வந்தபோதெல்லாம் தன் கணவருடன் சண்டைபோட்டும் வந்தாள். ஆனால் இந்த மாதிரி சந்தர்ப்பம் கிடைத்ததே அபூர்வம். அவள் தூங்கிப் போகும்வரையில் கூட ஆட்டம் நடந்துகொண்டிருக்கும். அவள் தூங்கினபிறகுதான் மிர்ஜா உள்ளே வருவார். அவள் வேலைக்காரர்கள்மேலே தன்னுடைய கோபத்தை இறக்கிக்கொண்டிருந்தாள். "என்ன வெற்றிலை கேட்கிறாரா, வேணுமானால் வந்து எடுத்துக்கொண்டு போகச் சொல்லு. சாப்பிடவா இன்னேரமா? கொண்டுபோய் அவர் தலையிலேகொட்டு, தின்றால் தின்னட்டும், தின்னாவிட்டால் நாய்க்குப் போடட்டும்" என்றெல்லாம் சொல்மாரி பொழிந்துகொண்டிருந்தாள். ஆனால் நேருக்குநேரே அவளால் ஒரு வார்த்தை சொல்ல வியலவில்லை. அவளுக்கு மீர்ஸாஹபின்பேரில் எத்தனை கோபமோ அத்தனை கோபம் தன் கணவரின்பேரிலில்லை. அவள் அவருக்கு மீர்த்தடியன் என்று பெயர் வைத்திருந்தாள். மிர்ஜாவும் தான் ரொம்ப ஒழுங்காக இருக்கிறது மாதிரிக் காட்டிக்கொண்டு, எல்லாக் குற்றங்களையும் மீர்ஸாஹபின் தலையிலே சுமர்த்திவிடுவது வழக்கம்.

ஒரே ஒருநாள், பேகம்ஸாஹபாவினுடைய தலை வலித்தது. "போய் மிர்ஜா ஸாஹபை அழைத்துக்கொண்டுவா ஹக்கீம் கிட்டேபோய் மருந்து வாங்கிக்கொண்டுவரவேண்டும். ஓடிப்போய் சீக்கிரம் வரச்சொல்." என்று வேலைக்காரியிடம் சொன்னாள். வேலைக்காரி போனதும், மிர்ஜா ஸாஹப் "இதோ வந்துவிட்டேன் போ", என்று சொன்னார். பேஹம்ஸாஹபாவினுடைய மனம் கொதித்தது. அவளுடைய தலை வலித்துக்கொண்டிருக்கும்போது அவளுடைய கணவர் உட்கார்ந்து நிம்மதியாகச் சதுரங்கம் ஆடுவதா? அவள் முகம் சுணங்கியது. "போய்ச்சொல்லடி! அவர் வருகிறாரோ, அல்லது நானே ஹக்கீம் வீட்டிற்குப் போகவோ என்று கேட்டுவா, போடி" என்று உத்தரவிட்டாள். மிர்ஜா ரொம்ப உற்சாகமாகத்தானே சதுரங்கம் ஆடிக்கொண்டிருந்தார். இரண்டே காய்கள் நகர்த்தவேண்டியதுதான் பாக்கி; மீர்ஸாஹபைக் கட்டிவிட

லாம். சற்றுப் பொறுக்க முடியாதா? என்ன அப்படி உயிரா போகிறது"? என்று எரிந்துவிழுந்தார்.

மீர்: போய்த்தான் கேட்டு வாருமே அய்யா! பெண்டுகள் மனம் ரொம்ப மெலிந்தது; கோகாமல் நாம் நடக்க வேண்டும்.

மிர்ஜா: சரித்தான், என், நான் போக மாட்டேன்? இரண்டே ஆட்டம், உங்களைக் கட்டிப்போட்டுவிடலாம்.

மீர்: ஜனப், மனப்பால் குடிக்கவேண்டாம். நீங்கள் நினைக்கிறபடி காயை நகர்த்தி என்னுடையதைக் கட்டிப்போட முடியாது. தோற்கிறவன் நானல்ல. இருந்தாலும், போங்கள், கேட்டுவிட்டு வாருங்கள். என்னத்திற்காக அவர்கள் மனதையும் சிரமப்படுத்த வேண்டும்?

மிர்ஜா: பேசிக்கொண்டிருக்கிற நேரத்திலே நான் ஜயித்திருக்கலாமே.

மீர்: நான் ஆடவில்லை. நீங்கள் போய் கேட்டுவிட்டு வாருங்கள்.

மிர்ஜா: என்ன தலைவலிதானே, என்ன செய்யும்? ஹக்கீம் வீட்டிற்குப் போய்விட்டு வரவேண்டும். அவ்வளவுதான் நீங்கள் என்ன என்னை ஏமாற்றலாமென்று பார்க்கிறீர்களா?

மீர்: எப்படி வேண்டுமானாலும் நினைத்துக்கொள்ளுங்கள், அவர்களை கவனிக்க வேண்டாமா? அவர்கள் நன்மையை கவனியுங்கள்.

மிர்ஜா: அச்சா, ஒரே ஒரு காய் நகர்த்தலாம்.

மீர்: முடியாது; முடியவேமுடியாது. நீங்கள் கேட்டுவிட்டு வருமவரையில் நான் காய்மேலே கை வைக்க மாட்டேன்.

மிர்ஜா ஸாஹப் வேறுவழியின்றி உள்ளே போனார். பேகம்ஸாஹபா கண்ணிமைகளைச் சிமிட்டிக்கொண்டு, முக்கி முனகிய வண்ணம், "உங்களுக்கு இழவு சதுரங்கம் இத்தனை பிரியமாக இருக்கிறது. யார் செத்தால் என்ன, வாழ்ந்தால் என்ன, எழுந்திருக்கிற வழியாகக் காணோம் இருந்தாலும் இப்படி உங்களைப் போல ஒருத்தரும் இருக்கமாட்டார்." என்றாள்.

மிர்ஜா: என்ன செய்கிறது? மீர் ஸாஹப் கேட்க மாட்டேனென்கிறார். ரொம்ப கஷ்டப்பட்டு அவரை விட்டு விட்டு வந்தேன்.

பேகம்: ஏன், எல்லாரையும் அவர் தன்னைப்போல ஊர் சுற்றுகிறவராக நினைத்துக்கொண்டாரோ? அவருக்கு வீடுவாசல், பெண்டாட்டி பிள்ளை ஒன்றும் இல்லையா?

மிர்ஜா: சுத்த மோசமான பேர்வழி வரும்போது வராதே என்று சொல்வதா? வேறு வழியில்லாமல் ஆட வேண்டியிருக்கிறது.

பேகம்: மாட்டேனென்கிறதுதானே?

மிர்ஜா: சரி, சமமான மனிதன் என்னை விட வயசிலேயும், பிறப்பிலேயும் இரண்டங்குலம் உயர்ந்தவன். மரியாதையாகத்தான் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

பேகம்: அப்படியானால் நான் விரட்டுகிறேன். கோபம் வந்தால் வரட்டுமே யாரை யார் காப்பாற்றுகிறார்கள்? ஹிரியா, அடி, வெளியிலே போய் சதுரங்கத்தை எடுத்துக்கொண்டுவா. இனிமேல் ஐயா விளையாடமாட்டார் என்று மீர் ஸாஹபினிடம் சொல்லு. அவரையும் வீட்டுக்குப் போகலாமென்று சொல்.

மிர்ஜா: அடடா! அதெல்லாம் ஒன்றும் செய்துவிடாதே அவமானம் செய்யாதே ஹிரியா, ஹிரியா இரு. போகாதே.

பேகம்: என் அவளைப் போகவிடமாட்டேனென்கிறீர்கள்? சரி அவளை தடுத்துவிட்டீர்கள்; என்னைத் தடுங்கள் பார்க்கலாம்!

பேகம்ஸாஹபா கிளம்பினாள். பாவம்! மிர்ஜா ஸாஹபின் முகம் வெளுத்துவிட்டது. பரதேவதையைப் பிரார்த்தனை செய்தார். "அல்லா மேலே ஆணை!" என்றார். பேகம் ஒன்றும் காதிலே போட்டுக்கொள்ளவில்லை. திண்ணை வரையில் போனாள். ஆனால் நிஷ்டூரென்று பாபுருஷனுக்கு முன்னிலையில் போவதற்குக் கால்கள் பின்னிக்கொண்டன. உள்ளே திரும்பினாள். அறையிலே ஒருவரும் இல்லை. மீர் ஸாஹப் இரண்டொரு காய்களை இடம் மாற்றிவைத்துவிட்டு, யோக்கியமாக வாசலில் போய் மீசையை முறுக்கிக்கொண்டு நின்றுகொண்டிருந்தார். பேகம் உள்ளே போய்க் காய்களைக் கலைத்தாள்; பலகைக்கு அடியிலே சில காய்கள் விழுந்தன; சில காய்கள் வெளியே விழுந்தன. கதவை உட்புறமிருந்து சாத்தித் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டாள். மீர்ஸாஹபின் காதில் காய்கள் நிலைபெயர்ந்து அலங்கோலமாகும் சப்தமும், அவைகளை அப்படிச் செய்யும் கைகளில் குலுங்கும் வளைகளின் சப்தமும் விழுந்தன. மெல்ல, சொல்லாமல் கொள்ளாமல் மீர்ஸாஹப் கம்பி நீட்டினார்.

மிர்ஜா: நீ விபரீதம் பண்ணிவிட்டாய்.

பேகம்: இனிமேல், மீர் ஸாஹப் இங்கே வரட்டும்; மென்னியைப்பிடித்து வெளியிலே தள்ளச்சொல்லுகிறேன். நீங்கள்பாட்டுக்குச் சதுரங்கம் ஆடிக்கொண்டிருங்கள், நான் இங்கே அடுப்பை ஊதி ஊதிப் பிராணனை விடுகிறேன். ஹக்கீம் ஸாஹபினிடம் போகலாமோ, இல்லையோ, இனிமேலாவது?

மிர்ஜா வீட்டிலிருந்து கிளம்பினார். ஹக்கீமினிடம் போவதற்குப்பதிலாக மீர் ஸாஹபினிடம் போனார். எல்லா விருத்தாந்தங்களையும் சொன்னார். மீர் ஸாஹப், "எனக்கு அப்பவேதெரியும், இனிமேல் அங்கே இருக்கிறது இங்கிதமாக இராது என்று நடைகட்டினேன். ரொம்ப கோபக்கார்ரி மாதிரி தோன்றுகிறதே, ஐயா? நீங்கள் இப்படி அவளை தலைமேலே தூக்கிவைத்துக்கொண்டு கூத்தாடுகிறது நன்றாக இல்லை. நீங்கள் வெளியிலே எதைச்செய்தால் அவளுக்கு ஆகவேண்டியது என்ன, கேட்கிறேன். வீட்டுவேலை கவனித்துக் கொள்கிறது பெண்டுகளுக்கு ஏற்பட்டது; மற்றவிஷயங்களிலே அவர்களுக்கு என்ன சம்பந்தம்?"

மிர்ஜா: சரி, விடுங்கள் அதை இப்பொழுது எங்கே போடலாம், சொல்லுங்கள்.

மீர்: இதற்கொரு கவலையா? பெரிய வீடு, இங்கேயே போடுகிறது.

மிர்ஜா: பேகம்ஸாஹபாவை எப்படி சமாதானம் செய்வது? வீட்டிலேயே நான் உட்கார்ந்திருந்தபோது இத்தனை சண்டை போட்டாளே, இங்கேயே நான் வந்து உட்கார்ந்துகொண்டுவிட்டால் உயிரோடு என்னை விடமாட்டாளே!

மீர்: கத்திக்கொண்டு கிடக்கட்டுமே, ப்ஹாயீ! நாலுநாள் கத்தினால் தொண்டை வற்றித் தானே ஓய்ந்துவிடுகிறாள். நீங்கள் இன்றுமுதல் கொஞ்சம் தைரியமாக இருக்க வேண்டும்; அவ்வளவுதான்!

2

மீர் ஸாஹபின் மனைவி என்னவோ மீர் ஸாஹப் வீட்டிலிருந்து தூரவிருப்பதையே உசிதமாக எண்ணிக்கொண்டிருந்தாள். ஆகவே, அவள் அவருடைய சதுரங்க ஆவலைப்பற்றி விமர்சனம் செய்ததே கிடையாது; ஆனால் மீர் ஸாஹபிற்கு நேரமானால் ஞாபகப்படுத்தும்படி செய்வாள். இத்தியாதி காரணங்களினால் மீர்ஸாஹபிற்குத் தன்னுடைய மனைவி மிகவும் வினயமும், கம்பீரமும் உள்ளவள் என்று பிரமை ஏற்

பட்டிருந்தது. ஆனால் திண்ணையில் சதுரங்க ஆட்டம் தொடங்கின நாள்முதல் மீர் ஸாஹப் வீட்டைவிட்டு அசையாமலிருக்கவே பேகம்ஸாஹபாவிற்கு அவளுடைய சுதந்திரத்திலே தடங்கல் ஏற்படவே மிகுந்த கஷ்டம் ஏற்பட்டது. அவள் அடிக்கடி ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்துக் கைகளைப் பிசைந்துகொண்டிருந்தாள்.

வேலைக்காரர்களும் காதைக் கடித்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். ஏன் அவர்கள் முணுமுணுக்க மாட்டார்கள்? இதுவரையில் சும்மா உட்கார்ந்து மேலே ஈ மொய்க்காமல் ஒட்டிக்கொண்டிருந்தார்கள். வீட்டிலே யார் வந்தாலென்ன, யார் போனாலென்ன பேச்சா மூச்சா ஒன்றும் கிடையாது! இப்பொழுது என்னடா என்றால் சதா விரட்டு விரட்டு என்று விரட்டல்தான், லக்ஷ நிட்டுகள்தான்! இப்போது வெற்றிலை, சற்றுநேரத்திற்கெல்லாம் பரோடா, முட்டை, அது, இது, தீனி! அரே அல்லாஹ்! ஹுக்காவைப்பற்றிக் கேட்க வேண்டாம், ஒரு காதலனுடைய ஹிருதயம்போல எப்போதும் எரிக்துகொண்டு இருக்கவேண்டும். வேலையாட்கள் பேகம்ஸாஹபாவினிடம்போய், "ஓ அம்மாவே! நாள்பூரா ஓடி ஓடி எங்களுடைய உள்ளங்கால்கள் தேய்ந்துபோய் விட்டன. என் அம்மா, காலையிலே உட்கார்ந்தால் அந்திவேளையிலே எழுந்திருக்கக்கூட மனம்வராமல் ஆடுகிற இந்த ஆட்டமும் ஒரு ஆட்டமா அம்மா! ஏதோ கொஞ்சநேரம் பொழுதுபோக ஆடலாம், அவ்வளவுதான்! நாங்கள் என்ன சொல்லவிருக்கிறது! எஜமானி அம்மாவுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் நாங்கள், எப்படிக் கட்டளையிடுகிறீர்களோ கேட்க தயாராக இருக்கிறோம். ஆனால் அம்மா, இது ரொம்ப மோசமான விளையாட்டு இந்த விளையாட்டு விளையாடுகிறவர்கள் உருப்படுவதில்லை என்று ஊரிலே சொல்லிக்கொள்ளுகிறார்கள்; வீட்டிலே ஒரு ஆபத்தும் நேர்ந்து போகக்கூடாதென்று நாங்கள் அல்லாவைத்தொழுதுகொண்டிருக்கிறோம். ஒரு வீட்டிலே இந்த ஆட்டம் ஆடினால் அந்தத்தெரு பூராவுக்கும் கெடுதல் அம்மா! தெருப்பூராவும் இதே பேச்சுத்தான் காதிலே கேட்கிறது. நீங்கபோடுகிற சோறு நாங்கள் தின்கிற சோறு; எங்கள் எஜமானைப்பற்றி நாலு பேர்கள் நாலு விதமாகப் பேசுகிறதைக் கேட்கும்போது மனசுக்கு வருத்தமாக இருக்கிறது. ஆனால் நாங்கள் என்ன செய்கிறது?" என்று முறையிட்டுக்கொண்டார்கள். பேகம்ஸாஹபாவும், "எனக்கும் கூடத்தான் இது பிடிக்கவே இல்லை, ஆனால் அவர் யார் சொல்வதையாவது கேட்டால்தானே, என்ன செய்யலாம்!" என்று சொன்னாள்.

தெருவிலே இருந்த சில பழையபஸலி கிழம் கட்டைகள், விதவிதமாக அச்சானியப் பட்டுக்கொண்டிருந்தார்கள். "கைரியத் இல்லை; இது நல்லத்துக்குக் காலம் இல்லை நம்முடைய பெரிய மனிதர்கள் எல்லோரும் இப்படி இருந்தால் அப்புறம் நாட்டைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும். இந்த ராச்சியம் சதுரங்கத்தினாலேயேதான் நாசமாகப்போகிறது. அபசகுனம் தோன்றுகிறதே" என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

ராஜ்யம் அல்லோகல்லோலப்பட்டது. பிரஜைகள் பட்டப்பகலிலேயே கொள்ளையிடப்பட்டனர். ஏனென்றுகேட்பாரில்லை. நாட்டுப்புறத்திலிருந்த திரவியங்கள் அனைத்தும் லக்ஷ்மணபுரியால் உறுஞ்சப்பட்டு வேசிகள், கூத்தாடிகள், உல்லாஸ ஸாமக்கிரியைகள் செய்பவர்கள் இவர்களுடைய கைகளில் போய்ச்சேர்ந்தன. ஆங்கிலேயக் கம்பெனிக்காரர்களுடைய கடனது வட்டியும், முதலும், வட்டிக்கு வட்டியுமாக தினம் தினம் விசுவ ரூபமெடுத்து வளர்ந்தோங்கத் தொடங்கியது கம்பளி நனைய நனைய பாரமாவதுபோல கடன் சுமை நாளாக, நாளாக அதிகரித்துக்கொண்டே இருந்தது. தேச நிர்மாண பரிபாலன திட்டங்கள் சரிவர இல்லாமையால் வருஷ வரிகள் சரிவர வசூலாகவுமில்லை. ரெஸிடெண்ட் அடிக்கடி எச்சரித்துக் கொண்டிருந்தான்.

ஆனால் ஜனங்களோ சிற்றின்பத்திலே மயங்கிக்கிடந்தனர், யாராவது எதையாவது காதிலே போட்டுக்கொண்டால் தானே?

நிற்க, மீர்ஸாஹபின் வீட்டிலே சதுரங்கம் தொடங்கி சில மாதங்கள் ஆகிவிட்டன. தினம் தினம் புதிய பிளான்கள் போடப்பட்டன; புதியப்புதிய கோட்டைகள் பிடிபட்டன. புதிய புதிய அணிவகுப்புகள் நடந்தன; பரஸ்பரம் சண்டையும் வரும். சில சமயங்கள் 'அடாபுடா' என்று மரியாதையின் எல்லையைத்தாண்டி வார்த்தைகளாடும் நிலைமைகூட வந்துவிடும்; தண்ணீரை வெட்டினால் தட்சணமே சேர்ந்துகொள்வது போல இரண்டுநேயர்களும் அடுத்த கணம் ஒருவரோடொருவர் ஐக்கியமாகிவிடுவார்கள். சிலசமயங்களில் சதுரங்க யானை, குதிரைகளெல்லாம் திடீரென்று தெருவீதியிலே வந்துவிழும்; மீர் ஸாஹப் உள்ளே போய்விடுவார்; மிர்ஜா ஸாஹப் மீசையைத் தடவிக்கொண்டு வீட்டுக்குப் போய்விடுவார்; ஆனால் இரவு நித்திரையிலே மனஸ்தாபங்களெல்லாம் மறைந்துவிடும்; மறுநாள் விடியற்காலம் இரண்டு நண்பர்களும் திண்ணையிலே வந்துகூடிவிடுவார்கள்.

ஒருநாள் இரண்டு நண்பர்களும் சதுரங்கத்திலே ஆழ்ந்திருந்தார்கள். அப்போது மீர் ஸாஹபை விசாரித்துக்கொண்டு வந்துசேர்ந்தான் குதிரைமேலே ஒரு பட்டாளத்து சேவகன். மீர் ஸாஹப் வெலவெலத்துப் போனார்; பிராணன் பாதி பறந்துபோயிற்று. என்ன இது தலைக்குமேலே சங்கடம்! எதற்காகத் தேடிக்கொண்டு வந்தான் அவன்? என்னவோ ஒன்றும் நல்லதுக்கு வரவில்லை. கதவைச் சார்த்தித் தாழ்ப்பாள் போட்டார். வேலைக்காரர்களிடம் "வீட்டிலே இல்லை என்றுசொல்லிப் போகச்சொல்லு" என்றார்.

குதிரைசவாரிக்காரன்: வீட்டிலே இல்லை என்றால் வேறு எங்கே இருக்கிறார்?

ஒரு வேலைக்காரன்: எனக்குத் தெரியாது. என்ன காரியம்?

குதிரைக்காரன்: உன்னிடமா சொல்லுவேன்? உன் எஜமானுக்கு அழைப்பு வந்திருக்கிறது. பட்டாளத்தில் சேரும்படி உத்தரவாகலாம். ஜாகீர்தார் இல்லையா அவர், என்ன சும்மா வேடிக்கையா? சண்டையிலே முன்னடிபோய் நிற்கவேண்டும்; உன் எஜமான் சூரத்தனத்தைக் காட்டவேண்டும். என்ன?

வேலை: சரி. போய்வாருங்கள் சொல்கிறேன் ஸலாம்.

குதிரை: அடே நீ ஒன்றும் சொல்லவேண்டாம்; சொல்வதற்கு ஒன்றுமே இல்லை. கூடவே அழைத்துக்கொண்டுவரும்படி உத்தரவு ஆகி இருக்கிறது.

குதிரைக்காரன் போய்விட்டான். மீர் ஸாஹபின் ஆத்மா நடுநடுங்கிற்று. 'ஜனப்! என்ன பண்ணலாம்?" என்று மிர்ஜாஸாஹபைக் கேட்டார்.

மிர்ஜா: ரொம்ப உபத்திரவமாக அல்லவா வந்துசேர்ந்திருக்கிறது. நாளை என்னை எங்கேயாவது கூப்பிட்டுத் தொலைக்கப்போகிறான்!

மீர்: சைத்தான், நாளைக்கு மறுபடியும் வருகிறேன் என்று சொல்லிவிட்டு போயிருக்கிறானே.

மிர்ஜா: ஆபத்துதான்; வேறு என்ன? சண்டைக்குப் போனால் செத்து அல்லவா ஐயா போகவேண்டும்! விடமாட்டானே. ஐயா, உயிரை வைத்துக்கொல்வான்.

மீர்: ஜனப்! ஆ! ஒரு நல்ல யோசனை! இனிமேல் வீட்டிற்கே வராவிட்டால்! கோமதி ஆற்றங்கரையில் ஜனநடமாட்டமில்லாத ஒதுப்புறமான இடத்திலே காம்பாட்டுக்கு ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தால் யாருக்குத் தெரியும்? எப்படி

ஜனுப் உபாயம்? எவனையா கண்டான்? குதிரைமேலே ஏறிக்கொண்டு அவன்தான் வரட்டும், அவன் பாட்டன்தான் வரட்டும், என்ன பண்ணுவான். ஏமாந்த சோணகிரி போகிருன் எக்கேடு கெட்டு!

மிர்ஜா: அல்லாஹ்! என்ன மூளை, என்ன யுக்தி! ஜனுப், உங்களைத்தவிர ஒரு மச்சானுக்கும் இந்த யுக்தி மூளையிலே பிடிபடாது!

மீர் ஸாஹபினுடைய பேகம் ஸாஹபானவள் அந்தக்குதிரைவீரனிடம், "நன்ருக விரட்டினுய் நீ" என்று சொன்னுள். "இந்த முட்டாள்களை யெல்லாம் விரல் முனையிலே ஆட்டிவைக்க மாட்டேனு? இவர்களுடைய மூளைகளையும், தைரியத்தையும் சதுரங்கம் சாப்பிட்டுவிட்டது. இனிமேல் தப்பிப்போய்க்கூட விட்டு வழி வரமாட்டார்கள்" என்று அவன் தன்னுடைய விரப்பிரதாபங்களை அளந்து கொட்டினுன்.

3

மறுநாள் இரு நண்பர்களும் கிழக்கு வெளுக்குமுன்பே விட்டைவிட்டுக் கிளம்பினர்கள். ஒரு ஜமக்காளம், வெற்றிலைப்பெட்டி நிரம்ப தாம்பூலம், புகையிலை வகையரு, ஹுக்கா எல்லாம் எடுத்துக்கொண்டு கோமதி நதி தீரத்திலே ஈ, காக்கை கூட அருகினில் வராத ஒரு பாழடைந்த மசூதியிலே பிரவேசம் செய்தார்கள்; மசூதி நவாப் ஆஸிப் உத்தௌலாவின் முப்பாட்டன் காலத்திலே கட்டப்பட்டது. ஜமக்காளத்தை விரித்துவிட்டு, ஹுக்காவில் தூபம் போட்டுவிட்டு ஆட்டம் ஆரம்பித்ததும் இந்த மாயாவுலகம் மறந்து போய்விட்டது இரண்டு பேர்களுக்கும். 'சகடு' 'கட்டு' இப்பேர்ப்பட்ட பரிபாஷைச் சொற்களைத்தவிர வேறு ஒரு வார்த்தையும் அவர்கள் வாய்களிலிருந்து வரவில்லை. இத்தனை ஏகாக்ர சித்தத்துடன் எந்த யோகியும் சமாதியிலிருந்திருக்க முடியாது. மத்தியானம் பசியுண்டானதும் தூரத்திலிருந்த ஒரு ஆப்காரியின் கடைக்குப் போய் என்னவது வாங்கித்தின்றுவிட்டு வந்து, ஹுக்காவிலே தம் அடித்துவிட்டு, மறுபடியும் யுத்தபூமியில் இறங்கிவிடுவது வழக்கம். ஆனல் பலசமயங்களிலும் அவர்கள் ஆட்டத்திலேயே கண்ணுகி, பசிநோக்கார், கண்துஞ்சார்.

நிற்க, தேசத்தினுடைய அரசியல் நிலைமையானது மகாபயங்கரமானதாக ஆகிக்கொண்டே இருந்தது. கம்பெனியாருடைய சேனைகள் லக்ஷ்மணபுரியை நோக்கி வந்துகொண்டிருந்தன. நகரத்திலே கோலாகலமாகவிருந்தது. ஜனங்கள் குழந்தை குட்டிகளைத் தூக்கிக்கொண்டு நாட்டுப்புறத்தை நோக்கி ஓடினுர்கள். ஆனல் நம்முடைய கதாநாயகர்கள் இதையெல்லாம் லக்ஷ்யம் பண்ணுகிறவர்களா? அல்லவே அல்ல. அவர்கள் சந்து பொந்துகளில் நுழைந்து கொல்லைக்காட்டு வழியாக விட்டுக்குப் போய்விட்டு வந்துவிடுவார்கள்; ராஜவீதிகளில் போனல் யாராவது பிடித்துக்கொண்டு போய்விடுவார்கள் என்று பயம். ஆயிரக்கணக்கான ரூபாய்கள் வருமானமுள்ள ஜாகீரை சும்மாவே அனுபவிக்கமட்டும் ஆசை!

ஒரு நாள் இரண்டு நண்பர்களும் ஆட்டமாடிக்கொண்டிருந்தனர். மீர் ஸாஹபின் பக்கம் கொஞ்சம் சனி; மிர்ஜா ஸாஹப் அவருடைய காய்கள் நகரவொட்டாமல் நிறை அடித்துக்கொண்டிருந்தார். அந்த நேரந்தன்னிலே கம்பேனிச் சேவகர்கள் சிலர் வருவது தெரிந்தது. வெள்ளைக்கார சிப்பாய்கள் லக்ஷ்மணபுரியை கைப்பற்றிக்கொள்ள வந்த சேனையைச் சேர்ந்தவர்கள் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல இருவரும் உணர்ந்துகொண்டார்கள்.

மீர் ஸாஹப் சொன்னுர்: வெள்ளைக்கார சேனை; ஆண்டவனுக்குப் பாத்தியா ஓதுகிறேன்: ஆள் தப்ப வேணும்.

மிர்ஜா: வரட்டும் ஐயா! இதோகட்டு; ஜனுப், சரியாக நகர்த்தும் காயை.

மீர்: இருங்கள் ஸாஹப்! அப்படி மறைவிலேபோய் நிற்கலாம். கிளம்புங்கள்.

மிர்ஜா: அவர்கள் இங்கே வரமாட்டார்கள். ஆட்டத்தை விடக்கூடாது, ஜனப்.

மீர்: அரே அல்லாஹ்! துப்பாக்கியைப் பாரையா, எத்தனை நீளம்? ஐயாயிரம்பேர் வந்திருக்கிறார்களாம். தடித்தடி ஆண்பிள்ளைகளாக இருக்கிறார்கள்; வெள்ளைக் குரங்குகள் மாதிரி இருக்கிறார்கள். பயமாக இல்லையா, ஜனப், உங்களுக்கு?

மிர்ஜா: அந்த சாக்குப்போக்கெல்லாம் வேணாம் பிள்ளை! நம்கிட்டே செல்லுபடி ஆகாது இந்த சூழ்ச்சியெல்லாம். அச்சா, தேகோ, இதோ கட்டு!

மீர்: என்ன ஆளையா நீர்? ஊர்பூராவும் ஆபத்து வந்துகிடக்கிறது; உங்களுக்கு இங்கே ஆட்டம் ஆடவேணும், கட்டுக்கட்ட வேணும். வெள்ளைக்காரன் ஊரை பிடித்துக்கொண்டால் வீட்டுக்கு எப்படிப் போகிறது, ஏதாவது மூளையிலே யோசனை பண்ணினீரா, ஜனப்?

மிர்ஜா: வீட்டுக்குப் போகும்போது பார்த்துக் கொள்ளலாம்—ராசா பார்வை; மாத் ஆகிவிடும். ஆட்டத்தை கவனியுங்கள், ஜனப்!

வெள்ளைக்கார சிப்பாய்கள் தங்கள் வழியே போய்விட்டார்கள்; ஆட்டம் கலைகிறவழியாக இல்லை; சாப்பாட்டு நேரம் வந்துவிட்டது.

மீர்: இன்று சாப்பாட்டுக்கு என்ன செய்கிறது? பசி இல்லையா உங்களுக்கு?

மிர்ஜா: ரம்ஜான் இல்லை? பசிக்கிறதோ? சாப்பிடக்கூடாது ஒன்றும்; இஸ்லாமானவர்களுக்கு இப்போது விரதம்.

மீர்: அதுசரி. என்ன ஆகிறதோ ஊர் நிலைமை?

மிர்ஜா: ஊரிலே ஒன்றும் நடக்காது. எல்லாபேர்களும் சாப்பிட்டுவிட்டு சுகமாக தூக்கம் போட்டுக்கொண்டிருப்பார்கள். நவாப் ஸாஹப் கூட குஷியாகத்தான் இருப்பார்.

ஆட்டம் நடுவில் கொஞ்சநேரம் கலைந்து இருந்தது. இரண்டு வியக்திகளும் மறுபடியும் விளையாட உட்கார்ந்தபோது மணி மூன்று இருக்கும். இப்போது மிர்ஜா ஸாஹபின் கை கொஞ்சம் ஓய்ச்சல்; மீர் ஸாஹபின் ஸைன்யங்கள் மிர்ஜா ஸாஹபின் ஸைன்யங்களை விரட்டி விரட்டி அடித்துக்கொண்டிருந்தன. நான்கு மணி ஆயிற்று பட்டாளம் திரும்பிவரும் சப்தம் கேட்டது. நவாப் வாஜித் அலி பிடிபட்டுவிட்டார்; சேனை அவனை எங்கோ யாருமறியாத ஓர் இடத்திற்குக் கொண்டுபோய்க்கொண்டிருந்தது. பட்டணத்திலே ஒரு அலங்கோலமுமில்லை; குத்து, வெட்டு ஒன்றும் கிடையாது. ஒரு சொட்டு ரத்தம் கூடச் சிந்தவில்லை. இதுவரையில் ஒரு சுதந்திர தேசத்தின் அரசனும் இப்படிக் கத்தியின்றி, ரத்தமின்றித் தோற்கடிக்கப்படவில்லை. தேவகணங்கள் பிரஸன்னமடையும் அஹிம்ஸை அல்ல இது; இது பெரிய, பெரிய, மகா, மகா கோழைகள்கூடக் கண்ணீர் பெருக்கக்கூடிய கோழைத்தனம். விசாலமான அயோத்யா தேசத்தின் நவாப் கேவலமாகக் கைதியாக்கப்பட்டு இழுத்துக்கொண்டு போகப்படுகிறான்; லக்ஷ்மணபுரி ஒய்யாரத்தூக்கம் தூங்குகிறது! அரசியல் வீழ்ச்சிக்கு இதற்கப்பாலும் எல்லை உண்டோ?

மிர்ஜா: ஜனப்! நவாப் ஸாஹபை அந்த வெள்ளை சைத்தான்கள் கைது செய்து கொண்டு போகிறார்கள்.

மீர்: ஹோ! இதோ உம்முடைய நவாபு. ராஜா கைது!

மிர்ஜா: ஜனப், கொஞ்சம் இருங்கள். மனம் ஒன்றிலும் ஓடவில்லை.

பாவம், நம்முடைய நவாப் இப்போது ரத்தக்கண்ணீர் விட்டுக்கொண்டிருப்பார். ஆஹ்!

மீர்: ஏன் அழுமாட்டார்? லக்ஷ்மண புரியினுடைய சுகமும், சௌக்கியமும் வெள்ளைக்காரனுடைய கைதியாக இருந்தால் எப்படிக் கிடைக்கும்—ஆட்டத்தைப்பாரும்!

மிர்ஜா: எல்லாருக்கும், எல்லாக்காலமும் ஒரேமாதிரியாகவா இருக்கும்? அடடா, எத்தனை பரிதாபமாக இருக்கிறது? பாவம்!

மீர்: ஆமாம், அப்படித்தான் இருக்கிறது. இருக்கட்டும், இந்தத்தடவை உம்மாலே தப்பமுடியாது; ஒரு காய் நகர்த்தினல் போதும்.

மிர்ஜா: ரொம்ப மோசமான ஆள், ஜனப் நீங்கள்! ஈவு இறக்கம் கொஞ்சங்கூட நெஞ்சிலே கிடையாதவர். இவ்வளவு ஆபத்தான சம்பவத்தைப் பார்த்துக்கூட உங்களுக்கு லவலேசம்துக்கமுண்டாகவில்லை. ஹும்! வாஜித் அலிஷா! தங்களுக்கு இந்தக்கதியா நேர வேண்டும்?

மீர்: ஜனப்! உங்கள் பாதுஷாவை முதலில் காப்பாற்றுங்கள்! அப்புறம் நவாப் ஸாஹபிற்காக வருத்தப் படலாம்.

நவாப் வாஜித்அலிஷாவைக் கொண்டு சென்ற பட்டாளம் போய் வெகு நேரமாகிவிட்டது. மிர்ஜா ஆட்டத்தைக் கவனித்தார். தோல்வி அவருடைய மனதைப் புண்படுத்தியது. "ஜனப் நவாப் ஸாஹபின் துக்கத்திலே ஒப்பாரி (மர்ஸியா) வைத்து அழலாமே இனிமேல்" என்று மீர் ஸாஹப் சொன்னர். ஆனல் மிர்ஜாஜியின் ராஜபக்தி அவருடைய தோல்வியிலே மறைந்துபோய் விட்டது. அவர் பழிக்குப்பழி வாங்குவதற்காகத் துடிதுடித்துக்கொண்டிருந்தார்.

4

சாயங்காலம் ஆயிற்று பக்ஷிகள் தத்தம் கூண்டுகளை நோக்கித் திரும்பலாயின. வௌவால்கள் பறக்கத்தொடங்கின. தூரத்தில் நரிகள் ஊளையிடும் சப்தம் கேட்டது. ஆனல் இரண்டு சதுரங்க வீரர்களும் ரத்த வெறி பிடித்துச் சண்டையிடுவதுபோல உக்கிரமாக சதுரங்கம் ஆடிக்கொண்டிருந்தனர். மிர்ஜாஜி சேர்ந்தாற்போல மூன்றுதடவைகளாகத் தோல்வி அடைந்திருந்தார்; நாலாந்தடவை ஆட்டமும் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. இத்தடவையேனும் ஜயித்துவிட வேண்டுமென்ற திட நிச்சயத்துடன் தான் பிடிவாதமாக ஒவ்வொருதடவையும் ஆட்டத்திலீடுபட்டிருந்தார். ஆனல் ஒவ்வொருதடவையும் தோல்வி ஏற்படக்கூடிய விதமாக எக்கச்சக்கமாகக் காய்கள் நகர்ந்துகொண்டிருந்தன. தோல்வி அடைய அடைய பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்ற உத்வேகம் அதிகரித்துக்கொண்டிருந்தது. மீர் ஸாஹப் குதூகலத்தினலே கஜல் பாடிக்கொண்டிருந்தார்; என்னவோ புதையல் எடுத்தது மாதிரி சந்தோஷப்பட்டுத் தாளம் போட்டுக்கொண்டிருந்தார். மிர்ஜாஜி இந்தத் தமாஷ்களை யெல்லாம் பல்லைக்கடித்துப் பொறுத்துப் பொறுத்து உள்ளூரப் பொருமிக்கொண்டிருந்தார்; எவ்வாறுவது ஜெயிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தும் காய்களின் நிலைமை மோசமாக இருந்ததால் தைரியமிழந்தார். ஒவ்வொரு அல்ப சங்கதிக்கும் சள்ளு, புள்ளென்று எரிந்து விழுந்தார். "ஜனப், ஏன் மாற்றுகிறீர்கள்? ஒரு தடவை நகர்த்திவிட்டு மறுபடிமறுபடி மாற்றக்கூடாது. காயின்மேல் ஏன் கை வைக்கிறீர்கள்? நகர்த்தின பிறகு கையால் தொடக்கூடாது. எத்தனை நேரம்? காயை நகர்த்த அரைமணியா? ஐந்து நிமிஷத்திற்குமேல் ஆனல் தோற்றதாக அர்த்தம்." என்று எல்லாம் கோபதாபங்களுடன் சொல்லிக்கொண்டிருந்தார்.

மீர் ஸாஹபின் மந்திரி அடிபட்டுப் போயிற்று. "அவர் நான் எப்போது நகர்த்தினேன்?" என்ருர்.

மிர்ஜா: எல்லாம் நகர்த்தியாகிவிட்டது. காயை அங்கேயே வைத்துவிடுங்கள்—அதே இடத்தில்.

மீர்: ஏன் இங்கே வைப்பேன்? நான் காயை நகர்த்தின பிறகு அல்லவா நீங்கள் அதை வெட்டலாம்! நான் ஆடுவதற்குள் நீங்களே ஆடி விட்டால்............?

மிர்ஜா: நீங்கள் ஏமாற்றுகிறீர்கள், நகர்த்திவிட்டு. நம்மிடம் செல்லாது ஐயா உம் தந்திரம் எல்லாம்.

மீர்: ஏமாற்றுகிறவேலை உமக்குத்தான் தெரியும். ஜயம் தோல்வி அவனவன் தலையெழுத்துப்போல நடக்கும். ஏமாற்றுகிறதனால் ஒருவனும் ஜயிக்க முடியாது.

மிர்ஜா: இந்த ஆட்டத்திலே உமக்கு தோல்வி ஏற்பட்டுவிட்டதா?

மீர்: ஏன் நான் தோற்றுப்போகிறேன்?

மிர்ஜா: அப்போது காயை அதே இடத்திலேயே வைக்கிறதுதானே!

மீர்: ஏன் வைப்பேன்? முடியாது.

மிர்ஜா: வைக்கமாட்டீர்களா? வைத்துத்தான் ஆகவேணும். வையுங் ஜனுப்!

தகராறு வளர்ந்தது. இருவரும் தங்கள் தங்கள் கட்சிகளையே குரங்குப் பிடியாகப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். இவரும் சளைக்கவில்லை; அவரும் சளைக்கவில்லை. இங்கு எழுதக்கூடாத வார்த்தைகள் ரொம்ப தாராளமாகப் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

மிர்ஜா சொன்னார்: உங்கள் வம்சத்திலே யாராவது சதுரங்கம் ஆடியிருந்தால் இதன் சட்ட திட்டங்கள் உங்களுக்குத்தெரியும். அவர்கள் புல் செதுக்கிக்கொண்டிருந்தார்கள்; நீங்கள் சதுரங்கம் ஆடமாட்டீர்களா, சதுரங்கம்! சொத்து வந்துவிட்டதனால் மட்டும் பிரபு ஆகிவிட மாட்டீர்கள் ஜனுப்!

மீர்: புல்லா? புல் செதுக்கியது தங்களுடைய தகப்பனார். நாங்கள் ஏழு தலைமுறையாக சதுரங்கம்விளையாடி வருகிறோம்.

மிர்ஜா: போங்கள் ஜனுப்! காஜிஉத்தீன் ஹைதரிடம், சமையல் காரனாக இருந்து வயதாகி கிழமான பிறகு இன்று பிரபு ஆகிவிட்டீரோ? பிரபுவாகிவிடுகிறது சும்மா வேடிக்கை விளையாட்டு இல்லை.

மீர்: ஏன் உங்கள் பெரியவர்களை யெல்லாம் நினைக்கும்படி செய்கிறீர்கள்? உங்கள் முப்பாட்டனார் செய்திருந்த பிரியாணியைச் சாப்பிட்டுவிட்டு, அவரைச் சமயல்காரனாக வைத்துக்கொள்ளும்படி பாதுஷாவினிடம் சிபார்சு செய்தது எங்கள் முப்பாட்டனார். அந்த நன்றியை மறந்துவிட்டீரே, ஜனுப்! செய்நன்றி............

மிர்ஜா: அரே பாயி! புல்வெட்டி! மேலே மேலே பேச்சு ஓடவேண்டாம்.

மீர்: நாவடக்கிப்பேசும், கபர்தார்! இல்லாவிட்டால் உமக்கு நல்லதற்குக் காலம் இல்லை. இந்த மாதிரி பேச்சுக்களைக்கேட்டு நமக்குப் பழக்கமில்லை. என்னை ஒருவன் நிமிர்ந்து பார்த்தால் கண்ணைப் பிடுங்கி விடுவேன். சாமர்த்தியம் உண்டா உமக்கு?

மிர்ஜா: என் சாமர்த்தியத்தைப் பாக்க ஆசையாக இருக்கிறதா? பலே! வாரும் ஒருகை பார்த்துவிடுவோம்!

மீர்: சஹபாஷ்! அவ்வளவு மேலே போய்விட்டீரா? உமக்குச் சளைத்தவர் இங்கே ஒருத்தரும் இல்லை.

இரண்டு நண்பர்களும் இடையிலிருந்து உடைவாள்களை உருவினர்! நவாப்

காலம்; எல்லோரும் வாள், கட்டாரி, பிச்சுவா, கத்தி எல்லாம் வைத்திருந்தார்கள். இரண்டுபேர்களும் உல்லாசபுருஷர்கள்; ஆயினும் பயங்காளிகள், கோழைகள் அல்ல, அவர்களிடையே ராஜீய உணர்ச்சியே இல்லாமல் தொலைந்து போய்விட்டது; அரசனுக்காக, அரசாங்கத்திற்காக எதற்காகச் சண்டையிட வேண்டும், ஏன் சாகவேண்டும் என்ற எண்ணமே அவர்களுக்குக் கிடையாது. ஆனால் சொந்த விஷயங்களிலே அவர்களுடைய வீர்த்தனம் போய்விடவில்லை. இருவரும் அடிவரிசை போட்டார்கள்; வாட்கள் மின்னின; சபக் சபக்கென்று மோதிக்கொண்டன. தங்களுடைய பாதுஷாவுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர்கூடச் சிந்தாதவர்கள், சதுரங்கத்தின் மந்திரியைக் காப்பாற்றுவதிலே பிராணனை இழந்தார்கள்.

இருட்டிப்போய்விட்டது. சதுரங்கம் போட்டபடியே கிடந்தது. இரண்டு சதுரங்க ராஜாக்களும் தங்கள் தங்கள் ஆசனங்களில் அமர்ந்து, இந்த இரண்டு வீரர்களின் மரணத்திற்காக வருத்தப்படுவதுபோல மௌனமாக இருந்தார்கள்.

நாலாபுறமும் நிசப்தம் நிலவியது. பாழடைந்த குட்டிச்சுவர்களும், புழுதிபடிந்த தூண்களும் அலங்கோலமான வளைவுகளும் இந்த இரு பிணங்களையும் பார்த்து வருந்திக்கொண்டிருந்தன.

தன்குடும்பத்தில் சம்பாதிக்கிறவர் **இந்த கனவான் ஒருவரே.** அவருக்கு நீண்ட ஆயுளும், நல்ல அதிருஷ்டமும் வரும்படி நாம் பிரார்த்திக்கிறோம். **ஆனால் காலம் மிகவும் நிச்சயமில்லாததாய் இருக்கிறது;** அதனால் அவருக்கு ஏதாவது கெடுதல் நேர்ந்தால், அவருடைய குடும்பத்தை யார் சம்ரக்ஷிப்பது?

“நேஷனல் இன்ஷ்யூரன்ஸ்” தான்

அதில் அவர் இன்ஷ்யூர் செய்திருந்தால்—

நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,

7, கவுன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.

ஸப் ஆபீஸ்:	**மதரூஸ் பிராஞ்சு:**	**ஸப் ஆபீஸ்:**
171, புதுத்தெரு,	58, கோபதிநாராயண ஸ்வாமிசெட்டி ரோடு,	5, கெம்பகோடா ரோடு,
	தியாகராயநகர்,	
மதுரை.	மதரூஸ்.	பெங்களூர்.

ஓர் புதிய பாஸ நாடகம்.

ய. மஹாலிங்க சாஸ்திரி, எம். ஏ., பி. எல்.

(தொடர்ச்சி)

இரண்டு ஸகிகளுடன் ஸீதை பிரவேசம்.

முதல் தோழி: ராஜகுமாரி, இந்நந்த வனத்தில் எங்கு உட்காருவோம்?

மற்றவள்: மாதவிக்கொடி மண்டபத்திலாவது அசோக மரத்தடியிலாவது உட்காரலாம்.

ஸீதை: தோழி சந்திரகலையே, நீ ஏன் என்னை ராஜகுமாரி என்று அழைக்கிருய்? எப்போதும்போல் தோழி என்று கூப்பிடவில்லை.

சந்திரகலை: நீ ஏன் எப்போதும்போல் இருக்கவில்லை?

ஸீதை: மதுகரிகே, இவள் ஏன் இப்படி பேசுகிருள்? நான் எப்போதும் உள்ள உங்கள் தோழி ஸீதை தானே!

மதுகரிகை: எனக்கும் நீ வேறுமாதிரியாகத்தான் தோன்றுகிருய். உன் விளையாட்டெல்லாம் எங்கேயோ போய்விட்டதே. ஏதோ பயந்தவளைப்போன்ற உன்னுடைய கண்கள் சஞ்சலமற்றவையாகிவிட்டன. அவைகள் சிவந்து தோன்றுவதால் நீ கண் விழித்தவள்போல் காணப்படுகிருய். ஒரேமனதாய் எதைத்தான் யோசித்துக்கொண்டிருக்கிறுயோ தெரியவில்லை!

சந்திரகலை: இன்று இவ்வளவு துரிதமாய் இங்கு வரவேண்டிய காரணமென்ன?

மதுகரிகை: உனக்குப் பருவ காலத்தின் கலக்கம் ஏற்பட்டிருக்கவேண்டும். எந்த புண்ணிய புருஷன் உன் கொடிபோன்ற கையை தன் கழுத்தில் வைத்தணைத்துக்கொள்ளக் கொடுத்துவைத்திருக்கிருனே!

ஸீதை: போங்கோடி போங்கள், நீங்கள் சொல்வது ஒன்றும் எனக்குப் புரியவில்லை.

ராமன்: ஆமாம்! எனக்கும் அவளிடத்து மாறுதல் தோன்றுகிறது. இவள் யாராவதொரு மஹர்ஷியின் புதல்வியாகவிருந்து எனக்குக் கிடைக்கத் தகாதவளா யில்லாமலிருக்க வேண்டும். அல்லது வேறு ஒருவனுக்கு பிராப்தி இருந்து எனக்கு கிடைக்காவிட்டால் என்ன செய்வது! இத்த ராமன் கட்டும் மனக்கோட்டையெல்லாம் பாழாய் போய் விடுமே! (ஆலோசித்து)—அப்படி ஆகிவிடாதென்று தோன்றுகிறது. ஏனெனில், இவள் எனக்கு அர்ஹதை உள்ளவள், கிடைக்கக் கூடியவள் என்பதற்கு என் மனமே அத்தாக்ஷி. பரிசுத்தமான மனம், தவிர்க்கத்தக்க வழியில் செல்லாது.

ஸீதை: இந்த வனத்தில் எப்போதும் போல் ஏன் என் மனம் நிம்மதியடையவில்லை? என்னல் சொல்ல முடியவில்லை. சரீரத்திலோ தீ பற்றி எறிவதுபோலிருக்கிது. நடக்கக் கூட சக்தியற்றவளாகிவிட்டேன்.

மதுகரிகை: ராஜகுமாரி, இந்த ஸலவைக் கல்லின்மேல் உட்கார்ந்தால் பூ மணம் வீசும்; நந்தவனமாருதம் உனக்கு சுகம் தரும்.

ஸீதை: சரி, உட்காருவோம்.

(மூவரும், உட்காருகிறார்கள்)

ஸீதை: (பெருமூச்சு விட்டு)—உடம் பெரிச்சல் அதிகமாகிறது.

(மதுகரிகை தாமரை இலையினால் விசிருகிருள்)

ராமன்: இவளுடைய தாபத்தினால் எனக்கும் தாபம் உண்டாகிறது. இவ்வழகிய உத்யானத்தில் நதி ஓடுகிறது. மந்தமாருதம் மணத்துடன் வீசுகிறது. என் சரீர தாபம் உண்டாக வேண்டும்? இதற்குக் காரணம் அறிவேன். இருவர் மனம் ஒன்று பட்டுவிட்டால், ஒருவருடைய தாபம் மற்றொருவரை அடைகிறது. இவள் தாபம் என்னைத் தாக்குகிறது.

ஸீதை: இந்த எரிச்சல் குளிர்ந்த காற்றினால் அடங்காது. என் வீணாய் சிரமப்படுகிறீர்கள்?

மதுகரிகை: (தனியாக)—சந்திரகலே, நான் நினைத்தபடிதான் இருக்கிறது. இது சரீரதாபம் அல்ல. மனதினுடையது.

சந்திரகலே: (தனியாக)—என் உடனே ராஜகுமாரன் ராமனிடம் சென்று உள்ளபடி நிலைமையை தெரிவிக்கக் கூடாது?

மதுகரிகை: (தனியாக)—ஸ்ரீராமன் விசுவாமித்ரரிடம் அடங்கியிருப்பவர் வழுவா விரதம் பூண்டவர். அவரை நமக்கிணங்குபவராகச் செய்ய முடியாது.

ராமன்: ஸந்தாபத்தினால் வெளுத்த வதனமுடைய இவள் மேனியை என்ன வென்று சொல்வேன். ஆஹா! கண்ணால் பார்க்கும் போதே என் உள்ளத்தில் அமிர்தப் பெருக்கை வர்ஷிக்கும் ஸுந்தர வதனி இவள். ஸ்வயம் தாபத்தை அடைந்து வருந்துகிருளே! இது என்ன விதியின் விபரீதப்போக்கு!

சந்திரகலே: (தனியே)—வேறு வழியில்லே. நம் உயிர்தோழி அரசகுமாரி மிக்க பரிதாப நிலையை அடைந்து விடுவாள் என்பதில் சந்தேகமில்லே.

மதுகரிகை: (தனியே)—இருக்கட்டும். முற்றிலும் தாம் சம்மதமான இக் காதல் மணத்திற்கு விசுவாமித்திரர் சம்மதிக்கக்கூடியவரே ஒழிய வேறில்லே. நிச்சயமாக அவர் இவ்விருவர் விவாகத்தினால் சந்தோஷப் படுவார்.

ஸீதை: ஸகிகாள், வெய்யில் பொசுக்குகிறதே.

மதுகரிகை: தோழி ஸீதை, நிழலில் அல்லவா உட்கார்ந்திருக்கிருள். இங்கு வெய்யில் ஏது?

ஸீதை: ஓஹோ! நிழலா?

ராமன்: குளிர்ந்த மரத்தடியில் வீற்றிருக்கும் இவளுக்கு எரிச்சல் எப்படி ஏற்பட்டது? என் புமான்களுக்கு ஏற்படுவதுபோல் மனத்தில் எழும் காமத்தீயின் தாபம் ஸ்திரீகளுக்கும் இருக்கலாமல்லவா! இவள் நிசயமாய் காமத்தினால் பீடிக்கப்படுகிருள். எந்தப் புண்ணியவானிடம் இவள் ஹ்ருதயத்தை வைத்து இப்படி வருந்துகிருளோ தெரியவில்லே. வேறு புருஷனிடம் இச்சை கொண்டவளானால் இவளை நான் ஸ்மரிப்பதும் பாபமாகும். நான் என் மனதைக் கட்டுப் படுத்தவேண்டும். நான் என்னுடைய இத்தகைய அவிவேகத்தினால் என்ன பலன் அடைந்தேன். ப்ராணஹானி ஏற்பட்டாலும் வீரத் தன்மையே மேல்.

மதுகரிகை: (தனியே)—நான் வெளிப்படையாய் நம் உயிர் தோழியை கேட்டுவிடுகிறேன்.

சந்திரகலே: (தனியே)—நல்லது, கேள்.

மதுகரிகை: தோழி ஸீதை, இந்த தாபம் மன்மத தாபமாகத் தோன்றுகிறது.

என்று ஸ்ரீராமனை இந்த உத்யானத்தில் கண்டாயோ அன்று முதல் ஏற்பட்டிருக்கிறது. நாளுக்குநாள் அதிகரிக்கிறது. இது உண்மையானால் சொல்; ஏதாவது உபாயத்தை தேடுவோம்.

ராமன்: (கேட்டு, மகிழ்ச்சியுடன்)—என்னைக் குறித்துத்தானா இவள் தாபமடைந்திருக்கிறாள்? அப்படியானால் நன்றாக மன்மதன் இவளை பீடிக்கட்டும். இவளை ஹ்ருதயத்தில் வைத்து நான் தாபத்தை அடைந்தாலும் அதுவும் எனக்கு சம்மதம். சீ, என்ன எண்ணம். மனிதர்களே தன் ஸுகத்திற்காக பிறர் கிலேசத்தை விரும்புகிறார்கள். இவள் துக்கத்தைக் கண்டு நான் ஆனந்தமடைகிறது முறையா?

ஸீதை: உங்களுக்கு எப்படி என் ஹ்ருதயத்திலிருக்கும் குழப்பம் தெரிந்தது?

மதுகரிகை: பின் இந்த தாபம் எங்கிருந்து வந்தது?

(ஸீதை லஜ்ஜைப்படுகிறாள்.)

ராமன்: இதென்ன கஷ்டம். நான் ஏமாந்துபோய்விட்டேன். காமத்தினால் கலங்கிய சித்தமுடையவள் லோகத்தின் இயற்கையான நடவடிக்கைகளை தனக்கு ஸாதகமாக எண்ணிக்கொள்ளும் சுபாவமுடையவள். புத்திமான்களோ நியாயமான காரியங்களையே செய்துக்கொண்டு பலன் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் திருப்தியுடன் வாழ்கின்றனர்.

மதுகரிகை: காரணம் தெரியாமல் எப்படி பரிஹாரம் தேடுவது? ஆகையால் லஜ்ஜைப்படாமல் சொல்.

ஸீதை: என் தோழிகளே, நீங்கள் ஊகித்தது நிஜமே. உங்களிடம் சொல்லாமல் யாரிடம் சொல்லப் போகிறேன்.

ராமன்: (மகிழ்ச்சியுடன்)—இப்போது உயிர் வந்தது. பாதி ஸாதகமாகிவிட்டது. ஆனால் இவள் யார் பெண்ணென்று அறியவேண்டும்.

மதுகரிகை: அப்படியானால் மஹாராஜாவிடமும் விசுவாமித்ரரிடமும் ஸ்ரீ ராமனிடமும் உடனே தெரிவிக்க வேண்டும்.

ஸீதை: ஒரு பெரிய ஸமாசாரத்தை நீங்கள் மறந்துவிட்டீர்களே?

மதுகரிகை: என்ன அது?

சந்திரகலை: எனக்குத் தெரியும். சிவதனுஸ்ஸை ஆரோபணம் செய்பவனல்லவா ஸீதையை விவாஹம் செய்துகொள்பவன் என்று மஹாராஜன் பிரதிக்ஞை இருக்கிறதே. அந்த இடையூறுக்கு என்னசெய்கிறதென்று நம் உயிர்த்தோழி கவலைப் படுகிறாள்.

ஸீதை: (பெருமூச்சு விட்டு)—ஆம்.....

மதுகரிகை: ஸுகுமாரனை ராமன் இந்த கடினமான கார்யத்தை செய்யக்கூடியவனா என்பது ஸந்தேகம் தான்.

ஸீதை: இனி உயிர் தக்காது. (மூர்ச்சை அடைகிறாள்)

சந்திரகலை: ஐயோ தெய்வமே! ஸீதை மூர்ச்சை அடைந்து விட்டாள்!

ராமன்: (வேகமாய் ஓடிவந்து)—பயப்படவேண்டாம். என் காதலி (என்ற வார்த்தையுடன் மௌனம்)

மதுகரிகை: வரவேணும் எங்கள் தோழியை துக்கத்திலிருந்து உத்தாரணம் செய்யவேணும்.

ராமன்: நான் எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் ஒரு ஸந்தேகம்.

மதுகரிகை: என்ன?

ராமன்: இவள் யார் பெண்?

சந்திரகலை: ஜனகரின் பெண்.

ராமன்: (தனக்குள்)—க்ஷத்திரிய குமாரி, இவள் எனக்கு அர்ஹமானவள், என்னிடமும் காதல் கொண்டிருக்கிறாள். எனக்கும் இவளிடம் அன்பு ஏற்பட்டிருக்கிறது. ஈச்வரன் என் இன்ப வாழ்விற்கே இவளை சிருஷ்டித்திருக்கிறான் என்பதில் சந்தேகமில்லை, (வெளிப்படையாய்)—இவள் எண்ணம் நிறைவேறாது. இவளைப்பார்க்காவிட்டால் எனக்கும் உலகம் பாழ் அடைந்தது போல் தோன்றுகிறது. (என்று சொல்லிக்கொண்டே தனக்குள்)—நான் ஏன் இப்படி அவிவேகியாய் எல்லைமீறின வார்த்தைகள் பேசுகிறேன்?

சந்திரகலை: (தனக்குள்)—நல்லது, தெரியவேண்டியது தெரிந்துவிட்டது.

மதுகரிகை: ஆனால், மஹாராஜன் நிறைவேற்ற முடியாத பந்தயத்தையல்லவா ஏற்படுத்திருக்கிறார்.

ராமன்: கேள்விப்பட்டு இருக்கிறேன். மனுஷ்யனால் நாண் ஏற்ற முடியுமானால் அந்த சிவதனுஸ்ஸை நான் வளைக்க முடியும். நீங்கள் கவலைப் படவேண்டாம். இவளுக்கு 'கல்யாணம் ஆகக்கூடாதென்று இந்த பந்தயத்தை அரசன் ஏற்படுத்தியிருந்தால் மட்டும் எங்கள் மனோரதம் நிறைவேறாது.

மதுகரிகை: நல்லது. நீர் பிரதிக்ஞை தைரியமாய் செய்தாலும் உம் ஆகிருதியைப் பார்த்தால் முடியுமோ? என்று சந்தேகம் ஏற்படுகிறது.

சந்திரகலை: தேஜஸ்விகளுக்கு ஆகிருதி சிறியதானாலும் கார்யம் பெரியதாயிருக்கும். சிறிய ஸிம்மம் பெரிய யானையை அடிகிறதல்லவா?

(திரைக்குள்)

இப்படி வாருங்கள் மஹாராஜா.

(ஸீதை மூர்ச்சை தெளிகிறாள், மற்றவர்கள் கவனிக்கிறார்கள்)

ராமன்: ஆஹா ஸிம்மாஸனத்திலிருந்தபடியே கிடைக்க அரிதான பிரும்ம ஸாக்ஷாத்காரத்தை எவர் அடைந்தவரோ, எவரிடமிருந்து மஹர்ஷிகள் கூட பிரும்ம வித்யையை அப்யஸிக்கின்றனரோ, ஸம்ஸாரத்தில் வசித்துக்கொண்டும் எவர் பற்றற்று யோகத்தினால் சித்தத்தை அடக்கி யிருப்பவரோ, அந்த ராஜரிஷி மெதுவாக இங்கு வருகிறார். நான் இனி இங்கு நிற்பது யுக்தமன்று.

(போகிறார்)

ஸீதை: தோழிகளே, இப்போது என்ன செய்வது?

சந்திரகலை: புதிதாக என்ன செய்வது? மஹாராஜா வருகிறார். நமஸ்காரத்தைச் செய்கிறது!

ஸீதை: என் தேக அஸௌக்யத்தைப் பற்றி மஹாராஜா தெரிந்துகொள்ளாமல் இருக்கவேண்டுமே.

மதுகரிகை: (சிரித்துக்கொண்டு)—ஏன் சந்தேகப்படுகிறாய்? அவருக்குத் தெரிந்தால் அவசியம் இந்த அஸௌக்யத்திற்கு நிவர்த்தி செய்விப்பார்.

ஸீதை: கஷ்டப்படும்போது என்னை பரிகசிக்கிறாயா!

மதுகரிகை: உன் துக்கம் நிவர்த்தியாகிவிட்டது.

ஸீதை: மறுபடி பரிகாசமா!

மதுகரிகை: பரிகாசமில்லை. நீ எப்படி ராமனைக் காணாமல் தவிக்கிறாயோ அப்படியே ராமனும் உன்னைக் காணாமல் தவிக்கிறான்.

ஸீதை: போடி போ. அவர் பெயரைக் கூசாமல் சொல்கிறாய்.

மதுகரிகை: உனக்கு அவர் பெயரைச் சொல்லக்கூடாது. எங்களுக்கு அவர் நண்பரானர்.

ஸீதை: எப்படி!

மதுகரிகை: (காதில் பேசுகிருள்)— இப்படி.

ஸீதை: நிஜமா?

மதுகரிகை: நிஜம்தான்.

ஸீதை: (பொய் கோபத்துடன்)— போடி போ. தாறுமாருகப் பேசுகிருய். உன் வார்த்தையை நம்ப மாட்டேன்.

(திரைக்குள்)

வாருங்கள் மஹாராஜா வாருங்கள் இப்படி.

சந்திரகலே: வந்துவிட்டார் மகாராஜா.

(சேடியுடன் ஜனக மஹாராஜன் பிரவேசம்)

ஜனகர்: குணவானன் சிஷ்யனிடம் கொடுக்குவரை உயர்ந்த வித்யை சபலமாகாது. அப்படியே கன்னிகையை வளர்த்து, கற்பித்து பிதாவானவன் தக்க வரனுக்குக் கொடுத்தாலொழிய கிருதார்த்தனகிறது இல்லை.

ஸீதை: (அணுகிவந்து)—தந்தை நமஸ்கரிக்கிறேன்.

(நமஸ்கரிக்கிருள்)

ஜனகர்: மஹாகுணவானை பர்த்தாவை அடைவாய். பிதாவின் வம்சத்தையும் பர்த்தாவின் வம்சத்தையும் விளங்கச்செய்வாய்.

தோழிகள். தோழி, பிதாவின் ஆசீர்வாதம் வரம் கொடுப்பதென்றே நினைப்பாய்.

ஸீதை: தேசாந்திரத்திற்கு என்னை அனுப்புகிறீர்கள்.

ஜனகர்: தன் கர்மாவால் கட்டுண்ட ஜீவன் தேசாந்திரத்தையும் ஜன்மாந்திரத்தையும் அடைவது ஸகஜம். அப்படி அடைந்து தன்னைச் சேர்ந்தவர்களுக்கு இழிவு ஏற்படச்செய்யாமலும், தான் துர்க்கதியை அடையாமலும் எவன் இருக்கிருனே அவன் நன்கு மதிக்கப்படுகிருன். குழந்தாய், நீ எப்போதாவது புக்ககம் போகவேண்டியது தானே. என்றும் இந்த பிரிவினைத் துயரம் உள்ளதுதானே. மேலும், அவசியம் ஏற்படக்கூடிய கிலேசங்களை பொருப்பதே சரி. சுகம் தொடர்ந்து வரத்தக்க துக்கங்களினால் மனதில் ஏன் ஆயாஸம் உண்டாகவேண்டும்?

ஸீதை: (கண்ணீருடன்)—தங்களுடைய மனேநிடம் எனக்கு வருமா!

ஜனகர்: ஸமயத்தில் யாருக்கும் மனேதிடம் வந்துவிடும். நீ வெகுசீக்கிரத்தில் பர்த்தாவின் ஆதரவினல் என்னையும் மறந்துவிடுவாய்.

ஸீதை: நீங்கள் என்னமோ அப்படிச் சொல்லுகிறீர்கள். என் சரீரத்தில் ஜீவன் இருக்கும் வரை, எனக்கு ஸ்வய ஞாபகம் தவறிப்போகாமலிருக்கும் வரையில், தாங்கள் சரண கமலங்களை மறக்க என்னுலியலாது.

ஜனகர்: இருக்கட்டும். உபசாரவார்த்தைகள் இந்தமட்டோடு நிற்கட்டும். மேலும் அவசியம் வரப்போகிற பிரிவைபற்றி இப்போது ஏன் பேசவேண்டும். வரப்போகிறதானுலும் வருகிறவரை அதை நினைப்பதேன்! அப்படி அதை சிந்திப்பதால் உடனே கவனிக்க வேண்டிய மற்ற காரியங்களுக்கு இடையூறு ஏற்படும். ஆகையால் நீ தோழிகளையும் ஜயையையும் அழைத்துக்கொண்டு மேல்மாடிக்குச்சென்று உல்லாஸமாகவிரு.

(சேடியைப்பார்த்து)—ஐயே, நீ விசுவாமித்திர மஹர்ஷியிடம் சென்று ஸந்தியாவந்தனத்திற்குப் பிறகு நான் அவரிடம் தெரிவித்துக் கொள்ள வேண்டியதை தெரிவித்துக்கொள்வதற்காக அங்கு வருவதை எதிர்பார்க்கும்படி தெரிவி.

மற்றவர்கள்: மஹாராஜா உத்திரவுபடி, (என்று போகிறார்கள்)

ஜனகர்: இன்றுமுதல் ஆறாவது நாள் யக்ஞம் முடிந்து அபிஷேகம். அப்போது விதிப்படி ஸ்ரீராமனுக்கு ஸீதையை கன்னிகாதானம் செய்து கொடுக்கவேண்டும். ரகுக்களின் குலம் மேன்மையானது. ராமன் புத்திமான். க்ஷத்திரிய குணங்கள் நிறைந்தவன். ஸீதைக்கும் அவனிடம் பிரேமை ஏற்பட்டிக்கிறது. அவனுக்கும் அவளிடம் காதல் ஏற்பட்டிருக்கிறது. வேறு என்ன ஆலோசிப்பதற்கு. சிவ தனுஸ்ஸை ஆரோபணம் செய்யும் பந்தயத்தையும் ஸ்ரீராமன் வெல்லத் தகுந்தவன் என்று விசுவாமித்ர மகர்ஷி எனக்கு தைரியம் கூறியிருக்கிறார். (யோசித்து)—ராமன் வராவிட்டால், பரசுராமனையும் விச்வாமித்ரரையும் தவிர மற்ற யாரும் இதை செய்யமுடியாது. என் பந்தயமும் முட்டாள்தனமாய் முடியும். பரசுராமரோ பிரும்ம நிஷ்டர். விசுவாமித்ரர் காட்டில் வசிக்கும் தபஸ்வி. லோகத்திலிருக்கும் வீரர்கள் எல்லோரும் என் பந்தயத்தைக்கேட்டு மனதிற்குள் அவமானமடைந்தும் வெளிப்படையாய் என்னிடம் வந்து முன்யோசனை இல்லாமல் இந்த பந்தயத்தை வைத்தீரே என்று என்னைக் கேலிசெய்துவிட்டு போய்விட்டார்கள். இப்போது விசுவாமித்ரரின் காருண்யத்தால் நான் மஹா பாக்யசாலி என்று நிம்மதியடைகிறேன் (நடந்துகொண்டு)—என் அருமை நண்பன் தசரதனுக்கு செய்தி அனுப்பவேணுமே. இன்றே தூதனை அனுப்புகிறேன். உடனே மஹர்ஷிகளுடனும், மற்ற இரண்டு குமாரர்களுடனும், வஸிஷ்டருடனும், மந்திரிகளுடனும் புறப்பட்டு வரவேண்டும் என்று சொல்லி அனுப்புகிறேன். மேலும், எல்லா அரசர்களையும் அழைக்கிறேன். எவர்கள் தனுஸ்ஸை வளைக்க முடியாமல் திரும்பி போனார்களோ அவர்கள் இந்த மஹோத்ஸவத்தை வந்து பார்க்கட்டும். தனக்கு சக்தியில்லாமலிருக்க, என் பந்தயம் நிறைவேறப் போவதில்லை என்று என்னை பரிகசித்தவர்கள் இப்போது தன் பலஹீனமறிந்து ஸதஸ்ஸில்வெட்கப் படும்படி செய்கிறேன். இப்போது என் மித்திரனான தசரதனை என் வீட்டில் வரவழைத்து அவர் குமாரனுக்கு விதிப்படி என் பெண்ணை விவாஹம் செய்துகொடுத்து உத்தம தம்பதிகளின் ஸமாகமத்தைக் பார்த்து ஆனந்தித்து என்மனம் நிரம்ப அமைதியை அடையப் போகின்றது.

(போகிறார்)

நாடகத்தின் ஆறாவது அங்கம் முடிவு.

நய இந்தியா.

கா. வே. ஸ்ரீனிவாஸன்,
(M. Sc. Tech.)

மாணவிகள் விடுதி,
கேர்பிரிட்ஜ்.

அன்ப ஸ்ரீதர,

உங்களுடைய கடிதம் வெகு நாள் கழித்து இன்றுதான் எனக்குக்கிடைத்தது. அதைப்பார்க்க எனக்கு மிகுந்த சந்தோஷம். உங்களுடைய வெகுளித்தன்மையை நான் மிக மெச்சுகிறேன். ஆனல், அது ஆரம்பமுதல் இறுதிவரை பயங்கொள்ளித்தனமாகவே இருக்கிறது. உண்மையில் அது படிக்க மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. மிகவும் அழகாக தாங்கள் அதை எழுதியிருக்கிறீர்கள். பயங்கொள்ளித்தனத்திற்குக் கூட வா அழகுப் போர்வையும், எழுத்து நயமும் மெச்சக்கூடிய கோர்வையும் வேண்டும்!

இங்கு இக்கொடிய யுத்தத்தின் முழு வேகமும் காட்டப்படுகிறது. எங்களுக்கு இரவு பகல் தூக்கம் கிடையாது. குளிரும் பனியுமே கடுமை; ஒரு குளிர்விசல் ஓடுகிறது. இரவோ பகலோ எப்பொழுது குண்டுகள் விழுமோ என நடுக்கம். ராக்ஷஸக் கூவல்கள். கும் என்று மதம் பிடித்த காட்டு வண்டுகளின் பயங்கர ரீங்காரம் போன்று திடீரென பாம்பர்கள் ஒன்றன்பின் ஒன்ருக அழகாக அணி வகுத்து அலைபோல் வருகின்றன. கிரீச் என்று விழுகின்றன பாம்புகள். மட மடவென சரிகின்றன வீடுகள். ஸுஸ் ஸென ஜ்வாலைகள் வானைக்கிழித்துக் கொண்டு கிளம்புகின்றன. ஒரே புகை இவ்வழகிய சிறு தீவை கவிந்துகொள்கிறது. டங் டணவென நெருப்பணைக்கும் யந்திரங்கள் வருகை. புஸ், புஸ், ஸூஸ் என தெளி குழாய்களிலிருந்து பீய்த்துக் கொண்டு கிளம்பும் தண்ணீர்தெளிப்பின் ஓசை. வார்டன்களுடைய ஓட்டம். சிவிக்கார்டுகளின் பரபரப்பு; அவர்கள் இடிந்து விழுந்துகிடக்கும் குவியல்களைப் புரட்டுவது. அடிபட்டவர், இறந்தவர் களைத் தூக்கிச்செல்லும் காக்ஷி. வீடு இடிந்து, உடையிழந்து, உயிரிழந்து, கதி கலங்க நிலையற்று நிற்கும் ஜனங்களின் பரிதாபக் காக்ஷி. இதற்குள் மறுபடியும் ஸைரனின் வீரல். மறுபடியும் பாம்பர்களின் டுரோன். மறுபடியும் இதே டிராமாவின் காக்ஷிகள்; ஆனல் இன்னும் பரிதாபகரமானது. இவ்வாறே இரவுகள்.

ஆனல் காலையில் ஜனங்கள் எப்பொழுதும் போல், ஒன்றும் நடவாதது போல் இரவின் அட்டூழியங்களின் நடுவிலிருந்து, தலையைத் தூக்கி எட்டி எழுந்திருக்கிருர்கள். நிசியின் ராக்ஷஸ வேலைகளின் சின்னங்கள் பயங்கரமாகத்தான் இருக்கிறது. அப்பயங்கரம் கண்டோர் மறுபடியும் நீண்டதொரு நித்திரையில்தான் ஆழ்ந்து விடுவார்கள். ஆனலும் அது ஏதோ தினம் சகஜமாக நடக்கும் சம்பவம் போல் அந்நாசத்தின் நடுவே எழுந்திருக்கின்றனர் ஜனங்கள்; ஏதோ தூக்கத்தில் கண்ட துர்சொப்பனம் போலும், அதைக்கண்டு அலறிவிட்டு தானே தூங்கி ஒன்றுமறியாதது போல் எழுந்திருக்கும் குழவியுள்ளம் போலிருக்கிறது. ஆஹா! என்ன ஜனங்கள்! ஆண்களும் சரி, பெண்களும் சரி என்ன தீரம்! அவ்வறே பால்மணம் மாறின குழந்தைகளும்! என்ன கட்டுப்பாடு! என்ன தீரம்! என்ன அஞ்சா நெஞ்சம்! சுதந்திரத்திலும் நாட்டின் மேல் ஆசையிலும் என்ன ஆர்வம் இந்த ஜனங்களுக்கு! இவைகளுக்காக யாவரும் மடிந்தாலும் மடிவார்கள்; நாடு உயிரற்ற பூமியாக ஆனலும் ஆகலாம் போலிருக்கிறது. ஆனல் போரும்—சண்டையை நிறுத்திவிடுவோம்—சமாதானமாகப் போய்விடுவோம்—என்ற பேச்சில்லை. சுதந்திரமற்ற இந்த நாடு பிணக்காட்டிற்கு சமானமே—சுதந்திரமும், தாங்களும், பெருமை பூணும் இச்சிறு தீவும் ஒன்று; சுதந்திரம் ஒன்று—உயிர் இன்னென்று—இச்சிறு தீவு இன்னென்று

என்பதில்லை. இவையெல்லாம் ஒன்றே தான். ஷேக்ஸ்பியர் வாழ்ந்து, பாடிய நாடு இது—எலிஸபெத் ஆண்டு கொழித்த நாடு இது—உலகையாண்ட விக்டோரியா ராணி பிறந்த நாடு இது—அந்நியர் கால் வைக்கா நாடு இது; அடிமையறியா நாடு இது; சுதந்திரமன்றி வேறொன்றறியா நாடு இது-என்றெல்லாம் ஆவேசத்துடன் சொல்லுகின்றனர் இச்சிறு தீவின் மக்கள். அவர்கள் செய்யும் தீரச் செயல்கள் என்ன! அவர்கள் புரியும் தியாகம் என்ன! அவர்களின் நெஞ்சு துடிக்கா நெஞ்சு! அவர்கள் கண்கள் கலங்காக் கண்கள். அவர்கள் மொரேல் (Morale) வாடா மொரேல். நான் நேரில் கண்டமயிர்கூச்செரியும்படியான இச்சிறுதீவத்தினர்களின் செயல்களை நேரில்தான் சொல்லமுடியும்; அல்லது பொருக்கியெடுத்த மயிர் கூச்செரியும் சம்பவங்கள் சிலவற்றை ஒவ்வொன்ருக அடுத்த கடிதத்திலிருந்து எழுதுகிறேன்.

உதிக்கும் சூரியனுகிய ஜப்பான் தனது கிரணங்களை பிற நாட்டின் இருளைப் போக்கும் கருணையுடன் உதயமாகப்போகிறது என்று இங்கெல்லாம் செய்திகள் கிளம்புகின்றன! அப்படி யுத்தம் நேரிட்டு, நம் நாடு ஆபத்திற்குள்ளானுல் தாங்கள் நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவீர்களா என்றதற்கு, நீங்களோ காதல் புரியும் கவியாக மாறிவிட்டீர்கள்; உன்னைவிட்டு உன் அழகிய மேனியை காணுது, உன் இனிய மொழிகளைக் கேளாது என்னை யுத்தத்திற்குச் சென்று மடியச் சொல்லுகிருயா என்று கவியின் நினைவுகளை அவிழ்த்துவிட்டு பதில் எழுதிவிட்டீர்கள்! என்னையப்படியே அது சிருங்கார ரஸத்திலாழ்த்திவிடும் என்று நினைத்தீர்கள் போலும்! இங்கு நடக்கும் அற்புதங்களின் முன் அது இழிவான பேடித்தன்மையையே சுட்டிக்காட்டுகிறது. நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் நாம் எப்படியிருந்தோம். நமது சோழ ராஜாக்கள் காலத்தில் யுவர்க்ளின் வீரமும், யுத்தம் என்ருல் களித்தெதிர்கொண்டழைத்த நிலைமையும், அதே நாட்டில் உங்களுடைய பேடித்தன்மையும் எப்படியிருகின்றன! இது தங்களிடத்திலிருந்த சிறிது மதிப்பையும், அரசபரசலாக இருந்த காதலையும் அறவே நீக்கிவிட்டது.

ஜப்பான் சண்டை ஆரம்பித்தால் (வெகு சீக்கிரம் ஆரம்பிப்பது நிச்சயம் என்று தெரிகிறது.) நமது நாட்டு மக்களிடையே இங்கு நான் பார்க்கும் தீரத்தையும், தியாக புத்தியையும் உண்டாக்க என்னுலானமட்டும் உழைக்கப் போகிறேன். இந்தியாவிற்கு புத்துயிர் வேண்டும். எனது நாட்டிற்கு எனக்குள்ள முதல் வனுபவத்தை உபயோகிக்கத்தான் [illegible]யம் கிட்டியதென நான் [illegible]ிரமாக உணருவதால், நான் இந்தியாவுக்குத் திரும்புகிறேன். அதற்குள் உங்களை முற்றும் மாறின உணர்ச்சி ததும்பும் சிறுவனுகை பார்ப்பேனென்று நம்பும்,

அன்புள்ள,

ராஜ்யஸ்ரீ.

* * *

"ஸுஜிதாமாரு" புறப்பட்டின்று ஓர் மாதத்திற்கு மேலாகிவிட்டது. அது ஒரு ஜப்பானியக் கப்பலாதலால், அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஜர்மன் சப்மரீன்களின் இறையாகாது தப்பித்து ஆப்பிரிக்கமுனையை யடைந்துவிட்டது. ராஜ்யஸ்ரீ இதற்காகவே "ஸுஜிதாமாரு"வை இந்தியா திரும்புவதற்குத் தேர்ந்தெடுத்தாள். அவளுக்கு உயிரின்மேல் உள்ள ஆசையினுல் அன்று இந்த சாமர்த்திய ஜாக்கிரதை. ஆபத்தின் முனையில் நின்று பயங்கரமாக ஊசலாடிக்கொண்டிருக்கும் தனது நாட்டின் மேல் உள்ள பக்தியால்தான் அவளுக்கு, நாட்டினர் யாவரையும் போன்று, இரு அவாக்கள் இருந்தன. ஒன்று, நாடு பழமையான அடிமையிலிருந்து விடுபட வேண்டியது; இரண்டாவது, புது அடிமைக்கு ஆளாகாது, உலகத்தை கவ்வி விழுங்கிவரும் ராக்ஷஸ யுத்தத்தில் திணரித் தவித்து இறையாகக் கூடாது என்பது. யுத்தம் ஆரம்பித்த

அன்றே அவள் இந்தியாவின் கவலைத் தாய்தான். இந்த உலக யுத்தம் என்ற அதிசய, அசாதாரணக் சூழ்நிலையை பெறக் காரணம் என்பது அவளுடைய திடமான நம்பிக்கை.

இங்கிலாந்தை விட்டுக்கிளம்பும் ஒவ்வொரு கப்பலும் போலல்லாமல் 'ஸாஜிதாமாரு' பிரயாணிகளின் மனம் ஒவ்வொரு நிமிஷமும் திடுக்கிட்டுக் கொண்டிருக்கவேயில்லை. பட், பட் என்று ஓயாது அடித்தவாரே மனதில் வலியைக் கொடுக்கும் ஒரு வேதனையை உணர்ந்தவாரே பொழுதைக், கடத்தினர் இல்லை. எப்பொழுது ஆகாய வரக்கர்கள் வந்து அனலைக் கக்குவார்களோவென்று நடுங்கினர் இல்லை. எப்பொழுது நீல வர்ணத்தின் அடியிலிருந்து பாய்ந்து கடல் கலத்தை (மரக்கலம்) இரண்டாகப் பிளந்திடுமோவென்ற, சாவுபோன்ற நடுக்கம் அறிந்தாரில்லையவர்கள். ஆனால் இவையில்லாவிடினும், தனது வெண் குவலைகளின் வள்ளலை மறப்பது ஆகாது என்று அறிவிப்பதுபோல் சமுத்திரராஜன் மாத்திரம் தனது வெண்சுருள்களையும், நீலச் சுருள்களையும் வானளாவ அனுப்பி கப்பலை அலட்டித் தடுமாற வைத்துக் கொண்டிருந்தான். கப்பல் ஆப்பிரிக்க முனை தாண்டியது. நீலயாவி ஓரழகிய நீலக்கம்பளம் சமதரைமீது கிடத்தியிருப்பதுபோல், அதற்கு முன் செய்த பெரு வேலைகளின் காரணமாக உரங்குவது போன்று சக்தியற்று, நாதமற்று துயிலச்சென்றது.

நீலயாவியின் தொல்லையுமற்ற "ஸாஜிதாமாரு" பிரயாணிகள் குதூகலம் எய்தினர். ஒரே ஆரவாரம்; ஒரே கொந்தளிப்பு; ஒரே களிப்பு; ஒரே நடனம்; ஒரே சிங்காரம். ராஜ மாளிகையின் விழாப்போன்று அன்று இரவு முழுதும் களித்து துயிலச்சென்றனர்.

வானத்தில், அடிவானத்தில் வெள்ளி முளைத்தது; ஆனால் .வெள்ளியில் ஈயம் கலந்திருந்தது. "ஸாஜிதாமாரு" இந்தியக் கடலை அடைந்தது. ஸ்மசானம் போன்று அச்சான்யப் படத்தக்கதொரு உயிரற வனமதி. கலம் நகருவது போல் தோன்றவில்லை. திடீரென யாதோ கலத்தை அலட்டுவது போலத் தோற்றம் ஒன்று; ஏதோ பாதாளத்திலிருந்து மெதுவாக இழுப்பதுபோன்ற தோற்றம் பிரயாணிகளின் மனதில் நன்கறியாத திகீரென்றவொருணர்ச்சி ஒரு பரபரப்பு.

ரேடியோவை டியூன் பண்ணிக் கொண்டிருந்தவோசை கேட்டு யாவரும் ரேடியோவரைக்கு ஓடினர். கப்பல் தலைவன் முகம் கோணுது, பிணம் போல ரேடியோச் செய்தியைக்கேட்டான். ஜப்பான் சண்டை ஆரம்பித்துவிட்டதென்ற செய்தி, கப்பல் டார்பிடோ செய்யபட்டு மூழ்கி வருகிறதென்றவுணர்ச்சி.

இச்சம்பவம் கடந்து சில தினங்கள் பம்பாய் தலைமை ஆஸ்பத்திரியின் 'ஆபத்துச் சதுக்கம்' நாலைந்து கடற்படை அங்கியணிந்த சிறுவர்கள் வருகிறார்கள். "ராஜ்யஸ்ரீ, ராஜ்யஸ்ரீ" என்ன, நீ இங்கு எப்படி வந்தாய்!' என்று ஒரு சிறுவன் கத்துகிறான். 'யாரது, நீயா, ஸ்ரீதரா என்ன! ஆச்சாயமாய் இருக்கிறதே! நீ யெங்கு இப்படி வந்தாய்! என்ன—கடற்படையுடையல்லவோ போட்டு கொண்டிருக்கிறாய்—நிச்சயம் ஸ்ரீதரா நீங்கள்! என்று அதே ஆச்சரியத்துடன், மாசுள்ள வெங்கலத்தொனியில் ஒரு மாது ஸ்ரீதரனை நோக்கினாள்.

ஆச்சர்யமும், ஆச்சர்யத்தின் புதுமை வேகமும் சிறிது தணிந்தபின் அச்சிறுவனும், அவ்வழகிய அணங்கும் பேச்சில் கலந்தனர். அவர்களின் உணர்ச்சில் ஒரு பரபரப்பும், ஓர் கலவரமும் காணப்பட்டது. அவ்விரு முகாரவிந்தங்களிலும் ஓர் மெலிவும், சோர்வும், இனிப்பும் மாறி மாறி ஏற்பட்டன. அதிலிருந்து அவர்கள் அதுவரை நடையற்றதொரு வழியில் சஞ்சரித்து வந்தனர் என்று தெரிந்தது. அவர்கள் சம்பாஷணையின்போது பரஸ்பரம் உள்ள

மதிப்பும், மரியாதையும் சுலபமாக மேனி வெளிப்படுத்தின. ஆனால் அவைகள் புதுமைக் கருக்குப்பாய்ந்து விளங்கின.

சிறிது போழ்ந்து, கைகளைக் கோர்த்துக்கொண்டிருவரும் ஆஸ்பத்திரிக்கு வெளிப்போந்தனர். கேட்டில் நின்ற சேவகன் ஒரு சேனா சல்யூட்டடித்தான். அதை ஒரு பெருமையுடன் ஏத்துக்கொண்டே, அலக்ஷியமாகச் சென்ற ஸ்ரீதரனைப் பார்த்துப் பேசிக்கொண்டே சென்ற அம்மாது, 'ஸ்ரீதரா, நீயா—சப்மரீன் நல்லவன்! என்ன! ஆச்சர்யமாகன்றோ இருக்கிறது! அதா லூஜிதாமாருவை மூழ்கடித்தது! என்ன—மறுபடியும் ஆச்சர்யமாகவல்லவோ—என்ன மாறுதல் உங்களிடம், ஸ்ரீதரன்—நீங்கள் கப்பற்படையை சேரவாவது—ராஜ்யஸ்ரீ நாட்டிற்குத் திரும்பின லூஜிதாமாருவை அதுவும்....!" இவ்வாறே படபடக்க ஒடிந்த பாஷையில் சொல்லிக்கொட்டினாள். அவனை அண்ணாந்து பார்த்து மாதர்கேவரியதொரு மணியாபரண புன்முறுவலுடன், கண்கள் சொருக நோக்கிக்கொண்டே, 'இது என்ன' எனது கடிதத்திற்கு பதிலா, ஸ்ரீதரன்!' என்றாள்.

*　*　*

ரோட்டிற்கு அடுத்த ஒரு பங்களா. வராந்தாவிற்கு அடுத்த ஒரு பெரிய ஹால். அதன் ஒரு ஓரத்தில் சுவற்றை யொட்டி யொரு சாய்வு நாற்காலி. அதில் அமர்ந்திருக்கும் ஓரழகிய அணங்கு.

மாலை; இனிய மாலை. மானிடர் உள்ளத்தில் அன்று ஓர் குதூகல உணர்ச்சி; ஓர்களிப்பு. அம் மாலையை காதலர் மாலையென்னலாம்.

நாற்காலியில் உட்கார்ந்திருந்த அவ்வணங்கு அழகோருருவெடுத்தார் போலிருந்தாள். மானிடனை மயக்கும் மாதர் சௌந்தர்யம், சாகஸங்கள், நீலித்தனம் யாவும் பரிபூர்ணமாகக் கொண்டிருந்தாள் அவ்வணங்கு. இவ்வினிய ரூபலாவண்யம் கையில் ஒரு புஸ்தகம் பிடித்து, படிக்கும் நிலைமையில் காட்சி யளித்தது. ஆனால் அது சேஷ்டைகளில் ஈடுபட்டிருந்தது. முகத்தில் ஒரு ஏக்கம். அவாவினால் துடிக்கும் ஒரு பரபரப்பு. அதனால் தூண்டப்பட்டு அடிக்கடி எழும் ஒரு வேதனை. இவை மாறி மாறிக் காணப்பட்டன அவ்வணங்கினிடத்தில். புஸ்தகத்தை நிமிர்த்திப் பிடித்து வாசிக்க முயற்சி செய்வது. ஏமாற்றத்தினால் எழும் வேதனையின் வேகத்தால் அலுத்து சலித்து, நிமிர்த்தப்பட்ட புஸ்தகம் சாய்வது. ஒரு பெருமூச்சு. சொருகி நிற்கும் கண்கள் சற்றுமுன் மறைந்த ஸ்வபாவமான விஷமத்தன்மையுடன் கலந்து ஒரே ஏக்கத்துடனும், அவாவுடனும் ரோடைப்பார்ப்பது, மறுபடியும் ஒரு பெருமூச்சு; மறுபடியும் புஸ்தகத்தை நிமிர்த்தி வாசிக்க யத்தனிப்பது. கருங்கூந்தல்களின் சுருள்களில் மருதாணி இட்ட விரல்களைப் பாய்ச்சி சற்றுமுன் படிந்திருந்த அவைகளைக் கலைப்பது. இப்படியே அவ்வணங்கு தனது காதலனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

'ராஜ்யஸ்ரீ' நீ என்னை எதிர்பார்த்துக்கொண்டு இங்கே உட்கார்ந்திருக்கிறாயா? ராஜ்யஸ்ரீ—ராஜ்யஸ்ரீ, இன்று நீ அதி அற்புதமாக என் கண்களுக்குக் காணப்படுகிறாயே! இப்படி ஏன், ராஜ்யஸ்ரீ, இனிமையே உருவெடுத்து மாதர்களை ஈசன். படைக்கிறான், ராஜ்யஸ்ரீ, என்று அப்பொழுதுதான் வந்த ஸ்ரீதரன் மொழிந்தான்; பெருமூச்செறிந்துகொண்டே சோபாவில் சாய்ந்தான்.

'என், என்ன விசேஷம்! ஏதோ அலுத்துச்சலித்து நீனக்குரலில் ஏன் அப்படி பேசுகிறீர்கள்? நீங்கள் சொல்வது எனக்கென்னமோ சுருக்கென்கிறதே! ஒருவிதமாகப் பேசுகிறீர்களே! உங்கள் தொனி, ஏதோ, நான் உங்களுக்கு கிட்டுவது சிரமம் போன்று பேசுகிறீர்களே, என்ன, ஏதாவது விரும்பத்தகாதது நேர்ந்திருக்கிறதா, என்ன?' என்று படபடக்க இவ்வளவு நேரம்

காதல் வேதனையில் ஆழ்ந்திருந்த அவ்வணங்கு அண்ணாந்து பார்த்துக்கொண்டே கேட்டாள்.

'ஒன்றுமில்லை, ராஜ்யஸ்ரீ, உட்காரு சொல்லுகிறேன். ஆமாம், பெரிய விஷயந்தான். உன்னிடமிருந்து பிரியும் காலம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. எனக்கு இன்னும் இரு சிறுமணிநேரங்களே உன்னுடன் இருக்கும் பாக்கியம். பிறகு என்ன ஏற்படுமோ, தெரியாது, ராஜ்யஸ்ரீ—பயப்படாதே, உட்காரு சொல்லுகிறேன்.

'ராஜ்யஸ்ரீ, எதிரி பிடித்துக்கொண்டானேயில்லையோ, நமது முக்கிய கடற்படைபேஸ், அதை எதிரி மிகத்துரிதமாக தனது சாதகத்திற்கு தயாராக்கிவிட்டான். இன்று அப்பேஸில் எதிரியின் முக்கியமான சண்டை கப்பல்கள் வந்து சேர்ந்திருக்கின்றன. அவர்கள் அங்கிருந்து நமது நாட்டில் சைன்யத்தை இரக்க ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கின்றனர். அங்கு 45,000 டன் பெரிய யுத்த கலங்களில் இரண்டு வந்திருக்கின்றன. அவைகள் இரண்டையும் எப்படியாவது துலைக்கவேண்டும். இல்லாவிட்டால் அதோகதிதான். அதற்காக எங்களையெல்லாரையும் கூப்பிட்டு சேனாதிபதியே கேட்டார் இம்மகத்தான கார்யத்தை யார் செய்வீர்கள் என்று. நமது தேச சுதந்திரம் அதில் ஈடுபட்டிருக்கிறது. காரியம் என்னவோ சிறியதாக தோன்றலாம். அதில்தான் எதிரியை மடக்கவேண்டும். நமது நாட்டை காப்பாற்ற முடியும். அந்த பேஸோ மிகவும் பலமான காப்புகள் கொண்டது. அந்தக்காப்புகளை எல்லாம் பதுங்கிப் பிளந்துகொண்டு உள்சென்று அவ்விரு கப்பல்களைக் குறிபார்த்து அடித்து மூழ்கடிக்கவேண்டும். உடனே தப்பித்து காப்புகளின் எல்லையிலிருந்து வெளிவரவேண்டும். எல்லாம் ராவுக்குராவே செய்யவேண்டும். பிறகும் தூரத்தும் எதிரிகளின் வசம் அகப்படாது திரும்பிவந்து சேரவேண்டும். ஜப்பானிய குள்ளர்களோ எமகாதகர்கள்; மாலுமிகளோ மணிகள்!

'சேனாதிபதி இப்பெரும் காரியத்தைக் குறித்து சொல்லிவிட்டு யார் என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டார். மஹா சமர்த்தர்கள் என்று பெயர் வாங்கிப் பட்டங்களும், மெடல்களும் அணிந்து எனது சகாக்கள் முன்னணியில் உட்கார்ந்திருந்தனர். நான் பதக்கமற்று, பட்டமற்று கடைசியில் மௌனமாக உட்கார்ந்திருந்தேன். அவர்கள் தீவிரமாக வாதித்தனர். இக்காரியம் நடைபெறாத காரியமன்று மிரண்டனர். படைத்தலைவனுக்கு மூளைக் குழப்பம் என்று சிலர் நினைத்தனர். சிலர் ஆகாயக்கோட்டை கட்டும் தலைவர் என்று எண்ணினர். படைத்தலைவரோ மறுபடியும் தன் கதையையே மெதுவான, அமிழ்ந்த குரலில் சொன்னார். அதைக் கேட்டு எனது சகாக்கள் மூஞ்சியில் ஈயாடவில்லை. ஒரே வெறுப்பும், சினக்குறிகளும் மூஞ்சியில் கோடிட்டன. ஒரே நடுநிசி நிசப்தம் சுவற்றில் மாட்டியிருந்த கடிகாரம் மாத்திரம் மெதுவாக மங்கின ஓசையுடன் மணி பன்னிரண்டடித்தது.

'நான் எல்லாவற்றையும் கேட்டு வாளாவிருந்தேன். சேனாதிபதி இரண்டாம் முறை அழுத்தமாக பேசின பொழுது, அவர் பேச்சு எனது மனதில் ஆணி அடித்தாற்போல் பதிந்தது. அவரது வார்த்தைகள் ஒவ்வொன்றும் உருவெடுத்து, உயிர் ஏற்று என்னிடம் அக்கார்யம் செய்துதான் தீரவேண்டும், செய்துதான் தீரவேண்டும் என்று சொல்லுவதுபோல் இருந்தது. நாட்டின் கதி ஒரு படம்போல் என்முன் நின்றது. நாட்டில் அக்குள்ளர்கள் இறங்குவதும், அவர்களைக்கண்டு கதிகலங்கி ஆடுகள் போன்று கதறிச்சிதறி ஓடும் நமது ஜனங்களும், ஏற்படும் குழப்பமும், களவும், கொலையும், உன்னைப் போன்ற மாதர் மாணிக்கங்கள் அவதிப்படுவதும், துன்புறுவதும், அவமானப்படுவதும் என்முன் காட்சி யளித்தன. முக்கியமாக கடைசியில் சொன்னது என்னை உருக்கியது. அவர்களின் சிரித்த

யாக, ராஜ்யஸ்ரீயை அவமானத்திலிருந்து காப்பாற்ற நீ இக்கார்யத்தை செய்யவேண்டும் என்று சொல்லின அவைகள் பளிச்சென்று உன் ஞாபகம், ராஜ்யஸ்ரீயின் ஞாபகம் வந்தது. உன் அழகிய எழில் என்முன் நின்றது. உன் அழகிய உருவம் என்முன் தோன்றியது. உனது சாகசங்கள், உடலின் இனிமை, உலகத்தின் வள்ளல் உனது அன்பு, உனது ஆர்வம் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக என்னை வதைத்தன. உனது களிக்கின்ற சிரிப்பு; உனது தளுக்கு நடை ராஜ்யஸ்ரீ, உனது மனதைக் கொள்ளைகொள்ளும் இளமையின் சேஷ்டைகள், இச்சிறுவனை மயக்கும் உனது ஸ்வபாவமான குறும்புகள், உனது லயமான ஆடவனைக் கொள்ளை கொள்ளும் களிப்பு, சுகுணங்கள் என்று சொல்லிக்கொண்டேவந்த ஸ்ரீதரன் நிறுத்தி ஒரு பெருமூச்சுவிட்டு சாய்ந்தான்.

ஆவேசம் வந்தவன்போல் மறுபடியும் பேசவாரம்பித்தான்: 'இவைகளையெல்லாம் விட்டுவிட்டு நீ போகப்போகிறாயா! இத்தனையும் ஒருங்கே கவர்ந்து நிற்கும் அந்தச் சிறுமி ராஜ்யஸ்ரீயையா விட்டுவிட்டுப் போகிறாய்! இவ்வுலக வாழ்க்கைத் தேன்கூட்டில் இப்பொழுதுதான் இத்தனையும் கலந்து சொரிந்த தேன் ஊருகுகிறது; நின்று உன்னைப் பருகிக்களிக்குமாறு கூவி, அறைகூவி அழைக்கிறது.' நீ அவ்வினிய மதுரத்தைப் பார்த்தும், அதன் ருசி அறிந்தும், அதனைப்பருகாது போகப்போகின்றனையா? என்னே மடமை! இனிமை பொங்கிச்சொரிந்து நிற்கும் சுகங்களைக்கண்டும், அவைகளை மறந்து, வெரும் நரகத்திலாபோய் விழப்போகிறாய் என்று அவைகள் என்னை பழித்தன. என்னை நோக்கி, ராஜ்யஸ்ரீ, அவைகள் பல்லைஇளித்துப் பரிகசித்தன.

ராஜ்யஸ்ரீ. இன்றுமொரு கூட்டம், இவைகள் மறைந்தவுடன் தோன்றின. அவைகள் என்னை பயமுறுத்தத்தொடங்கின. எ. சிறுவா! அக்குள்ளர்கள் உன்னை நசுக்கி துண்டு துண்டாக அடித்துப்போட போகிறார்கள். உன்னை ஒரேயடியாய் அடித்து உடல் நசுங்கி உதிரம் வெளியேறியனபோல் ஆகும் வரையில் துகைக்கப் போகின்றனர், பார்! பின்னும் உன்னை விட்டாரில்லை. உன்னை செத்தப்பாம்பை அடிக்கும் சிறுவர் சிறுமை, சிறுவர் பூரிப்புதோற்க பிண்டமாடப் போகின்றனர், போ! ஒரு அணங்கைச் சேரவேண்டிய உனது துவண்ட சிறு மேனி, வளம் பொருந்திய வாலிபம், வாலிபத்தின் வனப்பு, வனப்பின் விசேஷ காந்தி எல்லாம், பாவம்!........' என்று சொல்லிக்கொண்டே வந்த ஸ்ரீதரன் 'எ, என் அருமை, ராஜ்யஸ்ரீ!, ராஜ்யஸ்ரீ!' என்று கதறிக்கொண்டே ராஜ்ஸ்ரீயின் மார்பில் சாய்ந்தான்.

சிறிது போழ்ந்து, வாலிபத்தின் வனப்புப் பொங்கும் அம்மார்பிலிருந்து உயிர் பெற்றவன்போல் ஸ்ரீதரன் தலையைத் தூக்கினான். அண்ணாந்து ராஜ்யஸ்ரீயின் கண்களை உற்று நோக்கினான். அவ்வழகிய கண்கள் அவனுக்கு உயிரைக் கொடுத்தன. கவலை தோய்ந்திருந்தாலும், பனித்துளிகளால் மூடப்பட்ட ரோஜா போன்று அவ்வதனம் ஒரு சௌந்தர்ய லக்ஷ்மி, புன்னகையுடன் பூத்தது. அதையும் கண்டு வண்டு மதத்து ரீங்காரம் செய்யுமல்லவா? சொருகியிருந்த கண்களை உயரத்தூக்கி, "ராஜ்யஸ்ரீ" என்றான் மிருதுவாக. அதற்குத்தான் காத்துக்கொண்டிருந்தவள்போல் ராஜ்யஸ்ரீ, 'ஸ்ரீதரா' என்று ஆரம்பித்தாள். ஸ்ரீதரே, நீங்கள் என் இவ்வளவு கிலேசம் அடைகிறீர்கள். நீங்கள் என்னைக்கொள்ளைக்கொண்டுவிட்டீர்கள், வாஸ்தவம். ஆனால் உமது இளமையன்று அந்தக் கொள்ளையைப் புரிந்தது. உமது வாலிப வளமையன்று. உமது வாக்விலாஸமும் அன்று. ஆனால்; இவைகள் இங்கிலாந்தில் நம்மிருவரையும் நண்பர்களாக்கி வைத்தபோதிலும், இங்கிலாந்திலிருந்து வந்தபிறகு உங்களிடம் நான் கண்ட மாறுதல்கள்தான் காரணம்; உங்கள்

தேசபக்தியும், உள்ளுக்குள் மழுங்கிக் கிடந்த அந்த சௌரிய வீரமும்தான் அதற்குக்காரணம்.

நமது நாட்டிற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும்போது, நீங்கள் மாதரின் வலையில் சிக்கி அழிவுள்ளதொரு சிற்றின்பத்திற்காக வருந்துவது அழகல்ல. நமது நாடு தொன்றுதொட்டு அடிமையில் மூழ்கி மிகக் கீழ்மையான நிலைக்கு வந்திருப்பது உண்மையெனினும், வீரமும், தியாக புத்தியும் தேசபக்தியும் அழிந்துவிடவில்லை. மாந்தரிடம் அவைகள் உபயோகம் குன்றி மறைந்திருக்கிறது. அவ்வளவுதான். அலக்ஸாந்தரை எதிர்த்த நாடு நம் நாடு. பாபரை திணாவடித்த நாடு நம் நாடு. ஆங்கிலேயரையும் வாட்டிவைத்த நாடும் நம் நாடுதான். ஆங்கிலேயர் வஞ்சனை வைத்து வென்றனரன்றேயில்லை அவர்கள். ஆங்கிலவரசியலில்தான் யுத்தம் மறந்து, வீரம் அழிந்து, மதியற்று, மேன்மைக் குணங்கள் குன்றி மாவிடரில் கேவலர் ஆனோம். ஆதலின், இவைகள் மழுங்கி நமது உள்ளத்தில் உறங்குகின்றன. இவைகளின் உபயோகமின்றி, மாவிடர் ரத்தம் படாது கருக்கழிந்த உயர்தர படைக்கத்திபோல் துருவால் மூடப்பட்டு நிற்கின்றன.

‘ஸ்ரீதரரே, நாம், என்ன, மறுபடியும் இதினும் கொடியமற்றும் இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளுக்கு எழ்மைக்கும் அடிமைக்கும் ஆளாகவேண்டுமா? எழ்மையும், அடிமையும்தானா நமக்கு? பாரதநாடு, புனிதநாடு என்கிறீர்களே, அடிமைதான் புனிதமா! இந்நாடு சுதந்திரம் அறியாதா?’

ராஜ்யஸ்ரீ, உணர்ச்சி ஆவேசத்துடன், மனதையுருக்கும் தொனியால் கதறினாள். மேலும் ஆவேசத்துடன், உயர்ந்த தொனியில் ஸ்ரீதரனை நோக்கிக்கூறினாள். ‘இல்லை, இவைகளிலிருந்து நாம் தப்பிப்போம். தப்பித்துத்தான் ஆகவேண்டும். புது அடிமைக்கு ஆளாகமாட்டோம் இனி. பழைமை அடிமையையும் உதறித்தள்ளுவோம். உயிரைத்திரணமாக, ஸ்ரீதரா, எண்ணி பலிகொடுப்போம். நமது உதிரத்தைத் ஆறாகப்பாய்ச்சுவோம், உறங்கி, மழுங்கிக் கிடக்கும் வீரத்தையும், தியாகத்தையும், குத்திக்குத்தி எழுப்புவோம். கோழைத்தனம் இனி வேண்டாம். இனிய சொகுசு வாழ்க்கை சிறிது மறப்போம். பாரதத்தாய் மக்கட் பேரில் மிக்க வளம்கொண்டவள். ஆடுபோன்றிருக்கும் நாற்பதுகோடி மக்கள் ஏன்! இழிவான வாழ்க்கை வாழும் பல மக்களுக்கு, உயர் வாழ்க்கை சேரும் சிலரே நன்று. ஒருகோடி மக்களின் உதிரத்தை சிந்தியேனும், எதிரியை எல்லைக்கு வெளியே நிறுத்துவோம். ஆவேசம் கொண்ட நாற்பதுகோடி மக்களை இவ்வுலகத்தில் எந்த சேனைதான் அடக்க முடியும்! எழுந்திரும், ஸ்ரீதரரே! சோகம் வேண்டாம். உங்கள் கையில் நாட்டின் சுதந்திரம் இருக்கிறது. உங்கள் தாய்க்கு முதலில் சேவை புரியவேண்டும். தாயின் அன்பிற்குப் பிறகுதான் காதல், காதலி எல்லாம் தாய்க்கு பிறகுதான் ராஜ்யஸ்ரீ. ராஜ்யஸ்ரீயும் தனது அன்னைக்குத் தொண்டு புரியப்போகிறாள். ராஜ்யஸ்ரீயை நினைத்து வாளாவிருந்தால், ராஜ்யஸ்ரீயின் அன்பு உங்களுக்குக் கிட்டாது. உங்களை ஏறெடுத்தும் பார்க்க மாட்டாள்’ என்று ஒரு பயமுறுத்தல் முறுத்திவிட்டு மேலும் ஆழ்ந்த குரலில் ஆரம்பித்தாள். ‘தாங்கள் அம்மஹத்தான அருங்காரியத்திலிருந்து ஜயத்துடன் திரும்புவீர்கள்! உங்களுக்கு அக்காரியத்தை நிமிடிப்பொழுதில் அசதியற்று லகுவாகச் செய்ய சாமர்த்தியமுண்டு. பாரதமாதாவின் வீரபுத்திரனாக தாங்கள் எல்லாரும் திகைக்க வெற்றிமாலையுடன் திரும்பப் போகிறீர்கள்! அப்பொழுது ராஜ்யஸ்ரீ வெற்றிமாலை சூடுவாள்! ஸ்ரீதரரே, எழுந்திரும் முடுக்குடன். உமது உறங்கும் வீரத்தை எழுப்பி, எழுந்திரும். ஈசன் உங்களுக்குத் துணைபுரியவராக ஏற்படுவார். ராஜ்யஸ்ரீயின் புனிதமான ஹிருதயமும், சஞ்சலமற்ற அன்பும் உங்களுக்கு வெற்றியை வேண்டி நிற்கிறது.’

ஸ்ரீதரன் மெதுவாக எழுந்தான். ராஜ்யஸ்ரீயை நோக்கினான். இரு அகாங்

கள் தெய்வீக பாஷையில் அசையாது பேசின. ஸ்ரீதரன் வெளியடைந்தான்.

* * *

அன்று ஒரு புனிதமான தினம். அன்று நாடு முழுதிலும் ஒரே ஒரு நாமம் உச்சரிக்கப்பட்டது. ஹரித்வாரத்திலும் அந்நாமார்ச்சனை. அப்படிப்பட்ட நாமம் யாது? அதுதான் ஸ்ரீதரனின் நாமம். ஸ்ரீதரன் அவனுடைய தீரச்செயல் நாட்டிற்காக இழைத்த தியாகம், பகைவன் ஸ்வீகரிக்கும் நிலைமையினின்று விடுவித்த, ஒப்புயர்வற்ற சாதனை, அவனது சாமர்த்தியம், அவனது மேனி, அழகிய, கண்ணைக்கவரும் வடிவம் என்றிவையெல்லாம்தான் ஜனங்கள் வாயில் அன்று பேச்சு. மயிர்கூச்செரியும்படியும், பேசும்போது பதற்றத்துடனும், மூக்கில் விரலை வைத்துமே பேசினர் நாட்டு மக்கள். அவர்கள் பேசும்பொழுது ஒரு பச்சாதாபம்; ஒரு அன்பு; சிலர் கண்ணீரும் உகுத்தனர்.

தலைநகரை நோக்கி ஏராளமான ஜனங்கள் திரள் திரளாகச் சென்று கொண்டிருந்தனர். தலைநகர் விசித்திரமாக அலங்கரிக்கப்பட்டு, ஒரு சிறு சூர்யமண்டலமாகக் காட்சியளித்தது. இப்பெரும் உத்ஸவமெல்லாம் எதற்காக?

அப்பெரும் ஜனத்திரளின் மத்தியில், அவ்வலங்கார படாடோபங்களிக்கிடையில் யுத்த உடையணிந்து மிகச் சாதாரண, படாடோபமற்றதொரு இளஞ்சிறுவன் எழுந்தான். அவனது உடையில் பளபளக்கும் ஒரு சிறு சின்னத்தை கோர்த்தது இரு புனிதமான, உலகறியும் கைகள். "அசோக சின்னம்", "அசோக சின்னம்" அதுதான், என்று ஒரே ஆரவாரம்; குதூகலம்; கைகொட்டல். அவ்விளைஞன் மிக வணக்கத்துடன் ஒரு பதக்கத்தையும் பெற்றுக் கொண்டான்.

"ஸ்ரீதரன் பேசப்போகிறான்" என்ற முணுமுணுப்பு. ஒரே நிசப்தம். அவ்விளைஞன் எழுந்து கம்பீரமாகச் சில வார்த்தைகள் சொன்னான். "இவ்வொப்புயர்வற்ற கௌரவமான "அசோக சின்னம்" இப்பதக்கம், இக்கௌரவம், இவ்வுத்ஸவம் எல்லாம் உங்கள் முன்னிலையில் எனக்குக் கிடைத்தது. ஆனால், இதை உண்மையில் பெறவேண்டியதொரு ஆத்மா இவைகளையடையவில்லை. இவைகளை யாரால் நான் பெறுவதைக் கண்டுகளிக்கிறது அவ்வாத்மா! ஆகையால், இது சேரவேண்டிய இடத்தில் இதைச் சேர்க்கிறேன்." என்று சொல்லி பளபளவென்று மின்னும் அப்பதக்கத்தை அங்கு பக்கத்தில் அழகுதெய்வம்போல் வீற்றிருந்த ராஜ்யஸ்ரீயின் கழுத்திலிட்டான். அதைக் குனிந்து ஏற்றுக்கொண்டாள் ராஜ்யஸ்ரீ—

"வாழ்க பாரதம், வாழ்க பாரதம்" என்று ஒலித்தது அத்தலைநகர்.

அரிசி.

[அகில இந்திய கிராமத் தொழிற் சங்கத்தார் வெளியிட்டது.]

ஆ. வே. ஜெயராமன் (தமிழ்ப்படுத்தியவர்.)

அத்தியாயம் 4.

சில குறிப்புகள்.

சென்ற அத்தியாயங்களில் நாம் அரிசியின் ஊட்டமதிப்பைத் தெரிந்து கொண்டோம். மில்லில் அரைப்பதாலும், மில்லிலேயே மெருகு கொடுப்பதாலும் நம்முடைய ஜனங்கள் அரிசியினுடைய பூரா உபயோகத்தை இழப்பது மட்டுமல்லாமல், வேறு வியாதியையும் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். ஆதலால் அரிசியை ஜீவ உணவாக எடுத்துக் கொள்பவர்கள், அதிலிருக்கும் பூரா சத்தையும் கிரகிக்க நாம் கீழே சில குறிப்புகளைத் தருகிறோம். இதை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். (1) தனி மனிதனால் என்ன செய்யவேண்டும்? (2) அரசாங்கம் என்ன செய்ய வேண்டும்?

I தனிமனிதன் செய்யவேண்டியது

(அ) களைவதும் சமைப்பதும்.

அரிசியை களைவதாலும் தப்பான முறையில் சமையல் செய்வதாலும் கிடைக்கும் கழுநீரையும் கஞ்சியையும் நாம் தூர கொட்டிவிடுகிறோம். அதனால் வைடமின்களும், உலோக சத்துக்களும் வீணாகிவிடுவதை முன்னமேயே சொல்லப்பட்டிருக்கிறது. அரிசியின் ஊட்டமதிப்பு பூராவையும் நாம் உட்கொள்ள வேண்டுமானால் அதை அதிகம் களையாமல், போதிய தண்ணீரை உலைவைத்துச் சமைக்கவேண்டும். அப்படி செய்தும் சிறிது கஞ்சி தங்கிவிட்டால் அதைக் கீழே கொட்டாமல் கறி, கூட்டு முதலியன செய்யவும் உபயோகப்படுத்தலாம். எக்காரணத்தைக் கொண்டும் நாம் கஞ்சியை வீணாக்குவது கூடாது.

(ஆ) புழுக்கல்.

அரிசியை புழுக்குவதால் உண்டாகும் நன்மையையும் நாம் தெரிந்துகொண்டோம். மெருகு கொடுத்த அரிசியைத் தான் உட்கொள்ள வேண்டுமென்றால், முதன் முதலில் நெல்லைப் புழுக்கி பிறகு அதை அரைத்து மெருகு கொடுக்கலாம். ஏனென்றால் புழுக்கிய நெல், அதிக மெருகு கொடுத்தாலும், அரிசியின் சத்தை அதிகமாகச் சேதப்படுத்தாது. ஜனங்கள் குத்திய அரிசியையாவது அல்லது மெருகு கொடுக்காத அரிசியையாவது உட்கொள்ள முடியாவிட்டால் அவர்கள் புழுங்கல் அரிசியை இரண்டாம்பட்சமாக எடுத்துக்கொள்ளலாம். அறுப்பறுத்த உடனேயே அந்த நெல்லைப்புழுக்கி உபயோகத்துக்கு எடுத்துக் கொள்ளலாம். ஆனால் பச்சை அரிசியோ பழைய அரிசியான பிறகுதான் உபயோகப்படும்.

(இ) மட்டரக அரிசி.

பெரும்பாலோர்களால் ரொம்ப மட்டமென்று தள்ளுபடி செய்யப்பட்ட சில ரக அரிசியில், வெண்மையாயிருக்கும் பச்சை அரிசியில் இருப்பதைவிட ஊட்டம் கொடுக்கும் சத்துக்கள் இருக்கின்றன. அவைகளில் புரோடீன், பாஸ்பரஸ், கால்ஷியம், இரும்பு முதலிய உலோகப் பொருள்களும் இருப்பதால் கோதுமையிலிருக்கும் ஊட்ட மதிப்பைவிட இதில் சற்றுக்கூடக் குறைவில்லை. அது தவிர, இதன் மேலுள்ள தவிடு அதிகமாயும் உறமாயும் இருப்பதால், மில்லில் அதிகம் அரைத்தால்கூட தவிடு அதிகம் சேதமாவதில்லை. ஆகையால் ஜனங்களை இந்த ரக அரிசியை உட்கொள்ளுமாறு கூறுவது அவசியமே.



அறிக்கை.

பாரத மணிக்கு விஷய தானம் செய்பவர்கள் கவனிக்க வேண்டிய சில முக்கிய விஷயங்கள்:—

(1) கதைகளோ, கட்டுரைகளோ, பாரதமணி பக்கங்களில் மூன்றுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.

(2) காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

(3) கதைகள், கட்டுரைகள் எழுதுவோரின் முழுவிலாசமும், அவர்கள் தொழிலும் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(4) வேண்டிய தபால் பில்லை அனுப்பினுலொழிய, பிரசுரத்துக்கு அங்கீகரிக்கப்படாத கதைகள், கட்டுரைகள் திருப்பி அனுப்பப்பட மாட்டா.

ஆசிரியர்.

BOOKS FOR ALL.

Naked Shingles By Manjeri S. Isvaran	1	8
Two Plays of Bhasa By A.S.P. Ayyar, M.A., I.C.S.	1	8
Songs from the Souls By Anilbaran Roy	1	4
Kandan, the Patriot By K. S. Venkataramani	2	0
Men in the Limelight By Khasa Subba Rao	1	0
Jatadharan & other Stories By K. S. Venkataramani	1	8
Paper Boats By K. S. Venkataramani	1	0

Svetaranya Ashrama,
43, MAHADANA STREET,
MAYAVARAM.

(ஈ) மில் அரைப்பு.

மில்லில் அரைப்பதால் அரிசியின் ஊட்ட மதிப்பு எவ்வளவு சேதமாகிறது என்று பார்த்தோம். ஆதலால் நெல்லைக் கொண்டு மில்லில் அரைக்கும் வழக்கத்தை அறவே ஒழிக்க முயற்சி செய்ய வேண்டும். வீட்டிலேயே நெல்லைச் சிறிது சிறிதாகக் குத்தி உபயோகத்துக்கு எடுத்துக்கொள்ளும்படிச் செய்ய வேண்டும்.

(உ) தவிட்டுப் பொடியை உபயோகப்படுத்த.

மெருகு கொடுக்காத அரிசி அதிக உத்தமமானாலும், மெருகு கொடுத்த அரிசியை உண்ண ஆசைப்படுகிறவர்கள் அத்துடன் தவிட்டுப் பொடியையும் உபயோகப்படுத்தவேண்டும். அரிசி முளையும், அரிசியின் மேலுள்ள மெல்லிய தோலுஞ்சேர்ந்துதான் தவிட்டுப்பொடி என்று பெயர்.

தவிட்டுப்பொடியிலுள்ள உணவுப் பொருள்கள்.

		சத விகிதம்
1.	கால்ஷியம், இரும்பு, பாஸ்பரஸ் முதலியன	8.7
2.	புரோடீன்கள்	19
3.	கொழுப்பு	20
4.	வைடமின்கள்	....
5.	கரியுப்பு (Carbo-hydrates)	43
6.	தண்ணீர்ப் பசை	8.3

மேற்கூறிய உணவுப் பொருள்களெல்லாம் தேக வளர்ச்சிக்கு இன்றியமையாதனவைகள். ஏனென்றால் இவைகளினால் தான் நெல்லின் முளை வலுவுடன் முளைக்கிறது.

தவிட்டுப்பொடியை உட்கொள்ளுவது நாம் உண்ணும் மெருகு கொடுத்த அரிசியின் அளவைப்பொருத்திருக்கிறது. 11 பங்கு மெருகு கொடுக்காத அரிசி 10 பங்கு மெருகு கொடுத்த அரிசியையும் 1 பங்கு தவிட்டுப் பொடியையும் கொடுப்பதால், நாம் 10 பங்கு மெருகு கொடுத்த அரிசிக்கு 1 பங்கு தவிட்டுப் பொடியை உட்கொள்ளவேண்டும். இந்த தவிட்டுப்பொடி சீக்கிரம் கெட்டு விடும். அதற்காகவேண்டி, அதைச் சிறிது தாழ்ந்த தணலில் சுடவைத்து எடுத்துவிட்டால் அது கெடாது. பூச்சிகளும் புழுக்களும் வராது தடுத்துவிடும். ஒருவாரம் தவிட்டுப்பொடி குணம் கெடாது. அதிலுள்ள வைடமின்களும், உலோக உப்புக்களும் சேதமடைந்து விடாது.

தவிட்டுப் பொடியில் தென்னிந்திய முறையில் பல ஆகாரங்களைத் தயார் செய்யலாம் என்று கூனூர் ஆகார ஆராய்ச்சியைச் சேர்ந்த டாக்டர் அக்ராய்டு சில உதாரணங்கள் கூறுகிறார்: அவைகள் பின்வருமாறு:

(1) தவிட்டுப் பொடியை வெல்லத்துடனும் தேங்காயுடனும் கலந்து பிசைந்து உண்ணலாம்.

(2) அதையே அப்பம் போலச் சுடவைத்து உண்ணலாம்.

(3) எண்ணெயிலாவது அல்லது நெய்யிலாவது பொறித்து உண்ணலாம்.

மேற்கூறிய உணவுகளைத் தயார் செய்வதற்கு தவிட்டுப்பொடி, வெல்லம், தேங்காய் முதலியவைகளைப் பின்காணும் முறையில் கலக்கலாம்.

	நிறை
தவிட்டுப்பொடி	8.0
வெல்லம்	1.5
தேங்காய்	0.5

உபயோகப்படுத்தும் தவிட்டுப்பொடி மிகவும் மிருதுவாக இருக்கவேண்டும்.

தவிட்டுப்பொடியை வறுத்து கஷாயம் இறக்கிப் பாலுடன் கலந்து காபிக்குப் பதிலாகப் பருகலாம்.

(ஊ) மற்ற உணவுகள்.

அரிசியை உண்பவர்கள் எடுத்துக் கொள்ளும் உணவையும், அவர்கள் எடுத்துக்கொள்ளவேண்டிய உணவையும் கவனிப்போம்.

உணவு		எடுத்துக்கொள்ளும் அளவு			எடுத்துக்கொள்ள வேண்டிய அளவு
அரிசி	....	15 – 25	....	....	15
பருப்புகள்	....	0·5 – 1·5	....	....	3
பால்	....	கிடையாது	....	....	8
கீரை முதலியன	....	0·5 – 1·0	....	....	4
கறிகாய்கள்	....	2·0 – 5·0	....	....	6
பழம்	....	கிடையாது	....	....	2
எண்ணெ	....	1·0க்குக்கீழ்	....	....	2
மீன், மாமிசம், முட்டை	....	0.5 – 1·5	....	....	3 (பால் சாப்பிடாத பொழுது)

ஆகையால் ஏழைகளின் உணவைச் சத்துள்ளதாக என்ன செய்யவேண்டும் என்பதைப் பார்ப்போம்.

1. தானியங்கள்

தினை, சாமை, கோதுமை முதலிய தானியங்களெல்லாம் மில் அரிசியைவிட அதிக புஷ்டியைத் தரத்தக்கது. ஆதலால் தினம் 4 அல்லது 5 அவுன்ஸ் தினை அல்லது கோதுமையை அரிசியுடன் கலந்து சேர்த்து உட்கொள்ளுவது நலம். கோதுமை பயிர் செய்வது தேசத்தின் சீதோஷ்ணத்தைப் பொருத்ததாய் இருந்தாலும் மற்ற தானியங்கள் எங்கு பார்த்தாலும் விளையக்கூடியன. சிலர் கம்பு, சோளம், தினையரிசி முதலிய தானியங்களைக் கீழ்த்தரமாகவும், ஏழைகளின் உணவு என்று இகழ்ச்சியாகவும் கூறுவதுண்டு. ஆனால், ஆராய்ச்சி செய்து பார்த்ததில் அரிசியைவிட புஷ்டியைத் தரக்கூடிய தானியங்கள் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

2. பருப்பு.

அரிசி உண்பவர்கள் அதிகம் பருப்பு வகையறுக்களைச் சேர்த்துக் கொள்வது கிடையாது. அரிசியில் மிகவும் குறைவாக இருக்கும் வைடமின்களையும், மற்ற முக்கியமான ஊட்டங்கொடுக்கும் உணவுகளையும் பருப்பு உணவில் நாம் அடையலாம். 'பெரிபெரி' என்று சொல்லும் முடக்குவாதம் வரவொட்டாது தடுக்கும் வைடமின் பருப்பில் இருப்பதால் மில் அரைப்பு பச்சை அரிசி உணவுக்கு அது இன்றியமையாதது.

3. பால்.

நம் நாட்டிலுள்ள ஏழைகளுக்கு பால் பட்டப்பால்தான். அரிசி உண்பவர்களுக்குப் பால் அத்யாவசியமானதால் நாட்டில் பால், அதைச்சார்ந்த பொருள்கள் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். பால் சாப்பிடச் சக்தியில்லாதவர் மோரையாவது சேர்த்துக் கொள்வது நல்லது.

அரிசி உணவில் கால்ஷியம் குறைந்திருப்பதை முன்பே பார்த்துள்ளோம். இந்தக் கால்ஷியத்தை பால் கொடுக்கிறது. ராகி, தினை, சோளம், கீரை முதலியவைகளிலும் கால்ஷியம் அதிகம் இருக்கிறது.

4. காய்கறிகள்.

அரிசி உண்பவர்கள் எல்லோரும் வைடமின் 'A' யும் கால்ஷியமும் நிறைந்துள்ள கீரைகளை தினசரியாவது அல்லது ஒன்றுவிட்டு ஒருநாளாவது உட்கொள்ளுவது அவசியம். பெரும்பாலோர் கீரையைத் தவிர்த்து மற்ற காய்கறிகளை அதிகம் எடுத்துக்கொள்கிறார்கள். மொத்தத்தில் காய்கறி கீரைகளை அதிகம் உட்கொள்வது நலம். கிராமங்களிலும் நகரங்களிலும் வீடுகளுக்குப் பின்புறம் காய்கறி தோட்டங்கள் இருக்கவேண்டும். நிலம், தண்ணீர் வசதிகள் இருந்தும் இந்தியர்களில் அநேகர் காய்கறி தோட்டம் வைத்துக் கொள்வதில்லை. கிராமத்தார்களுக்குக் காய்கறிகளின் மதிப்பை உணரும்படி

கூறி அவைகளை விருத்தி செய்யுமாறு கூறவேண்டியது அவசியமே.

5. பழம்.

இந்திய ஜனத்தொகைக்குப் போதுமான அளவு நாட்டில் பழங்கள் பயிர் செய்வதில்லை. பழங்களில் அதிகப் வைடமின்கள் இருக்கின்றன. முக்கியமாக, சொறி, கரப்பான், குஷ்டம் முதலிய வியாதிகளைக் குணப்படுத்தும் வைடமின் 'C' பழங்களில் அதிகம் இருக்கிறது. நெல்லிக்காயில் இந்த வைடமினை நிறையப் பெறலாம். மாம்பழம், தக்காளிப்பழம், ஆரஞ்சுப்பழம் இவைகள் அதிக புஷ்டியைத் தரக்கூடியவை.

6. எண்ணெய்களும் கொழுப்பும்.

புஷ்டியைத் தரக்கூடிய உணவுகளில் எண்ணெகளும், கொழுப்பும் முக்கியமானவைகள்தான்.

7. முட்டை, மீன், மாமிசம்.

முட்டை அதிக ஊட்டம் கொடுக்கும் உணவு. பொருளாதார நெருக்கடியினால் இந்திய ஏழைகள் போதிய மாமிச உணவு எடுத்துக்கொள்வதற்கு இயலாமலிருக்கிறார்கள். மீனில் கால்ஷியம் அதிகம் இருப்பதால் அதையும் அரிசியுடன் உட்கொள்ளலாம்.

(ஈ) பச்சரிசியைப் பாதுகாக்கும் முறை.

மெருகு கொடுக்காத அரிசியில் சீக்கிரத்தில் புழு பூச்சிகள் வந்துவிடும். ஆதலால் அவ்வப்பொழுது சிறுகச்சிறுக நெல் குத்திக்கொள்ளுவதுதான் தகுந்த முறை. நெல்லைக் குதிரிலாவது பத்தாயங்களிலாவது போட்டால் ஒருவருஷம் வரை கெடாது. மெருகு தராத அரிசியை சிறிது விளக்கெண்ணெயுடன் பிசறிவைத்தால் சில மாதங்கள் வரை கெடாமலிருக்கும். 40 சேர் அரிசியில் கால் சேர் விளக்கெண்ணெயை விட்டுப் பிசறலாம்.

மற்றொரு முறையாவது: 1 பவுண்டு சாணம், 1 பவுண்டு மண், 2 தோலா பாதரசம், இவைகளை நன்றாகக் கலந்து பிசைந்து 2 தோலா எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து, நன்றாக காயவைத்து அரிசியினுள் போட்டிருந்தால் பூச்சி புழுக்கள் கிட்ட அணுகாது. ஒரு மணங்கு அரிசியில் ஐந்தாறு மாத்திரைகளைப் போடலாம்.

II அரசாங்கம்

செய்யவேண்டியது.

இந்தியாவிலிருக்கும் கோடிக்கணக்கானவர்களுக்கு அரிசி ஜீவ உணவாக இருப்பதால், அதன் பூரா ஊட்டத்தையும் அவர்கள் கிரகிக்குமாறு செய்வது அரசாங்கத்தின் வேலை. பின்கண்டவாறு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம்.

1. பொதுஸ்தலங்களில் மெருகு கொடுக்காத அரிசியை உபயோகிக்கச் செய்யவேண்டும்.

அரசாங்கமும், ஜில்லா போர்டுகளும், தாலுகா போர்டுகளும், முனிசிபாலிடிகளும், அவர்கள் செல்வாக்கு செல்லும் இடங்களிலெல்லாம் மில் அரிசி உபயோகப்படுத்துவதை நிறுத்தவேண்டும்.

2. அரிசி மில்களுக்கு அதிக லைசென்ஸ் வரி போடவேண்டும்.

அரிசி மில்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதை நிறுத்தவேண்டும். அல்லது குறைக்கவேண்டும். அல்லது அதிக வரி போடவேண்டும்.

3. மில் அரிசிக்கு அதிக வரி.

பிலிப்பைன் தீவுகளில் அதிக வரி போட்டுத்தான் மில் அரிசிகளின் உற்பத்தி குறைக்கப்பட்டது. ஒரு மூட்டை அரிசிக்கு (246 பவுண்டு) ரூ. 8-12-6 வரி போடப்பட்டது! இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கும் அதேவரிதான்.

[தொடர்ச்சி, 240-ம் பக்கம் பார்க்க]

புலவரும் உவமையும்.

அ. வி. மயில்வாகனம், B. A. (Lond.)

நமது தமிழ்நாட்டிலே அன்று தோன்றி மறைந்த சங்ககாலப்புலவர்களுக்கும் அவர் பின்னிருந்த இடைக்கால புலவர்களுக்கும் இன்று தோன்றி இலங்கும் 20-ஆம் நூற்றாண்டுப் புலவர்களுக்குமிடையில் உவமைகளை எடுத்தாளும் பொருள்பற்றி வேறுபாடுகள் மிகவுள. சங்கக்காலத்துப் புலவர் பெரும்பாலும் புகழுரையை வெறுத்தும், இகழுரையை அதனினும் வெறுத்தும், உள்ளதை உள்ளவாறு பேசுவதில் அவாக்கொண்டும் இருந்தனரென்பதை அவர்தம் நூல்களிலே நன்கு தெரிவிக்கும்.

"பெரியோரை வியத்தலுமிலமே
சிறியோரை யிகழ்தல் அதனினு
மிலமே"

[புறம். 192]

என்று கூறிய கணியன் பூங்குன்றனார் மொழிகள் இங்கு சான்றாக எடுத்துக் காட்டக்கூடியன. ஆனால், இடைக்காலப் புலவரோ வானளாவிய புழுகு பல பொதிந்த நூல்களைத்தந்து உவமை அமையுங்கால் பொருத்தமின்றியும் அமைதல்கூடும், என்னும் எண்ணத்தை நம்மிடையில் புகுத்திப் போந்தனர். தற்காலப் புலவன்மாரோ அவர்களைப்போலல்லாது, கொஞ்சம் மேல் நாகரீகம் படைத்த காரணத்தால் ஒரு புது முறையில் உவமைகளை எடுத்தாளுகின்றனர்.

இவற்றை நாம் முறையே சோதிப்போம். சேரவரசன் பெருஞ்சேரலிரும்பொறையைப்பாடிச் சென்ற அரிசில்கிழார் அவனை எதிர்க்கும் பகைவர் படும்பாட்டை அழகுப்பட கூறுகின்றார்.

'கடுந்தேறுறுகிளை மொசிந்தன துஞ்சும்
செழுங்கூடு கிளைத்த இளந்துணை மகாரின்
அலந்தனர் பெருமநின் உடற்றியோரே"

[பதிற். 71]

அதாவது:— கடுக்கக் குற்றும் குளவியின் கூட்டை இளஞ்சிறார் போய் உடைப்பரேல் அவருக்கு அவலம் எவ்வண்ணம் ஆமோ, அதுபோன்றே பேசாதிருக்கும் நம்மரசனை எதிர்த்து எழும் பகைவர் தப்பாது பல வழியாலும் இன்னலுறுவர் என்பது நன்குணர்த்தப்பட்டது. இங்கு உவமை சிறப்பாக வமைந்துள்ளதென்பதைக் கூறவேண்டியதில்லை.

இது போன்றே, அயர்ந்து நித்திரை செய்யும் புலியொன்றின்மேல் குருடனொருவன் தடக்குண்டு வீழ்வதும், அவனை அது தப்பாது கொல்வதும், அரசன் பகைவரைத் தப்பாது கொல்வதற்கு உவமையாகக் கூறப்படுகின்றது. இப்படி அரசனை ஒப்பிடுவன இருக்க, பிறவற்றையும் நோக்குவோம்.

அகத்துறையுள் இனிப்புகுந்து ஆராய்ந்தால் அங்கும் அரிய உவமைகள் பல தோன்றும். தலைவி ஒருத்தியை முதன்முதற் சந்தித்த தலைவன் பலவித இனிய மொழிகளாலும் அவளை மகிழச்செய்து ஈற்றில் தாமிருவரும் கலந்தவற்றையும் எடுத்தியம்புகின்றான். தம்மிரு நெஞ்சமும் கலந்துவிட்டனவாம்!

"செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே."

[குறு. 40]

என்னும்பொழுது நன்கு பண்படுத்தப்பட்ட இதயமாகிய வயலிடத்தே, அன்பாகிய சூற்கொண்ட மேகம் நீரைத் தாங்கமுடியாது பொழிய, அவ்வெள்ளம் கனிந்த காதல் வெள்ளமாகத் தலை மயங்கிப் பாய்ந்துவிட்டது எனத்தொனிக்கும். அது பாய்ந்த இடம் தலைவன் தலைவியர் இதயமே. பண்படுத்திய நிலத்தில் வெள்ளமும் வந்து சேர்ந்துவிட்டால்

இனி விதைக்கவேண்டியதுதான், முளை தானகவே எழுந்துவிடும்!

இப்படிக் கூடியவர் தம் பெற்ருர் தடுக்கவும் புறப்பட்டு ஒன்றுகூடித் தனி வழி போதலும் உரியர். இவரைப்போக விட்டு, பெற்ருர்தேடிப் பின்தொடரலும் ஒரே வழி உண்டு. அப்படிப்போவாரை அறிவுடையோர் சிலர் பொருளுரை பல கூறி போக்கை நிறுத்தவும் செய்வர். அவர் கூறுவன பின்வருமாறு:—

"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதா
மென்செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்கு
மாங்கனையளே;
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்
கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதா
மென்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்கு
மாங்கனையளே;
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா
மென்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்கு
மாங்கனையளே"
[கலி. 9]

மலையிடைச் சந்தனமரம் மதத்து வளரினும், அதன் இனிய வாசனையும், பூசும்போது தரும் குளிர்ச்சியும், அழகும், அதனை அணிபவர்க்கன்றி அது உண்டாகும் மலைக்கு யாதுபயன் கொடுக்கின்றது? விலையுயர்ந்த முத்துமாலை அதனை அணிபவரையே அழகுபடுத்துமன்றி, அது உண்டாயக்கடலை அழகுபடுத்தாது, வேறு எவ்வழியில் உதவும்! பண்ணமைந்த யாழ் இனிய இசையை மீட்டும், அவ்விசையை அது அனுபவிக்குமோ? அதனை அனுபவிப்பார் பிறரன்றே? அதுபோலவே தலைவியும் தலைவனுக்கல்லாது தன்னை வளர்த்தாருக்குப் பயன்படாளாவாள்; எனப் புலவர் கடுங்கோள் காட்டிய உவமைகள் கண்ணைக் கவருவனவாகும்.

இப்படி உடன்போய தலைவியைச் சிலநாட்கழித்துத் தலைவன் விட்டுப்பிரிதலும் உரியன். அவனைத் தடுக்கத் தோழி பலவழி தேடுவள். தன் நலன் அழித்த வாற்றைக்கூறி வருந்துவள். அதனைப் பின்னும் தரும்படி கேட்பள். அவள் கூறுவன:—

"உண்ணலு முண்ணேன் வாழலும் வாழேன்
தோணலுமுண்டு துறக்கப்பட்டோர்
வேணீருண்ட குடையோ ரன்னர்கள்"
[கலி. 23]

கேட்டு வந்தானெருவன் மட்கடை புக்கு, ஆங்குள்ள பிழாவொன்றை ஆவலுடன்பற்றி அதை நிரப்பி நிரப்பி ஆரப்பருகிய பின் அதற்குச் செய்யும் மரியாதையே இன்று எனக்கும் செய்யப் படுகின்றது. என்தோள் நலன்போயது, என் இளமை அகன்றது, இழிந்த பிழாப்போல் கவ்வையற்றுக் கிடக்கின்றேன்; என்று வருந்துகின்ருள் தலைவி. இவளுக்குப் புலவன்காட்டிய உவமையின் பொருத்தத்தைப் பாருங்கள்!

இனி, இடைக்காலப் புலவரையும் அவர் ஆளும் உவமைகளையும் சிறிது எடுத்தாராய்வோம். சிந்தாமணி ஆசிரியர் குணமாலையின் உள்ளக்கிடக்கையை இன்வாறிருந்ததென்று நேரே கூருது உவமையால் கூறுகின்ருர். அவளோ சீவகன்பால் உள்ளமிழந்தவளாய் யாருக்கும் உரையாது மனத்திடையே அவ் விருப்பத்தை வளர்க்கின்ருள். அது

"கையினுற்சொலக் கண்களிற் கேட்டிடும்
மொய்கொள் சிந்தையின் மூங்கையு
மாயினேன்."
[சித். 996]

என்பதில் தோன்றும், சீவகன்பால் குறைகள் பல செறிந்து சிந்தையில் கொள்ளாவாகி நிற்கின்றன. ஆனல் கூறவோ முடியவில்லை!

இப்படிப்பட்ட ஒருநிலை தலைவி இன்னெருத்திக்கும் வந்துள்ளது. அது வருமாறு:—

"கைபிலூமன் கண்ணிற்காக்கும்
வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன்றிந்நோய் நோன்று கொளற்கரிதே"
[குறு. 58]

இப்படியாக ஒரு கையில்லா ஊமை போல உள்ளத்துள்ளதை வெளியே கூறமுடியாது. இடுக்கட்படும் தலைவி யருக்கு இது சிறந்த உவமை யென்பது அவ்வனுபவம் பெற்றவர் இதனைக் காணுந்தோறும் காணுந்தோறும் உணருவர். யாம் விரித்தல் வேண்டா.

அடுத்து, கம்பநாடர் காட்டும் உவமையும் ஒன்று இரண்டு இங்கேதருதல் நலம். அவர் காடு செல்லும் இராமனின் உள்ளத்தை உள்ளவாறே அறிந்து அதனைப் பாவுருவாக்கித் தந்துள்ளார். அது சீதையின் வாய்ப்பிறப்பாக அமையும்.

"மெய்த் திருப்பதம் மேவென்றபோதினும்
இத்திருத் துறந்தேகென்ற போதினும்
சித்திரத்தினலர்ந்த செந்தாமரையை
ஒத்திருக்கு முகத்தினை உன்னுவாள்."

இங்கே கேவலம் திரை மூன்றில் எழுதிய ஒரு பூவையே புலவர் குறிக்கின்றார். உண்மையானபூவைக் குறித்திற்றிலரே! ஏன்? அது கடம்பிமலரும் தன்மையுடைத்தாதலின். ஆனல் சித்திர கமலமோவெனின் என்றும் மலர்ந்தே தோன்றும்; எப்பக்கத்தில் நின்று திரையை நோக்கினாலும், அப்பக்கத் தையே அத்தாமரைமலரும் நோக்கி இதழ் விரித்து நகைப்பதுபோலிருக்கும். இன்பமும் துன்பமும் ஒன்றெனவுணரும் இராமனுக்கு காலை மலர்ந்து மாலை கடம்பும் மலர் ஒப்புமையாகாது. ஆதலின், திரைக்கமலம் இங்கே தோன்றிற்று.

அசோகவனத்தில் ஒருபுறமிருக்கும் மாதவிப் பொதும்பரைச் சீதாபிராட்டி அடைகின்றாள். உயிரை மாய்த்துக் கொள்வதே எண்ணம். ஊரெலாம் சுற்றி சுற்றில் அவ்வனம் எய்திய அனுமனும் அருகே நின்ற மரக்கொம்பொன்றில் மறைந்து பார்க்கின்றான். கழுத்தில் கொடியை மாட்டினாள் சீதை. திடீரெனக் குதித்தனன் அனுமன். தன்னை அறிமுகப்படுத்திக் கதையும் பல கூறிக் கணையாழியும் ஒன்று கொடுத்தனன். அப்பொழுது சீதையின் மெய்ப்பாட்டைக் கம்பர்:—

"இழந்தமணி புற்றரவெதிர்ந்த தெலானுன்,
பழந்தனமிழந்தன படைத்தவரை ஒத்தாள்,
குழந்தையை யுயிர்த்த மலடிக் குவமை
கொண்டாள்,
உழந்து விழிபெற்றதொரு உயிர்ப்பொறையும்
மொத்தாள்."

என்று ஒப்புமைகூறி மகிழ்ந்தார், இவ்வுவமைகளை இவர் மாத்திரமன்றி இளங்கோவரும், செயங்கொண்டாரும், திருத்தக்கதேவரும் எடுத்தாண்டிருப்பதை அவர் நூல்களை ஆராயும்போது காணலாகும். என்ன அழகும் பொருத்தமும் உடையன உவமை!

ஆனல், அதிவிரராம பாண்டியன், சிவப்பிரகாசர், ஒட்டக்கூத்தராதியோர் உரிய உவமையை உரிய இடத்தில் இட்டாரில்லை. அப்படி இட்டாராயினும் அவை பெரும்பாலும் பொருந்தாதன வாயே இருக்கும். ஒட்டரிட்ட உவமை ஒன்று இங்கே உதாரணமாகத் தரப்படுகின்றது.

'பாவகாதிகள் லோகபாலர் பரந்துவந்து
புரந்தரன்
சேவகாதிகள்போல நாலிருவேழமேறினர்
சேரவே."
[தக். 249]

என்று கூறும்பொழுது அக்கினி போன்றவர் குதிரையேற்றம் அறிவர் என்பதும் அவர் இந்திரர் சேவகர் போன்று ஏறினர் என்பதும் அறியக் கிடக்கின்றது. இந்திரன் சேவகர் குதிரை ஏறுவதை நாம் அறிந்திலேம். கண்டுமிலேம். இதனை அறிந்தாலன்றோ பாவகாதியர் ஏறும் முறையை மட்டிடலாகும். இனி, பாவகாதியரும் குதிரை ஏறுவரோ என்பது ஐயுறவே இப்பெயர்பட்டன உவமைகள் பலவுள!

(240-ம் பக்கம் பார்க்க.)

அவசியம் தெரிய வேண்டும்.

"முராரி"

நமக்கு என்னகுறைவு, நாம் ஹிந்துக்கள் அல்லவா! அதாவது சீனரைத்தவிர உலகிலேயே மிக மிகப் புராதனமான தொடர்புள்ள நாகரீகம் வாய்ந்தவரென்று மாக்ஸ்முல்லரும் இன்னும் டஜன் கணக்கான வெள்ளைக்காரரும் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்துச் சொல்லியதை நமது சொந்த சரித்திராசிரியர்களும், அரசியல்வாதிகளும், ஏனைய பண்டிதர்களும் சொல்லி ஊர்ஜிதப் படுத்தவில்லையா—பின் நமக்கென்ன குறைவு? என்று இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டு நம் முதுகைத் தட்டிக் கொள்ளலாம்—சற்று சிரமசாத்தியமான காரியம், இருந்தாலும் சொந்த ஆத்ம திருப்திக்காக ஏன் செய்து கொள்ளக்கூடாது? மீசையை முறுக்கிக் கொள்ளலாம்—இது சுலபம்—இம்மாதிரி எல்லாம் ஆஸ்வாஸப்படுத்திக் கொள்ளலாம் என்றால், சில சந்தேகங்கள், அவசியம் விடை தெரியவேண்டிய சில சந்தேகங்கள், தோன்றத்தான் தோன்றுகின்றன. ஜாபாலி–நக்கீரர் வாசனையோ என்னவோ, இச்சந்தேகங்கள் நம் ஆத்ம திருப்தியைச் சற்று ஹேளியாக்க எழும்புகின்றன; எழும்பி, தாண்டவமாடுகின்றன.

அன்று, தன் அப்பன் வீடு அலங்கோலமாயிருக்கிறதே என்று நாடெங்கும் ஓடி, தன் கையாலேயே, ஜீர்ணமான எல்லாக்கோவில் பிரகாரங்களில் பரவிய புல் பூண்டுகளைச் செதுக்கினாரே அப்பர். எங்கேயாவது, ஓர் இடத்திலாவது, இப்படிப்பட்ட பக்திமான் தான் என்று, ஒரு கல்வெட்டாவது பதித்து வைத்தாரா? இப்பொழுது கவனிப்போம். அதே கோவிலுக்குப் போட்டியாக ஒருமண்டபமாத்திரமன்று, நான்கு ஐந்து மண்டபங்கள் கட்டி, அதுவும் குழந்தைகளும் பெரியவர்களும் பார்த்த மாத்திரத்திலேயே 'ஆஹா, என்னஜோர்! பளபளவென்று சலவைக்கல் மாதிரியேயிருக்கிறது,' என்று கைக்கொட்டிப் பரவசமடையும்படி அம்மண்டபங்களைக் கட்டி, அம்மண்டபங்களைக் காட்டிலும் சற்றே சிறியதாக ஒரு கல்வெட்டையுமமைத்து, அக்கல்வெட்டிலும் "……………………….ருடைய ஆலயத்திருப்பணி" என்று வெளிப்படையாகவும் எழுதச் செய்கிறோமல்லவா? இது ஏன்?

முன்னொருநாள், தான் செல்வமாக வளர்த்தபெண்குழந்தை சூடிக்கொடுத்த நாயகனைத் தேடிச்சென்றுவிட, பிரிவாற்றாமல்,

"ஒருமகள் தன்னையுடையேன்
உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன்,
செங்கண்மால்தான்
கொண்டுபோனான்".

என்றுமாத்திரம் சொல்லி நிறுத்திக் கொள்ளவில்லையா, பெரியாழ்வார்? யாரையாவது இழக்கத்தகாதவரை இழந்தால், "பரிதவித்தோமே" என்றும், "கையை பிசைந்தோமே" என்றும், நாம் ஏனோ விவரிக்கிறோம்?

வாழ்வில் காட்டும் இந்த அயர்வை இலக்கியத்திலும் நாம் இப்பொழுது காண்பிக்கிறோம். எல்லோரும் வணங்கத்தக்குந்த வால்மீகி, தசரதன் இறந்து கிடக்கும்பொழுது விடியுற்காலையில் வந்திகள் வழக்கப்படி சாவறைக்கு வெளியில் பாடினர் என்று, மீளாத்துயரத்தைச் சொல்லாமல் சொல்லிக்காண்பிக்கிறார். ஆனால் நாமோ, "கதாநாயகன் இறந்தவுடன், அவன் ஆருயிர்க்காதலி அழுதாள், அழுது புரண்டாள்" என்று எழுதுகிறோம். இப்படி எழுதினால் உள்ளத்தை ஊடுருவிப்பாயுமாவென்று நாம் சற்றுக்கருதவேண்டிய விஷயமல்லவா?

சாதாரண ஜனங்களின் உயிர்களுக்கு பூர்ண யுத்த அபாயப் பாதுகாப்பு.

இதனால் சம்பந்தப்பட்ட எல்லா ஜனங்களுக்கும் : : : : **ஹிந்துஸ்தான்** தெரிவித்துக்கொள்வதாவது.

இச்சொஸைட்டியில் தங்கள் ஆயுளை இன்ஷ்யூர் செய்து கொண்டவர்கள் இந்தியாவில் வசிப்பவர்களாயிருந்தால், விமானத் தாக்குதல் உள்பட எதிரி நடவடிக்கையினால் ஏற்படும் மரணத்திலிருந்து பூர்ண பாதுகாப்பு அளிக்கப்படுகின்றது. இந்தியாவில் ஏ. ஆர். பி. சர்வீஸ்களில் மெம்பராக சேர்ந்திருந்தால், அதனால் ஸிவிலியன் தன்மை பாதிக்கப்படவில்லை; அப்படி அவ்வேலைகளில் ஈடுபட்டாலும், விமானத் தாக்குதல் உள்பட ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பூர்ண பாதுகாப்பு அளிக்கப்படுகின்றது.

ஹிந்துஸ்தானில் ஒரு பாலிஸி எடுத்துக்கொள்ளுவதுதான் உங்களுடைய விமான அபாய காலத்தில் பதுங்குமிடம், சுரங்கம், மணல் மூட்டை, அதிர்ச்சியைத் தடுக்கும் சுவர் இவை அனைத்தும் இது ஒன்றில் அடங்கியுள்ளது.

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொஸைட்டி லிட்.

மதராஸ் பிராஞ்சு:
7/67, ஜெயில் ரோடு.
கோயம்புத்தூர்.

தலைமை ஆபீஸ்:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்,"
கல்கத்தா.

ஒருபொழுது, தருமபுத்திரர் தம்பியர் நால்வரையும் நச்சுப்பொய்கையிலிழந்த தருணத்து, யக்ஷனின் கேள்விகளுக்கு சத்தியமே உருவாக, சாந்தமாக இவ்வாறு பதிலளித்தார்: "தருமம் என்பது யாது என்று சாஸ்திரச் சர்ச்சையிலிறங்கினால் ஒன்றும் சரியாக விளங்கவில்லை, வெகு ஜனங்கள் எதைத் தருமமென்று ஒப்புக்கொள்ளுகிறார்களோ அதுவே தர்மம்." ஆனால் நமக்குமாத்திரம் எல்லாம் விளங்குகின்றன போலும். ஏனென்றால் யாராவது இப்பொழுது அந்த யக்ஷன் மாதிரி அதிகப்பிரசங்கித்தனமாகக் கேள்விகள் கேட்டால், "சரிதான், போ, நீ ரொம்ப மேதாவி; வஸிஷ்டரே இப்படிச் சொல்லியிருக்கையில், நீ யார் கேள்வி கேட்கிறவன்" என்று நாம் அடக்குகிறோம். கேட்பவரும் 'வஸிஷ்ட உவாச' என்று நாம் சொன்னதுமே, இடி கேட்ட நாகம்போல் பெட்டியிலடங்கி விடுகிறார். தர்மபுத்திரருக்கு விளங்காத வஸிஷ்டர் நமக்கு விளங்குகிறார். இது என்?

"பொருள் புலப்படாத பிரஸித்தமான ஸ்மிருதியைப்போலவுமிருந்தாள் சீதை, அசோகவனத்தில்" என்று வர்ணிக்கிறார் வால்மீகி. ஆனால், நமக்கோ, பொருள் புலப்படாத ஸ்மிருதி ஒன்றுமில்லை. பார்க்கப்போனால், கணக்கிலாப் பொருள்கள் புலப்படுகின்றன. பெண்களுக்குக் கல்யாண வயதைப்பற்றி ஆயிரத்து முன்நூற்று அறுபத்தேழு வியாக்கியானங்கள் அழுத்தமும் திருத்தமுமாக நமக்குக் கிடைக்கவில்லையா?

அன்று, பீஷ்ம பிதாமஹர் மாண்டார்; கன்னவள்ளல் மாண்டான்; தேவர்களுக்கினிய அபிமன்யு முன் சென்றான். நாம் வாழ்வதற்கு நாமோ, "சைதாப்பேட்டையில் கலவரம் போலிருக்காப் போலிருக்கிறது" என்ற வதந்தியைக் கேட்டவுடனே கதவை இறுக்கி மூடிக்கொண்டு, பின் செல்கிறோம்.

அவசியம் தெரியவேண்டும்:— நாம் ஹிந்துக்கள்தாமோ? முன் தொடர்புதான் அற்றுப்போயிற்றோ? அல்லது, ஒரு தலைமையாசிரியர் கூறுகிறபடி, நாம ஒரு மாபெரும் மக்களின் சுடுசாம்பல்தானோ? அப்படிச் சுடு சாம்பலாயின், ஆங்கிலக் கவி க்ரே (Gray) கூறியபடி, சுடு சாம்பலிலும் பண்டை உயிர்த்தளிர்ப்பு உளதோ..?

WANTED

A Secondary Grade trained teacher for the Markandeya Ashrama Elementary School, Tirukkadaiyur. (Tanjore Dt.) One with vocational training or experience will be preferred.

Apply to:—

K. S. VENKATARAMANI,
43, Mahadana St, MAYAVARAM.

A Tamil vidwan with experience in proof reading and a working knowledge in English.

Apply to:—

The Manager,
"BHARATA MANI",
43, Mahadana St, MAYAVARAM.

உதிர்ந்த மணிகள்.

கைக்குத்தல் அரிசி சாப்பிட்டால்:—

கைக்குத்தல் அரிசி உபயோகிப்பதால் ஏற்படும் நன்மைகளைப்பற்றி சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுவதாவது:—

கைக்குத்தல் அரிசியால் இரு நன்மைகள் ஏற்படுகின்றன. ஒன்று, உடல் வளத்திற்கு ஏற்ற அரிசியைக்கொடுப்பது. இரண்டாவது, நிறைக்கு நிறை 6 சத விகிதம் அதிக அரிசி கிடைப்பது. இப்படியே கணக்கிட்டுப் பார்த்தால், மெஷினில் குத்தும் நெல் எல்லாவற்றையும் கைக்குத்தலாகக் குத்தினால், நமது ராஜதானியில் 200,000 டன் அதிக அரிசி சாப்பாட்டிற்குக் கிடைக்குமென்றும், இது நமது அரிசிக் குறைவுப் பிரச்னையை சிறிது தூரம் தீர்க்கும் என்றும் ஏற்படுகிறது.

இதுமாத்திரமல்ல, நல்ல ஊட்டம் அளிக்கக்கூடிய அரிசிசாப்பாட்டிற்கு இன்னும் சில தானிய வகைகளைச் சேர்த்துச் சாப்பிடவேண்டியதவசியமாகிறது. சோளம், கம்பு, கேழ்வரகு, தினை முதலிய தானிய வகைகளை போதுமானவளவில் சேர்த்துக்கொண்டால் போஷாக்கு நிரம்பியதும், உடல் ஊட்டத்திற்கு இன்றியமையாததொரு ஆகாரமாகவும் ஏற்படுகிறது. மில் அரிசி சாப்பிட ஏற்படுகிறபொழுது, அரிசிக்குப் பதிலாக 5 ஔன்ஸ் அளவு சோள வகையரு தானியங்களைச் சேர்த்துக் கொள்ளுவதால் தேக வளர்ச்சிக்கு வேண்டிய இன்றியமையாத வஸ்துக்கள் சேர உதவுகிறது. வடசர்க்கார் பிரதேசங்களில் மில் அரிசிக்குப் பதிலாக இந்த ஆகாரத்தை பரீக்ஷித்ததின் பலனாக, ஆரோக்யம் அதிகரித்ததுடன், 'பெரிபெரி' என்ற கடும் வியாதியினும் குறைவு காணப்பட்டது. இதற்குக் காரணம், இத்தானிய வகைகளில் அதிக வைடமின் B இருப்பது தான்.

* * *

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோரும் ஆயிரக்கணக்காகவும் லட்சக்கணக்காகவும் நாட்டின் சுதந்திரத்துக்குத் தங்களுடைய உயிர்களைத் தியாகம் செய்கிறார்கள். தியாகம், தாளமுடியாத கஷ்டம்—இந்த உலைக்களங்களில் சீன தேசம் காய்ச்சப்பட்டு உலகத்திலேயே ஓர் பெரிய நாடாக வெளிவந்திருக்கிறது. இம்மறுபிறப்புக்குக் காரணம் சீனப்படைகளின் தளகர்த்தர் ஜெனரல் சியாங்கே ஷேக்குதான்.

ஏ. ஜி. கார்டினர்.

* * *

சீனத்தலைவர் சியாங்கே ஷேக்கைப் போல உலகிலிருக்கும் வீரர்களை நாம் விரல் மடக்கிக் கணக்கெடுத்துவிடலாம். அவர் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். பத்தொன்பதாவது வயதில் அவர் யுத்தப் பயிற்சிபெற ஜப்பானுக்குச் சென்றார். அங்கு சேனையிலும் சில வருஷங்கள் உழைத்திருக்கின்றார். சீனத்தை சுதந்திர பூமியாக்கிய டாக்டர் ஸன்யட்-ஸென் என்பவரை அவர் இங்குதான் சந்தித்தார். அவர்தான் ஜெனரல் சியாங்குக்குச் சுதந்திர உணர்ச்சி உண்டாக்கினார். அந்த சந்திப்பிலிருந்து சியாங் சீனத்தின் சுதந்திரத்துக்காகப் பாடுபட்டு வருகிறார். 1925-ல் டாக்டர் ஸன்யட்-ஸென் இறந்ததும் சியாங் சீனத்தின் தேசியப்படைக்குத் தளகர்த்தரானார்.

"இன்ஸைடு ஏஷியா"வில் கந்தர்.

232-ம் பக்கத் தொடர்ச்சி.

நம் நாட்டிலோ, இந்த முறை அனுவசியந்தான். மில் அரிசிக்கும் கைக்குத்தலரிசிக்கும் மூட்டைக்கு ரூ. 1–8–0 தான் விலையில் வித்தியாசம். இந்த அதிக விலைக்கு அரசாங்கம் ஈடு செய்துவிட்டால் மில் அரிசியை அதிகம் உபயோகப்படுத்த மாட்டார்கள்.

4. அரிசி மில்களை ஒழிக்கவேண்டும்.

அரசாங்கம் கடைசியாகச் செய்ய வேண்டியது என்னவென்றால், அரிசி மில்களையே நாட்டிலிருந்து ஒழித்துவிட வேண்டும். அதுதவிர வெளிநாட்டில் இருந்து மில் அரிசி இறக்குமதியையும் தடுக்கவேண்டும்.

இதற்கு அரசாங்கத்தார் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளாவிட்டால், கோடிக்கணக்கானவர்களின் ஜீவ உணவான அரிசியின் ஊட்டத்தை அழிப்பதில் பங்கெடுத்துக் கொள்பவர்களாவார்கள்.

235-ம் பக்கத் தொடர்ச்சி.

இனி, இக்கால, உவமை சிலவற்றை நோக்குவோம். ஆங்கிலமறிந்த தமிழ் வழங்கு புலவர் நாவில் புகுந்த பூக்கள் சிலவுள. அவை உரோசா, ஒக்கிட்டு, அல்லிராணி (Queen of the Night) முதலியன. இவை மெல்ல மெல்ல இலக்கியத்துள் புகுகின்றன. அக்கையும் தங்கையும்போல் உருள்வன சைக்கிளின் சில்லுகள் இரண்டும், என்றார் புலவர் தேசிகவிநாயகர்.

சிறிய குழந்தை ஒருத்தியைக் கூப்பிடுகின்றார் சுப்பிரமணிய பாரதியார். அவள் அங்குமிங்கும் விளையாடித் திரியல் வேண்டும், மதலைமொழி பொழிய வேண்டும், மாதாவை மகிழ்ச்சி செய்தல் வேண்டும், என்பது அவர் எண்ணம். அவளுக்குச் சுயாதீனமும் கொடுத்தல் வேண்டும். ஆதலின் அவளை ஒரு சிட்டுக் குருவிக்கு ஒப்பிட்டுவிட்டார் புலவர். அவருடைய கவிக்கண்களில் அவளைக் காணுந்தோறும் ஒரு குருவி பறந்தாற்போல் தோன்றிற்று. உண்மையாக அனுபவிக்கின்றார் புலவர்:—

"சின்னஞ் சிறு குருவி போலே—நீ
திரிந்து பறந்துவா பாப்பா," என்கிறார் அவர். [பாப்பா. 3]

இவ்வெண்ணமும் புத்துணர்ச்சியாலும் புதிய கதை தொடர்பாலுமே உதித்தது.

இனி, மருதக்கலம்பகாசிரியர் நண்பர் நடராசர் கீரை விற்கச்சென்ற வொருத்திக்கு நிகழ்ந்ததைக் கூறுகின்றார். இவள் காலையில் எழுந்து கீரைக் கடகத்தைத் தலையில் ஏர்த்து நடக்க இச்சோவிழுக்கும் இருளப்பன் கண்டான், காதல்மொழி சிலவற்றைக் கக்கிவிட்டான்! அவளுக்குக் கோபம் வந்துவிட்டது. தப்பித்துக்கொள்ளல் வேண்டுமென்று எண்ணிக்கொண்டு:—

"இன்னனகூறிக் காதலியம்பிய அவனைப் பார்த்து
தென்னையிற் புல்லுவெட்டச் சென்றவன் கதைபோலாச்சு."

என்கின்றாள். இவ்வுவமையும் தமிழற்குப் புதியதே. ஒருவன் களவொன்றை நினைத்துச்செல்ல, அது தற்செயலாகப் பிறருக்கு விளங்கியவுடனேதான் பிறிதொன்றற்குச் சென்றதாகக்கூறி பொய்சொல்லித் தவறி ஓடிவிட எத்தனிக்கும் தொழிலிற்கு இது பொருத்தமான உவமமாகும். இப்படியாக, உவமையிலும் பழையனவும், புதியனவும் பல இருப்பதை நாம் காண்கின்றோம்.